கோகுலம்

GOKULAM

அக்டோபர் 84 ரூ2





சுப்பிரமணிய சிவா

பிறந்தநாள்: 14-10-1884 மறைந்தநாள்: 23-7-1925



கோகுலம்

மலர்—2 இதழ்—9 1984 அக்டோபர் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

அருமைச் சிறுவர் சிறுமியரே!

'உலகம் போற்றும் உத்தமர்கள்' என்று நால்வரைப் போற்றுகிறோம். புத்தர் பெருமான், இயேசுநாதர், நபிகள் நாயகம், மகாத்மா காந்தி – இந்த நால்வரில் இருவர் பிறந்தது நம் இந்திய மண்ணிலே!

இத்தகைய மகான்கள் பிறந்த புண்ணிய பூமியிலே நாமும் பிறந்தோம் என்று பெருமைப்படுகிறோம். பெருமைப்படுவதோடு நின்றுவிடலாமா? மேன்மேலும், நம் தாய்த் திருநாட்டுக்குப் பெருமை சேர்க்க நம்மால் இயன்றதையெல்லாம் நாம் செய்ய வேண்டாமா?

சின்னஞ்சிறு வயதில், தேர்விலே கேட்ட ஒரு கேள்விக்கு, 'பொன்னைவிட உயர்ந்தது உண்மைதான்' என்று எழுதியவர் காந்தி மகான். 'உண்மையே கடவுள்' என்று அவர் கருதினார்; உலகுக்கு உண்மையின் பெருமையை இடைவிடாமல் எடுத்துரைத்தார்; கடைசி மூச்சு இருந்த வரை உண்மையையே கடைப்பிடித்து வந்தார். அவர் காட்டிய நல்வழிகளைப் பின்பற்ற இளமை முதலே நீங்கள் அனைவரும் முயற்சி செய்வீர்கள், அதன் மூலம் நாட்டின் நன்மணிகளாகத் திகழ்வீர்கள் என நம்புகிறோம்.

புதுமைப் போட்டியின் விடையை நீங்களெல்லாரும் மிக ஆவலாக எதிர்பார்க்கிறீர்கள் என்பது எங்களுக்குத் தெரியும். ஆயினும், இந்த இதழிலே முடிவை வெளியிட இயலவில்லை. அடுத்த இதழில் அவசியம் வெளியிடுவோம்.

அழ. வள்ளியப்பா




இந்த இதழ் எழுத்தாளர்கள்


எம். லலிதா


அ. திலகவதி


சௌந்தரா கைலாசம்


ஸ்ரீரங்கம் சித்ரா


என். செந்தில் குமார்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்


ஜி. கௌசல்யா


எஸ். வி. கௌரி


தி. யசோதா

பிருந்தாவனக் கவிஞர்கள்


கே. வெங்கடேசன்


இரா. சரவணன்


ஏ. ஆர். கதிரவன்


என். தனராணி

மின்மினிக் கதைகள்

மின்மினிக் கதைகள்

கிடைப்பதில் பாதி, பாதி!

புகழ்பெற்ற அரசராகிய கிருஷ்ணதேவராயரின் நடன மண்டபத்திலே கிருஷ்ண லீலா நாடகம் நடந்து கொண்டிருந்தது. அரண்மனை விகடகவியாகிய தெனாலிராமன் அங்கே வந்தால், ஏதேனும் கோமாளித்தனம் பண்ணி நாடகத்தை நடத்த விடாமல் செய்துவிடுவான் என்று நினைத்தார், கிருஷ்ணதேவராயர். ஆகையால், தெனாலிராமன் வந்தால் உள்ளே விடாதீர்கள் என்று வாயில் காப்பவர்களுக்கு உத்தரவிட்டிருந்தார்.

தெனாலிராமன் தந்திரசாலியல்லவா? அவன் ஒரு வயதான ஆடு மேய்ப்பவனைப் போல் வேஷம் போட்டுக் கொண்டு வந்தான். முதல் வாயிலில் காவல் காத்துக் கொண்டிருந்தவனிடம், ''அரசர் எனக்கு நிறைய வெகுமதி தரப் போகிறார். இன்று வரச் சொல்லியிருக்கிறார். எனக்கு எது கிடைத்தாலும், அதில் சரிபாதியை உனக்குத் தந்து விடுகிறேன்'' என்றான். காவல்காரன் உடனே தெனாலிராமனை உள்ளே போக அனுமதித்தான்.

இரண்டாவது காவல்காரனிடமும் இவ்வாறே கூறி, தனக்குக் கிடைப்பதில் சரிபாதி தருவதாக வாக்களித்து, நடன மண்டபத்துக்குள் சென்று விட்டான், தெனாலிராமன்.

உள்ளே சென்றவன், நேராக மேடைக்குப் போய், தன் கையிலிருந்த கோலால் கிருஷ்ணன் வேஷம் போட்டுக் கொண்டிருந்தவனை அடி அடியென்று அடித்தான். அவன் அலறித் துடித்தான்.

''எத்தனையோ கோபிகள் கிருஷ்ணனை அடித்திருக்கிறார்கள். அவற்றையெல்லாம் அவன் பொறுத்துக் கொண்டான். அப்படியிருந்தும், ஒரு சிறு கம்பால் அடித்ததற்கு இந்தக் கிருஷ்ணன் இப்படி அலறித் துடிக்கிறானே!'' என்று கேட்டான் ஆடு மேய்ப்பவன் வேஷத்திலிருந்த தெனாலிராமன்.

உடனே சபையிலிருந்த அனைவரும் 'கொல்'லென்று சிரித்தார்கள். கிருஷ்ணதேவராயருக்கு மிகுந்த கோபம் வந்து விட்டது. ''இந்த ஆடு மேய்ப்பவனுக்கு உடனே 24 சவுக்கடி கொடுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

உடனே தெனாலிராமன், தன் வேஷத்தைக் கலைத்து விட்டு, ''அரசே, நான் எனக்குக் கிடைப்பதை இருவருக்குச் சமமாகப் பங்கிட்டுத் தருவதாக வாக்களித்திருக்கிறேன். ஆகையால், தாங்கள் கொடுக்க இருக்கும் சவுக்கடியில் அரண்மனை முதல் வாயில் காப்பவனுக்குப் பன்னிரண்டும், இரண்டாவது வாயில் காப்பவனுக்குப் பன்னிரண்டுமாகப் பங்கிட்டுக் கொடுத்து விடுங்கள்'' என்று கூறித் தப்பித்துக் கொண்டான்!





அரசரின் சத்தியம்

கிருஷ்ணதேவராயர் போர்த்துகீசிய நாட்டிலிருந்து மாம்பழங்களைக் கொண்டுவந்து, அவற்றின் கொட்டைகளை அரண்மனைத் தோட்டத்தில் முளைக்கப் போட்டிருந்தார். அவை நன்றாக வளர்ந்து பழங்கள் தர ஆரம்பித்தன.

''இந்த மரத்துப் பழங்களை யாரும் திருடக் கூடாது. திருடினால், மரண தண்டனை விதிக்கப்படும்'' என்று அரசர் அறிவித்திருந்தார்.

கிராமத்திலிருந்து வந்திருந்த தெனாலிராமனின் மைத்துனன், ஒருநாள் அரண்மனைத் தோட்டத்திற்குள் புகுந்தான். மாம்பழங்களைப் பறித்துத் தின்னத் தொடங்கினான். அப்போது, காவலாளிகள் ஓடிவந்து அவனைப் பிடித்து, அரசர் முன்னால் கொண்டு போய் நிறுத்தினார்கள்.

இதைக் கேள்விப்பட்ட தெனாலிராமனின் மனைவி, ''ஐயோ, என் தம்பிக்கு மரண தண்டனை கொடுத்து விடுவார்களே! உடனே நீங்கள் போய் அவனைக் காப்பாற்றுங்கள்'' என்று தெனாலிராமனிடம் கெஞ்சினாள்.

தெனாலிராமன் அரண்மனைக்குச் சென்றான். அவனைக் கண்டதும், ''தெனாலிராமா, நீ இப்போது என்னிடம் என்ன கேட்கப் போகிறாய் என்பது எனக்குத் தெரியும். உன் விருப்பம் போல் நான் செய்யப் போவதில்லை. இது சத்தியம்'' என்றார் அரசர்.

உடனே தெனாலிராமன், ''அரசே, தங்கள் உத்தரவை மீறி என் மைத்துனன் மாம்பழம் திருடியது மாபெரும் குற்றம். ஆகையால், அவனைச் சும்மா விடக் கூடாது. அவனுக்கு மரண தண்டனை விதிக்க வேண்டும். இதுவே என் விருப்பம்'' என்றான்.

அரசருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை. தெனாலிராமன், 'நான் சொன்ன வார்த்தைகளை வைத்தே என்னை மடக்கி விட்டானே!' என்று நினைத்தார். வேறு வழியின்றி, ''சரி, இனி உன் மைத்துனன் இந்தப் பக்கம் தலைகாட்டவே கூடாது.'' என்று கூறி அவனுக்கு விடுதலை அளித்தார்.



பட்டுத் துணி மூட்டை

ஒருசமயம் ஒரிசாவிலிருந்து ஒரு பெரிய பண்டிதர் கிருஷ்ணதேவ ராயரைக் காண வந்தார். அவர், ''அரசே, உங்கள் அரண்மனைப் பண்டிதர்களில் என்னுடன் வாக்குவாதம் செய்யக்கூடியவர் யாரேனும் இருக்கிறார்களா? இருந்தால் நானே விவாதம் நடத்த ஏற்பாடு செய்யுங்கள்'' என்றார்.

அரசரும் 'சரி' என்றார்.

கிருஷ்ணதேவராயரின் அரண்மனைப் பண்டிதர்கள், ஓரிசாப் பண்டிதர் மிகவும் புலமை பெற்றவர்; பல பண்டிதர்களை மிக எளிதாக வென்றவர் என்று அறிந்திருந்ததால், அவருடன் விவாதம் செய்யப் பயந்தார்கள். இதை அறிந்த தெனாலிராமன், ''கவலைப்படாதீர்கள். இன்று நான் சொல்லுவது போல் செய்யுங்கள்'' என்றான்.

அன்று இரவு தெனாலிராமன் தலைமைப் பண்டிதர் போல வேஷம் போட்டுக் கொண்டு மற்றப் பண்டிதர்களுடன் ஓரிசாப் பண்டிதர் தங்கியிருந்த இடத்திற்கு வந்தான். வெறும் கையுடன் வரவில்லை; பட்டுத் துணி சுற்றிய ஒரு மூட்டையுடன் வந்தான்.


''இது என்ன மூட்டை?'' என்று கேட்டார் ஓரிசாப் பண்டிதர்.

''இது வெறும் மூட்டையல்ல; இதில் திலகாஷ்ட பந்தனம் இருக்கிறது. இதைப் பற்றி நாளை விவாதிக்கலாம். தயாராயிருங்கள்'' என்று கூறி விட்டுப் புலவர்களுடன் போய் விட்டான் தெனாலிராமன்.

'திலகாஷ்ட பந்தனமா! அப்படி ஒரு நூலா? என் வாழ்நாளிலே நான் கேள்விப்படாத பெயராயிருக்கிறதே!' என்று நினைத்தார் ஓரிசாப் பண்டிதர். அன்று இரவு முழுவதும் தூங்காமல் அதைப் பற்றியே யோசித்தார். ஒன்றும் புரியாததால், பொழுது விடிவதற்கு முன்பாகவே யாருக்கும் தெரியாமல் ஊரை விட்டே அவர் ஓடிவிட்டார்!

மறுநாள் விஷயமறிந்த கிருஷ்ணதேவராயர், ''ராமா, நீ வைத்திருக்கும் மூட்டைக்குள் என்னதான் இருக்கிறது? அவிழ்த்துக் காட்டு'' என்றார்.

மூட்டையை அவிழ்த்தான். ஒரு குச்சி கயிற்றால் கட்டப்பட்டிருந்தது. ''அரசே, வேறொன்றுமில்லை. எள்ளுக்கு இன்னொரு பெயர் திலகம். காஷ்டம் என்றால் காய்ந்த குச்சி. திலகாஷ்டம் என்றால் எள்ளுக்குச்சி. மகிஷம் என்றால் எருமை. மகிஷ பந்தனம் என்றால் எருமை கட்டும் கயிறு. எள்ளுக் குச்சியைக் கயிற்றால் கட்டி வைத்திருக்கிறேன். அவ்வளவுதான்! இதைப் புரிந்து கொள்ள முடியாமல், பாவம், அந்தப் பண்டிதர் கம்பி நீட்டிவிட்டாரே!'' என்றான். இதைக் கேட்டு அனைவரும் வயிறு குலுங்கச் சிரித்தார்கள்.



கிளிகளின் பக்தி!

கிருஷ்ணதேவராயர், சில கிளிகளை வளர்த்து வந்தார். அவற்றிற்கு, 'ராமா, கிருஷ்ணா, கோவிந்தா' என்ற வார்த்தைகளைச் சொல்லிக் கொடுக்க ஏற்பாடு செய்திருந்தார். அவை மிக நன்றாக அந்த வார்த்தைகளை உச்சரித்தன.

''ஆஹா! இந்தக் கிளிகளுக்குத்தான் எத்தகைய பக்தி! மனிதர்களிடம்கூட இத்தகைய பக்தியைக் காண முடியாதே!'' என்றார்.

உடனே அங்கிருந்த தெனாலிராமன், ''அரசே, நீங்கள் கொடுக்கும் பண்டங்களைத் தின்றுவிட்டு, நீங்கள் சொல்லிக் கொடுத்ததைத் திரும்பக் கூறுகின்றன. இக்கிளிகளுக்குப் பக்தி இருப்பதாகக் கூறுவது சரியில்லை'' என்றான்.

அரசர் அவன் சொன்னதை ஒப்புக் கொள்ளவில்லை. தெனாலிராமன், ''இவை பக்தியினால் இறைவனின் திருநாமங்களைக் கூறவில்லையென்பதை நிரூபித்துக் காட்டுகிறேன்'' என்று கூறிவிட்டு,

ஒரு பூனையைப் பிடித்து வந்து கூண்டுக்கு அருகிலே நிறுத்தினான். 'ராமா, கிருஷ்ணா, கோவிந்தா' என்று கூறிக்கொண்டிருந்த கிளிகள், பூனையைக் கண்டதும், இறக்கைகளைப் படபடவென்று அடித்துக் கொண்டு, 'கீச்கீச்'சென்று கத்தின.

''அரசே, உண்மையான... பக்தர்கள், தங்களுக்கு ஆபத்து வரும்போது, ஆண்டவனின் திருப்பெயர்களைக் கூறி அழைப்பதைத்தானே பார்க்கிறோம்! ஆனால், இவை சும்மா இருக்கும் போது ஆண்டவனின் பெயர்களைக் கூறுகின்றன. ஆபத்து வரும்போது 'கீச், கீச்' என்று கத்துகின்றனவே!'' என்றான்.

அரசருக்கு என்ன சொல்வதென்றே தெரியவில்லை.



தலை தப்பியது!

ஒருசமயம் கிருஷ்ணதேவராயருக்குத் தெனாலிராமன் மீது அளவு கடந்த கோபம் ஏற்பட்டது. தெனாலிராமனின் தலையை வெட்டும்படி காவலாளிகளுக்குக் கட்டளையிட்டார்.

தெனாலிராமன் அரசரைப் பார்த்து, ''அரசே, சாகப்போகும் என் ஆசை ஒன்றைத் தாங்கள் நிறைவேற்ற வேண்டும்'' என்றான்.

''அது என்ன ஆசை?''

''சாவதற்கு முன்பு, ஆற்றுக்குச் சென்று கழுத்தளவு நீரில் நின்று கொண்டு, சூரிய பகவானைப் பிரார்த்தனை செய்ய வேண்டுமென்பது என் ஆசை. பிரார்த்தனை முடிந்ததும், ''வெட்டுங்கள்'' என்பேன். அரண்மனைக் காவலாளிகள் என் தலையை வெட்டட்டும்.''


அரசர் 'சரி' என்று கூறி, தெனாலிராமனைக் காவலாளிகளுடன் ஆற்றுக்கு அனுப்பிவைத்தார். தெனாலிராமன் ஆற்றில் இறங்கிக் கழுத்தளவு நீரில் நின்று கொண்டான். காவலாளிகள் இருவரும் இருபுறமும் பளபளக்கும் பட்டாக் கத்திகளுடன் நின்றார்கள்.

தெனாலிராமன் சிறிது நேரம் சூரிய பகவானைத் தியானிப்பது போல் பாசாங்கு செய்தான். பிறகு, 'வெட்டுங்கள்' என்றான்.

முட்டாள் காவலாளிகள் வேகமாகக் கத்தியை வீசினார்கள். அதற்கு முன்பே, சட்டென்று தண்ணீருக்குள் தெனாலிராமன் மூழ்கிவிட்டதால், காவலாளிகள் வீசிய கத்திகள் தெனாலிராமனின் தலையை வெட்டவில்லை; ஒருவனின் கத்தி இன்னொருவன் தலையை வெட்ட, இருதலைகளும் அறுந்து ஆற்றிலே விழுந்தன.

மறுநாள் அரசர் மகிழ்ச்சியாக இருந்த சமயத்தில் தெனாலிராமன் வந்து, ''அரசே, நீங்கள் அனுப்பிய காவலாளிகள் சரியான முட்டாள்கள். அத்துடன் லஞ்சம் வாங்குவதில் வல்லவர்கள். அவர்கள் ஒருவருக்கொருவர் வெட்டிக்கொண்டு, என்னை உயிரோடு உங்களிடம் அனுப்பி விட்டார்கள்'' என்றான்.

—தெனாலிராமன் கதைகளிலிருந்து தொகுத்தவர்: **நம்பி.**



கிழமையும் கடமையும்

• சௌந்தரா கைலாசம் •

விடுமுறைக் கிழமை ஞாயிறு!
வீட்டில் ஒழுங்காய் நீயிரு!
துடுக்காய் ஒன்றும் பண்ணாதே!
துன்பம் யார்க்கும் எண்ணாதே!

திங்கட் கிழமை அடுத்தது!
செல்வாய் பள்ளி படித்திட!
சங்கத் தமிழை அறிந்திடு!
சற்றும் அயரா திருந்திடு!

அடுத்த கிழமை செவ்வாயாம்!
அன்புச் செயல்கள் செய்வாயே!
எடுத்த முயற்சி யாவையிலும்
இன்ப வெற்றி நீயடைவாய்!

மறுநாள் வருவது புதன்கிழமை!
மறவா திறைவனைத் தினம்தினமும்
உருகிப் பணிவாய் வாழ்வினிலே!
உனக்கொரு நாளும் தாழ்விலையே!

பின்னர் வியாழன் வந்திடுமே!
பெரியோ ருகச் சிந்தனைசெய்!
நன்மை செய்ய முந்தினையேல்
நல்லோர் பெருமை தந்திடுவார்!

வெள்ளிக் கிழமை பின்புவரும்.
வீணே திரிந்தால் துன்பம்வரும்.
பிள்ளை வயதில் கல்வியின்றேல்
பின்னர் உனக்குத் தொல்லைவரும்!

கடைசியில் வருவது சனிக்கிழமை!
கல்வியின் உயர்வை நினைத்திடுவாய்!
உடைமை உனக்குக் கல்வியடா!
உலகில் வேறே இல்லையடா!



கபீர்தாஸின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்டுவிட்டீர்களே!

● 'மரியாதை' என்ற சிறுகதையைப் படித்ததிலிருந்து பெரியவர்களை மரியாதையோடு மட்டுமல்ல; அன்போடும் அழைக்கிறேன். என்னை இப்படி அழைக்க வைத்த வசந்தா கோவிந்தன் அவர்களுக்கு நன்றி.

—சிவ. வேல்முருகன், கும்பகோணம்

● நல்மருந்தைத் தேனில் கலந்து புகட்டுவது போல் பொது அறிவு விஷயங்களைச் சுவைபட வழங்குகிறீர்கள் (ஒலிம்பிக்ஸ் துணுக்கைத்தான் சொல்கிறேன்.) 'திரும்பி வந்த குரங்கு' உவகை ஊட்டி உள்ளம் தொட்டது.

—அ. அன்பழகன், அந்தணப்பேட்டை..

● பானுசந்திரா எழுதிய 'ஆசிரியர் தெய்வம்' என்ற கவிதையைப் படித்ததும், நான் உண்மையிலேஆசிரியர்களைத் தெய்வங்களாக மதிக்கக் கற்றுக் கொண்டேன்.

--தி. ஞானக்குமார், கல்லுப்பட்டி.

● இவ்வளவு சிறப்பாக ஆசிரியரின் பெருமைகளை வேறு எவராலும் வெளிப்படுத்த முடியாது.

—பி. சுப்பையா, திருச்சி—14.

● இருளில் உள்ள விளக்கு தனது தனித்தன்மையைத் தெளிவாக உரைச்செய்கிறது. அதுபோல, 'கோகுலம்' ஒவ்வொரு இதழும் பல பத்திரிகைகளிலிருந்தும் விலகி, தனது சிறப்பு இயல்பை உணர்த்துகிறது. கோகுலத்திற்குத் திருஷ்டி பட்டு விடாமல், திருஷ்டி சுற்றிப் போடுங்கள்.

—கோகுலம் சிறுவர் மன்றத்தினர், காளாம்பட்டி.

● வட ஆர்க்காடு மாவட்டத்தைச் சேர்ந்த எனக்குத் தெரியாத பல விஷயங்களை லலிதா செல்லப்பாவும் மற்ற இளம் நண்பர்களும் உரையாடிய நிகழ்ச்சியின் மூலம் அறிந்து கொண்டேன்.

—வி. ஜெயவேலு, அத்திமலைப்பட்டு.

● 'விஞ்ஞான விளையாட்டு' பகுதியில் ஆங்கில எழுத்துக்களுக்கான சங்கேதக் குறிகளில் I என்ற எழுத்திற்கு (..) கட, கட என்பதற்குப் பதிலாக (...) கட, கட, கட என்று தவறாக உள்ளது.

—த. செந்தமிழ்ச் செல்வன், தந்தி அலுவலர், செங்கல்பட்டு—1.

•சார் தபால்!

● பிருந்தாவனக் கதையரங்கம், கவியரங்கமும் குன்றாத சுவையுடன் கூடிய கனி போன்று இனிக்கின்றன. ஜோக்குகள் நல்ல ஹி ஹி, ஹி...! 'ஒலிம்பிக் தாத்தா' கதை தோல்விகளைக் கண்டு மனம் தளரக் கூடாது என்பதை மிக அழகாக எடுத்துக் காட்டுகிறது.

—ஜி. சந்திரமௌளீசுவரன், (49)நெல்லை—1

● சிதம்பரம் கபீர்தாஸின் வேண்டுகோளை (ஆகஸ்ட் 84) ஏற்று, இந்த இதழிலே பெரியவர்களின் பிறந்த நாளுடன் மறைந்த நாளையும் வெளியிட்டிருக்கிறீர்களே, உங்கள் தொண்டு உள்ளம் வாழ்க!

—குமுதவல்லியரசு, நீடாமங்கலம்.

● 'ஒன்யராகஸாம்' பகுதி என்னைப் போல ஆரம்ப நிலையில் உள்ள ஓவியர்களுக்கு மிகவும் உதவியாக உள்ளது. தொடர்ந்துவெளியிடுங்கள்.

—ஜி. ராதாகிருஷ்ணன் (5356), மயிலாடுதுறை.

● 'ஸ்ரீமதி சுயம்வரம்', 'ஒலிம்பிக் தாத்தா ஓடுகிறார்' — இரண்டும் எங்கள் வீட்டிலுள்ள எல்லோரையும் மகிழச் செய்தன. சொல்லப் போனால், செப்டம்பர் மாத இதழ் அருமையிலும் அருமை.

—எஸ். சுசித்திரா (4979), சென்னை—92.

● வழக்கமாக ஒரு வண்ணப் படக்கதையைத் தரும் நீங்கள் இரண்டு தந்துள்ளீர்கள். படக்கதைகள் இரண்டும் மிகப் பிரமாதம். ஓவியர் விஜுவின் படங்கள் மிகமிக அருமை!

—சு. சேதுராமன், கோவை—5.

● 'கருணை விழிகள்' எழுதிய ஆர். பொன்னம்மாள் அவர்களுக்குத் தங்க மெடல் மட்டும் பரிசாகக் கொடுத்தால் போதாது. அவர்களின் கைகளுக்கு வைரத்தால் ஆன மோதிரம் பரிசாகக் கொடுப்பதே சாலச் சிறந்தது.

—ந. பொன்ராஜ் (3176), சமுதி.

● திரு. கமலவேலன் அவர்கள் எழுதிய 'தேடி வரும் தெய்வ அருள்' என்ற அருமையான கதையை என் மாணவர்களுக்குப் படித்துக் காட்டினேன். அருமையான நீதிக்கதை. மாணவர்களுக்குப் பயன்தரும் வகையில் அமைந்தது குறித்து மகிழ்ச்சி.

—கே. கனகமணி, திருச்சி—2.

● எங்கள் பள்ளிக்குக் 'கோகுலம்' இதழ் தொடர்ந்து வருகிறது. மாணவர்களின் சிந்தனையைத் தூண்டி அறிவை வளர்க்கக் கூடிய செய்திகள் பல உள்ளன. மாணவர்களுடன் ஆசிரியர்களும் விரும்பிப் படிக்கக் கூடிய வகையில் வெளியிட்டு வரும் தங்களுக்கு எங்கள் பள்ளி ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாக உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

-என். பி. இராதாபாய், தலைமைஆசிரியை: என்.எம்.எம்.சி.பிரைமரி ஸ்கூல், சென்னை—7.



கந்தசாமியின் உறுதி

ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

கந்தசாமி பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவன் அப்பா ஆறுமுகம் பஞ்சாலையில் வேலை பார்க்கிறார். எவ்வளவு வேலை இருந்தாலும், அதிகாலையில் பூஜை செய்வார். அப்பா பூஜை செய்யக் கந்தசாமி உதவி செய்வான்.

ஒருநாள் பெரியவர் ஒருவர் கந்தசாமி வீட்டிற்கு வந்தார். கந்தசாமியின் நடவடிக்கைகளில் அவர் திருப்தி அடைந்தார். அவர் கந்தசாமியைத் தம் அருகில் உட்காரச் செய்து சில விஷயங்களைக் கூறத் தொடங்கினார்.

''யாரும் தவறுகளைச் செய்யக் கூடாது. அறியாமல் செய்யக் கூடிய பிழைகளுக்கு மன்னிப்பு உண்டு. தெரிந்து செய்யும் பிழைகளுக்குக் கட்டாயம் தண்டனை உண்டு. நம்மை மேற்பார்வை செய்யும் மனிதர்களை ஏமாற்றிப் பிழைக்கலாம். ஆனால் இறைவன் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு இருக்கின்றான். அவன் உரிய காலத்தில் தண்டனை கொடுத்து விடுவான்.

''கெட்ட உணவு சாப்பிட்டால் உடனே வயிற்று வலி வரும். கொடிய கிருமிகள் உடலுக்குள் புகுந்தால், அவை வளர்ந்து பெருகி வரக் காலம் பிடிக்கும். அதுபோல இறைவன் சில பிழைகளுக்கு உடனே தண்டனை கொடுக்கிறான். சில பிழைகளுக்குக் காத்திருந்து தண்டனை கொடுக்கிறான். நீ என்றுமே தவறுகளைச் செய்யக் கூடாது. எப்பொழுதும் நல்லதையும் உயர்ந்ததையும் நினைக்க வேண்டும்; பேச வேண்டும்; செய்ய வேண்டும். ஒவ்வொரு செயலையும் கடவுள் பார்க்கிறார் என்ற உணர்வு இருக்கவேண்டும்.''

அந்தப் பெரியவருடைய பேச்சுக்கள் கந்தசாமியினுடைய மனத்தில் பசு மரத்தாணி போல் பதிந்தன. அக்



கருத்துக்களைத் திரும்பத் திரும்ப நினைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு ஆண்டுப் பரீட்சை வந்தது. கந்தசாமி எல்லாப் பாடங்களிலும் முதலில் வெற்றி பெறுவான். ஆனால், கணக்குப் பாடம் அவனுக்குச் சரியாக வராது. அதற்காக அவனுடைய வகுப்பாசிரியர்கூட வருந்துவார். அவனுக்காக முயற்சி எடுத்துத் தனியாகச் சொல்லிக் கொடுப்பார். இருந்தும் மிகக் குறைந்த மார்க்குகளே கிடைக்கும். அந்த ஆண்டு, கணக்குக் கேள்வித் தாளில் கேட்கப்பட்ட கணக்குகளில் கந்தசாமிக்கு மூன்று கணக்குகளே தெரிந்தன.

கந்தசாமி தெரிந்த மூன்று கணக்குகளையும் போட்டுவிட்டான். வேறு ஒன்றும் செய்யத் தெரியாமல் விழித்தான். மேற்பார்வையிடும் ஆசிரியர் வகுப்பு வாசலில் நின்று கொண்டிருந்தார். கந்தசாமிக்கு முன்னால் கண்ணன் அமர்ந்திருந்தான். அவன் கணக்கில் கெட்டிக்காரன். அவன் கந்தசாமி விழித்துக் கொண்டிருப்பதைப் பரிதாபமாகப் பார்த்தான். ஆசிரியருடைய கவனம் இல்லாமலிருப்பதை அறிந்தான். தன்னுடைய விடைத்தாள்களைக் கந்தசாமியிடம் கொடுத்துப் பார்த்து எழுதச் சொன்னான்.

கந்தசாமி ஒரு நிமிஷம் கூட யோசிக்கவில்லை. அந்த விடைத்தாளைக் கண்ணனிடம் கொடுத்து விட்டான். கண்ணன் எவ்வளவோ வற்புறுத்தியும் ஜாடை காண்பித்தும் மறுத்துவிட்டான்.

தேர்வு முடிந்து எல்லோரும் வெளியே வந்தார்கள். கண்ணன் கந்தசாமியை நோக்கி, ''முட்டாளே, நீ ஒரு நாளும் உருப்பட மாட்டாய். ஆசிரியர் நம்மைக் கவனிக்கவில்லை. மேலும் நீ தவறு செய்ய மாட்டாய் என்ற நம்பிக்கை அவருக்கு உண்டு. என்னைப்பார்த்து எழுதுவதற்கென்ன?'' என்று கோபமாகக் கேட்டான்.

கந்தசாமி உறுதியான குரலில் கூறத் தொடங்கினான்: ''கண்ணா, ஆசிரியருக்கு என் மேல் நம்பிக்கை உண்டு என்கிறாய். அந்த நம்பிக்கைக்கு நான் துரோகம் செய்யலாமோ? மேலும், நாம் நம்பிக்கையானவர்கள் என்று ஆசிரியர் கருதிக் கொண்டிருக்கிறார். அதனால் மேற்பார்வை செய்வதை நிறுத்தி இருந்தார். அதை நாம் குலைக்கக் கூடாது. கணக்குத் தெரியாவிட்டால் என்ன? இன்னும் நன்றாக முயற்சி செய்து தெரிந்து கொள்ளலாம் அல்லவா? மேலும், நம்முடைய ஒவ்வொரு செயலும் கடவுளால் கவனிக்கப்படுகின்றன. அவர் அறியாமல் நாம் எந்தச் செயலையும் செய்ய முடியாது. ஆகவே, நான் தவறான வழிக்குப் போக மாட்டேன்.''

இவ்வாறு இருவரும் பேசிக் கொண்டு செல்வதை வகுப்பாசிரியர் கேட்டுக் கொண்டே பின்னால் சென்றார். நடந்த சம்பவங்களையும் அவர் நன்கு அறிவார். சற்று விரைவாக நடந்து இருவரையும் தழுவிக்கொண்டார்.

அடுத்த ஆண்டு கந்தசாமி ஏழாம் வகுப்பிற்கு உயர்த்தப்பட்டான். கணக்கில் வெற்றிக்கான மார்க்கையும், மற்ற எல்லாப் பாடங்களிலும் அவன் வகுப்பிலேயே முதல் மார்க்குகளையும் பெற்றிருந்ததால் அடுத்த வகுப்பிற்குப் போக இடையூறு ஒன்றுமில்லை.

ஏழாம் வகுப்பு ஆசிரியர் கந்தசாமியை அழைத்தார். வகுப்பிற்குரிய புத்தகசாலையைநிர்வகிக்கும்பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தார். கந்தசாமி மகிழ்ச்சியுடனும், பொறுப்புடனும் புத்தக விநியோகத்தை ஏற்றுக் கொண்டான்.

பாரதியார் பாடல்: (புதிய ஆத்திசூடி)
சொல்வது தெளிந்து சொல்

நேர்படப் பேசு
தூற்றுதல் ஒழி
நன்று கருது
புதியன விரும்பு

சிறுவன் 1: ''எங்க வீட்டிலே பெரிய அநியாயம்டா!''

சிறுவன் 2: ''என்னடா அது?''

சிறுவன் 1: ''தேன், நெய் ஊற்றக் சின்னக் கரண்டி மருந்து ஊற்றவும், விளக்கெண்ணெய் புகட்டவும் பெரிய சைஸ் கரண்டிடா!''



கருணை நெழிகள்



• ஆர். பொன்னம்மாள் •

"சொல்றேன். முதல்லே, நான் கான்வெண்டிலேதான் படிச்சேன். வகுப்பிலே கோபு, ஸ்ரீதர்னு ரெண்டு பசங்க ரொம்ப நல்லாப் படிப்பாங்க. டீச்சர் ஏதாவது கேள்விக் கேட்டா முந்திரிக் கொட்டை மாதிரி முந்திக்கு வாங்க'' என்று ஆரம்பித்துத் தொடர்ந்து கூறினான் பாபு.

''என் இங்கிலீஷ் உச்சரிப்பு தப்பா யிருக்கும். வகுப்பு முடிஞ்சதும் அதைச் சொல்லி என்னைக் கேலி பண்ணு வாங்க... அதுவும் நேரடியாப் பண் ணினாக்கூடத் தேவலை... இது சரியா, அது சரியான்னு என்னைக் கேட்பாங்க. வகுப்பிலேயே எல்லோர் முன்னாலேயும் மடக்கினாங்க... எரிச்சல் வந்தது... பழி வாங்கினேன். எப்படித் தெரி யுமா? பரீட்சை நேரத்திலே அவுங்க நோட்ஸ் தொலைஞ்சு போகும், ஜாமெண்டரி பாக்ஸ் இருக்காது. முக்கியமான பாடத் தாள்கள் கிழிக்கப் பட்டிருக்கும். என் மேல சந்தேகம் வந்து புகார் பண்ணினாங்க... அப்பா வந்தார். அடிச்சார். சண்டை போட் டார். அப்புறம் பொறுக்க முடியாமே ஸ்கூலை விட்டே நிறுத்திட்டார். அப் புறம்தான் இங்கே சேர்ந்தேன். இங்கே என்னை விட மட்டமும் இருக்கே... அதனாலே மட்டமாப் படிக் கறவங்க, எனக்குக் கீழ்ப்படியறவங்க, தாளம் போடறவங்களைத்தான் நண்பர் களாச் சேர்த்துக்கிட்டேன். அதே சமயம் பிறத்தியாரைக் கேலி செய்து அழ வைக்கிறதும் ஒரு பொழுது போக்காய்ப் போச்சு... எனக்கு மேலே மார்க் வாங்கறவனைக் கண்டாலும் பிடிக்காது. இந்தக் குணத்துக்கு மத்த வங்க தூபம் போட்டாங்க... அந்தப் பாவம்தான் காலும் உடைஞ்சு, கண்ணும் குருடா இருக்கேன்...''

''சரி, போதும் போ... காலு சரி யாகிண்டே வரது... கண் புண் ணும் ஆறியாச்சு. பரீட்சை நெருங்கி யாச்சு. பழைய கதை எதுக்கு... கணக்குப் போடலாமா?''

மோகன் புத்தகங்களைப் பரப்பிக் கொண்டு உட்கார்ந்தான்.

* * *

டியூஷன் வாத்தியார் கண்ணில் படாமல் இத்தனை நாள் ஓட்டியா யிற்று. பரீட்சை ஹாலில் அப்படி முடியாது. பாபுவுக்காக மோகன் பரீட்சை எழுதினால், ராமு, தினகர் போன்ற வகுப்பு மாணவர்கள் மோகனை அடையாளம் கண்டு கூப்பிட்டால்.... வத்தி வைத்து விட்டால்....... என்ற சந்தேகத்தை எழுப்பினான் மோகன்.

முன்பின் தெரியாத வேறொரு பெண்ணை ஏற்பாடு செய்தார் ராம பத்ரன். மோகனுக்கு விரலில் நகச் சுற்று, விரல்வீங்கி வேதனை என்று பாபுவிடம் சொல்லப்பட்டது.

''இது ஒரு அபசகுனமோ? உன்னால் தான் நான் பரீட்சை எழுதவே முன் வந்தேன். நான் பெயிலாகி விடு வேனோ.... வருகிற பெண் உன்னை மாதிரி என்னைப் புரிந்துகொண்டு கணக்குப் போடணும்.... என்னமோ, போ... ஒண்ணும் பிடிக்கலே.... ஒரு வேளை கண் பொருத்தறதும் கடைசி நேரத்தில் இப்படித்தான் தடைப் படுமோ!'' இப்படிப் புலம்பிக்கொண்டே மோகனின் போலிக் கைக்கட்டைத் தடவி விட்டான் பாபு. ''பரீட்சை சமயத்திலே மனசை வீணாகக் குழப்பிக் காதே பாபு... என்னைச் சொல்லுவியே குறிப்பிட்ட கணக்கு, படிப்பு, வீட்டுப் பாடம் இல்லாவிட்டாலும் நீ பொது அறிவை நிறைய . வளர்த்துண்டிருக் கேன்னு.... அது மாதிரி இதர இடங் களுக்குப் போக முடியாததாலே, இதர நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியாததாலே உன் கவனம் பூரா படிப்பிலே இருக்கு... ரொம்ப சீக்கிரம் மனப்

பாடமாயிடுத்து. உச்சரிப்பெல்லாம் எவ்வளவு தெளிவா இருக்கு தெரியுமா? ஸ்கூல் பஸ்ட் ரேங்க் வாங்கப் போறே! பாரேன்.''

''உன் ஊக்கமான வார்த்தைகள் தான் எனக்குத் தெம்பு.... மதன்... இப்போதெல்லாம் ராத்திரி ஏண்டா வருதுன்னு இருக்கு. பரீட்சை முடியற வரையாவது என் கூடவே இரேன்'' கெஞ்சுவது போல் கேட்டான் பாபு.

டாக்டர், பாபுவின் பெற்றோர் எல்லோரும் இதையே வற்புறுத்தவும், பாட்டியும் 'நல்ல காரியத்துக்குத் தானே... இரு' எனவும் அரை மனத்துடன் சம்மதித்தான் மோகன்.

பாபுவை விடிகாலே எழுப்பி உட்கார்ந்து படிக்க வைப்பான். காலாண்டு, அரையாண்டு மாதிரித் தாள்களை வைத்து முக்கியமான வினாக்களை அலசுவான். இப்படியாகப் பரீட்சை இனிது முடிந்தது.

மாலையில் டியூஷன் வாத்தியார் வந்த நேரம் வீட்டுக்குப் போய்ப் பாட்டியோடு பேசி விட்டு வருவான். கபாலி, ராமு எல்லோருமே அங்கு அந்த நேரம் கூடுவார்கள்.

''வாசுவின் மாற்றத்தைப் பார்க்க ரொம்ப ஆசையா இருக்குடா... உன்னை அவன் துளிக்கூட அடையாளம் கண்டு பிடிக்கலையா?''' என்று ஆச்சரியப் படுவான் ராமு.


''நீ வாய் தவறி மோகன்னுகூப் பிட்டுடுவே... அவனுக்குக் கண் வந்த பிறகு பார்க்கலாம்'' என்று தடுத்து வந்தான் மோகன்.

''பாரேன்... கடவுளோட செயலை.! வாசு இருந்தா என் விஷயம் அம்பலமாயிருக்கும்னு நினைச்சேன்... வாசு விபத்திலே மாட்டிக்கிட்டான். தினகருக்கு டைபாய்டாப் போச்சு. மத்தவங்களுக்கு டியூஷன் விவகாரம் தெரியாது. ஒருமாதிரி அவமானப் படாம சமாளிச்சுட்டேன். உன் புத்திமதிப்படி நல்லாவும் படிக்கிறேனில்லே...எல்லாம்மறைஞ்சு போச்சு. தினகர்கூட மாறிட்டான். அப்பா நீ வரலையேன்னு ரொம்ப வருத்தப்பட்டார்'' என்றான் ராமு.

''நேரமில்லேன்னு சொல்லு.பரீட்சை ஹால்லே வாசுவோட பேசினா தப்பித் தவறிக்கூட என் விஷயத்தைப் பேசாதே!'' இப்படி ஒவ்வொன்றையும் நினைவு வைத்து எச்சரித்திருந்தான் மோகன்.

கபாலி வருத்தப்பட்டபோதுகூட ''கொஞ்ச நாள்தானே! பொறுத்துக்க... அதான் தினம் வரேனே!'' என்று ஆறுதல் சொன்னான்.

பரீட்சை முடிந்த அன்று பாபு கெஞ்சலாக, ''மதன், இன்னிக்கிமட்டும் என்கூட இரேன். இத்தனை நாள் தான் பரீட்சை, பாடம்னு கெடுபிடியா இருந்தோம். இன்னிக்கு ஓய்வாக இருப்பமே.... ட்யூஷன்கூடக் கிடையாது... என்ன?'' என்று கேட்கவும், மோகன் சம்மதித்தான்.



தோட்டத்துப் புல்வெளியில் வட்டமான மேஜை போட்டு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார் ராமபத்ரன்.

''ஐஸ் கிரீம் உனக்குப் பிடிக்குமா?'' என்றான், பாபு!

''ஓ, ரொம்பப் பிடிக்கும்'' என்று மோகன் சொல்வதற்குள் ராமபத்ரன் ''இரண்டு பீச் மெல்பாவும், இரண்டு ஃப்ரூட் சாலட்டும் கொண்டு வரும்படி பணித்தார். உற்சாகம் கரை புரண்டோடியது. மகனைப் பார்த்து மகிழ்ந்திருந்தனர் பெற்றவர்கள்.

பாபுவின் கால் கட்டு அவிழ்க்கப்பட்டு விட்டது. டாக்டர் அவனிடம் ஓடக் கூடாதென்று எச்சரித்திருந்தார்: கனமான பொருள்களைக் கொஞ்ச நாள் தூக்கக் கூடாது; ஆறு மாதத்திற்குப் பின் விளையாட்டுகளிலும் கலந்து கொள்ளலாம் என்று சொல்லி இருந்தார். ''இதோ லீவு விட்டாயிற்று. கண் மாற்றமும் கூடிய சீக்கிரம் நடந்து விட்டால் நிம்மதியாயிருக்கலாம்'' நன்றியோடு பெற்றோர் மோகனைப் பார்த்தனர்.

''மதன்... இன்னிக்கு ராத்திரியாவது நிஜமாகவே என்கூட இருப்பியா... இல்லே, தினம் போலப் போயிட்டு விடிகாலம்பற வருவியா?''

எல்லோரும் திடுக்கிட்டனர்.

''பாபு... வந்து...'' மோகன் தடுமாறினான்.

''மதன், எனக்குக் கண்ணுதான் தெரியாது... ஆனாக் காது செவிடில்லையே! முதல்நாள் பரீட்சையன்னிக்குப் பாதி ராத்திரியிலே பாத்ரூம் போகஎழுந்தேன். வேலைக்காரனை எழுப்ப வந்தப்ப உன் கட்டில்லே மோதி விழுந்துடாமலிருக்கக் கட்டிலிலே உட்கார்ந்தேன். உன் கால் பக்கம் தடவினா, காலைக் காணோம்! நல்லாத் தடவித் தடவிப் பார்த்தேன். ஆளே இல்லே! ரொம்ப நேரம் அதிர்ச்சியாயிருந்தது. ஏமாத்திட்டாய்னு புரிஞ்சிண்டேன். பாவம், உனக்கு உங்கப்பா அம்மாவோட இருக்கணும்னு ஆசை. நான் வற்புறுத்தினால் நீ என்ன பண்ணுவே! விடிகாலை கார் சப்தம் கேட்டது. நீ வந்து 'டீ தயார்'னு எழுப்பறப்போ நானும் தூங்கி முழிக்கிற மாதிரி நடிச்சேன். அப்புறம் தினம் நான் தூங்கிட்டேன்னு நினைச்சு நீ அப்பாவோட குசுகுசுன்னு பேசறதும்... கார் புறப்பட்டுப் போனதும் எனக்கு 'வெறிச்'சோன்னு இருக்கும். சதா இருட்டிலே இருக்கறவன் எப்படித் தூங்கறான்னு நீ கண்டே?''

மோகன் எழுந்து பாபுவின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

''என்னை மன்னிச்சுடு பாபு... சத்தியமா இன்னிக்கு உன் கூடவே இருக்கேன். காலையிலே எழுந்து, குளிச்சு டிபன் சாப்பிட்டுட்டுப் போறேன். சந்தோஷம்தானே? விடிய விடிய அரட்டை அடிப்போம்.'' நெகிழ்ச்சியுடன் சொன்னான் மோகன். அதற்கு பாபு, ''சரி,சரி. நான் சொன்னதைப் பெரிசா எடுத்துக்காதே! இப்போ நீ ஒரு வேடிக்கைக் கதை சொல்லேன்...'' என்றான்.

''ஒரு செட்டியார்... பெரிய வியாபாரம்... நிறையப் பணம். அதனாலே தம்முடைய ஒரே மகனைப் படிக்க விடல்லே. கடையிலே ஒரு பகுதியிலே உட்கார வச்சுட்டார். ஒருநாள் வெளியூரிலேயிருந்து ஒரு பெரும் புள்ளி வியாபாரம் பேச வந்தார். அவருக்கு ஊரைச் சுத்திப் பார்க்கணும்னு ஆசை. செட்டியாரிடம் சொன்னார். உடனே

வெளிநாட்டுப் பழமொழிகள்

மனிதன் தன் பையைப் பணத்தால் நிரப்புவதோடு நேர்மையாலும் நிரப்ப வேண்டும். —பார்சிப் பழமொழி.

கீழே விழுந்தவனைப் பார்த்துச் சிரிக்காதீர்கள். உங்கள் பாதையும் வழுக்கல், நிறைந்தவைதான்.

—ஜப்பானியப் பழமொழி.

வாக்குறுதி என்பதும் ஒரு வகையில் கடனே.

—ஆப்பிரிக்கப் பழமொழி.

வாழ்க்கை என்னும் நூலில் ஆழ்ந்த சிந்தனை என்ற மணிகளைக் கோர்த்து வைத்து இருப்பவனுக்கு வேறு ஜெப மாலை வேண்டியதில்லை.

—பாரசீகப் பழமொழி.

ஆசிரியர்களை அவர்கள் இருக்கும் பொழுது புகழ வேண்டும். வேலையாட்களை வேலை முடிந்தவுடன் புகழ வேண்டும். நண்பர்களை அவர்கள் இல்லாதபோது புகழ வேண்டும்.

—சயாம் பழமொழி.

தொகுப்பு: **எம். எஸ். சாந்தி**



செட்டியார் வேலைக்காரப் பையன் கிட்டே, 'இவர்களைச் சமுத்திரத்திற்குக் கூட்டிப் போகவும்' .என்று எழுதிக் கொடுத்து மகனிடம் அனுப்பிவைத்தார். கடைக்காரப் பையனுக்குத் தும்மல் வந்தது. தண்ணீர்பட்டு 'மு' அழிஞ்சு போச்சு. சின்ன முதலாளிக் கிட்டே —அதுதான் செட்டியார் மகன்கிட்டே கடைக்காரப் பையன் வியாபாரியை அழைச்சுக்கிட்டுப் போய்ச் சீட்டை நீட்டினான்.

பையன் என்ன பண்ணினான் தெரியுமா? அவன்தான் அரைகுறைப் படிப்பாயிற்றே! வியாபாரியை நேரே அழைச்சுப் போய் ஒரு சத்திரத்திலே கொண்டு விட்டுட்டான். இதனாலே அப்பனுக்கும், பிள்ளைக்கும் ஒரே சண்டை. வியாபாரி தன்னை அவமரியாதை பண்ணினதாக் கோபிச்சுண்டு போயிட்டார்.''

'ஓ'வென்ற சிரிப்புகள்!

பாபுவுக்குச் சிரித்துப் புரைக்கேற ஜானகி ஓடிவந்து உச்சந் தலையைத் தட்டினாள். இப்படியாக ஒரே கும்மாளம்தான்!

பாட்டியை விட்டு மோகன் தனியாகத் தூங்கும் முதல் இரவு இது தான். என்றாலும் பாபுவின் அன்பு வெள்ளம் அவனைத் திக்குமுக்காட வைத்தது.

* * *


உதய காலம். எங்கேயோ 'பால்' என்ற ஒரு வேலைக்காரியின் குரல்... மோகனுக்கு விழிப்பைத் தந்தது. பக்கத்தில் பார்த்தான். அவன் கைகளைத் தன் கைகளுக்குள் அடக்கியபடி பாபு உறங்கிக் கொண்டிருந்தான். அசைந்தால் அவன் தூக்கம் கலையுமே என்ற கவலை. அதேசமயம் தினம் எழுந்திருக்கும் பழக்கத்தினால் படுக்கையில் இருப்புக் கொள்ளவில்லை.

கிழே அலாரம் அடிக்கும் சப்தம். கூடவே போனும் கிணுகிணுத்தது. மெதுவாகப் பாபுவின் கையை நகர்த்தி விட்டு எழுந்து வந்தான் மோகன்.

அலாரத்தை நிறுத்திவிட்டு போன் பேசிக் கொண்டிருந்த ராமபத்ரன் முகத்தில் கலவரமும், கவலையும் தெரிந்தன.

''இதோ இப்பவே கூட்டிண்டு வரேன். ஆமா. இங்கதான் இருக்கான். டாக்டரோட வரேன்'' என்று பரபரப்பாகக் கூறினார்.

(அடுத்த இதழில் முடியும்.)



ஆலயத்தில் பாலன்

◄ தணிகை உலகநாதன் ►

செங்கற்பட்டை அடுத்த ஒரு சிற்றூரில், பாலன் கோகுலம் சிறுவர் சங்கம் நிறுவிய செய்தி நாளிதழ்களில் வெளிவந்தது. அதனை அறிந்த வெளியூரில் உள்ள சிறுவர் சிறுமியர் தங்கள் ஊரிலும் சிறுவர் சங்கம் தொடங்க விரும்பினர். அவர்கள் தொடக்க விழாவுக்குப் பாலனையே வருமாறு அழைத்தனர். விடுமுறை நாட்களில் பாலன் அவர்கள் விருப்பத்தை நிறைவேற்றத் தயங்கவில்லை.

செல்லுமிடமெல்லாம் அவன் கண்களில் படும் பிழையான சொற்களைத் திருத்தும் பணியிலும் சலிக்கவில்லை. தன்னை அழைக்கும் நண்பர்களையும் இந்தப் பணியில் ஈடுபடுமாறு வேண்டிக் கொண்டான்.

ஒரு நாள் பாலன் செல்லும் வீதி வழியில் அம்மன் கோயில் ஒன்று இருந்தது. கோயிலுக்கு வெளிப்புறத்தே 'அன்பர்கள் வருக! அன்னை அருள் பெருக!' என்று ஒரு பலகையில் எழுதப்பட்டிருந்தது. அதைக் கண்ட பாலன், 'என்ன இது! தெய்வங்கள் குடியிருக்கும் கோயிலிலும் தெய்வத் தமிழைப் பிழையாக எழுதுகிறார்களே' என்று மனம் வருந்தினான். நேராகக் கோயிலுக்குள் புகுந்தான். அங்கு அறங் காவல் குழுத் தலைவரைக் (தரும கர்த்தா) கண்டு வணங்கினான்.

''வா தம்பி! அம்மன் தரிசனம் ஆயிற்றா? தேர்வில் வெற்றி பெறுமாறு அம்மன் அருளை வேண்டிக் கொள்'' என்று சொன்னார்.

''நன்றி ஐயா, அப்படியே செய்கிறேன். ஆனால் ஒரு வேண்டுகோள்''

''என்ன அது?''

'கோயில் வாயிலில் அன்பர்கள் வருக! அன்னை அருள் பெருக!' என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். என்னைப் போன்ற ஆயிரக்கணக்கான சிறுவர் சிறுமியரும், பெற்றோரும் இங்கு வந்து வழிபடுகிறார்கள். அம்மன் அருள்பெறுகிறார்கள். ஆனால் இதைப் படிக்கும் மாணவர்கள், இப்படித் தங்கள் கட்டுரையில் எழுதினால் தமிழில் எங்களுக்கு மதிப்பெண் குறைந்துவிடுமே!

''கோயில் சமையல் அறையை மடப்பள்ளி என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். மடம் என்றால் அறியாமை. இது அறியாமையைப் புகட்டும் பள்ளிக்கூடமா?''

''தம்பி! நீ சொல்வது புரியவில்லையே. சற்று விளக்கமாகக் கூறு, பார்க்கலாம்.''

''ஐயா, இங்குக் கோயில் கொண்டிருக்கும் காமாட்சி அம்மன் நமக்கெல்லாம் தாய் ஆவாள். அந்த அன்னையின் அருளை நாமெல்லாம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று தானே தாங்கள் விரும்புகிறீர்கள்? அப்படியானால், 'பெருக!' என்று எழுதலாமா? கூடாது. பெறுதல் என்றால் பெற்றுக் கொள்ளுதல். ஆகையால் பெறுக என்றே எழுத வேண்டும்.

''சமையலுக்கு மடை என்னும் பொருள் உண்டு. ஆகையால், மடைப் பள்ளி என்றே குறிப்பிட வேண்டும். பள்ளி என்பது இடம். சமைக்கும் இடம் என்பது பொருள்''

சிறுவன் பாலனின் விளக்கத்தைக் கேட்ட அறங்காவல் குழுத்தலைவர், ''தம்பி! நீ மிகவும் புத்திசாலிப் பையன், இதுவரை எவரும் இந்தப் பிழைகளைச் சுட்டிக் காட்டவில்லை. உன் அறிவைப் பாராட்டுகிறேன். நீ சொன்னபடியே நாளை, 'அன்னை அருள் பெறுக!' எனத் திருத்தம் செய்யப்படும், மடப்பள்ளி மடைப் பள்ளி ஆகும்'' என்றார்.

''மிக்க நன்றி ஐயா, வருகிறேன்.''

''இரு, இரு, தம்பி. இதோ கோயில் திருவமுது. இதைப் பெற்றுக்கொள்.''

''மிக்க நன்றி ஐயா, அம்மனையும் வழிபட்டுச் செல்கிறேன்'' என்று கூறி, பாலன் கோயிலை வலம் வந்து அம்மனை வழிபட்டுத் திரும்பினான்.

வழியில் ஒரு கூட்டம் நடந்து கொண்டிருந்தது. பாலன் கூட்டத்தில் வரவேற்புரை ஆற்றியவரின் பேச்சைச் சிறிதுநேரம் கேட்டுக் கொண்டே நின்றான்.

பேசியவர், அன்பர்களே! இப்போது நான் உங்கள் அனைவரையும் கேட்டுக் **கொல்வது** என்னவென்றால்...'' என்று தொடங்கினார்.

அவரது தவறான உச்சரிப்பைக் கேட்ட பாலன் ஆத்திரம் அடைந் தான். இப்படிச் சிலர் சரியான உச்சரிப் பில்லாமல் பேசுவது தமிழுக்கு இழுக் காகும் என்று எண்ணினான்.

உடனே மேடையின் அருகில் சென்று உரத்த குரலில், ''ஐயா, பேச்சாளரே, எல்லோரையும் கொல்வது என்று தான் முடிவு செய்து விட்டீர்களே! அதற்காக ஏன் கேட்டுக் கொல்ல வேண்டும்? கேளாமலே கொன்று விட லாமே!'' என்று மேடை அதிரும்படி உரத்த குரலில் பேசினான்.

சிறுவன் பேசியதைக் கேட்ட அவை யோர், 'கொல்'லென்று சிரித்தார்கள். அவர்களின் கை தட்டல் வானத்தை எட்டியது.

பேச்சாளர் பாலன் மீது ஆத்திரம் கொண்டார். என்றாலும், அவன் கூறி யது சரிதானே என்பதைச் சிறிது எண்ணிப் பார்த்தார்; அமைதியடைந் தார். மீண்டும் சமாளித்துக்கொண்டு, ''நான் உங்கள் அனைவரையும் கேட்டுக் கொள்வது என்னவென்றால்...'' என்று பேசத் தொடங்கினார். பாலனின் திறமையை அனைவரும் பாராட்டினர்.

பின்னர் பாலன் கடைத் தெருப் பக்க மாகச் சென்றான். அங்கு விளம்பரப் பலகைகளில் கண்ட பின்வரும் பிழை களைக் கடைக்காரரிடம் கூறித் திருத்தச் செய்தான்.


பிழை	திருத்தம்
ஆலையம்	ஆலயம்
இளநி	இளநீர்
எலை	இலை
காச்சல்	காய்ச்சல்
காத்தாடி	காற்றாடி
கேவுரு	கேழ்வரகு
சீயக்காய்	சிகைக்காய்
சுவற்றில்	சுவரில்
தீவாளி.	தீபாவளி
துகை	தொகை
பத்துவரவு	பற்று வரவு
வாளைப்பளம்	வாழைப்பழம்
வெத்திலை	வெற்றிலை
வைக்கல்	வைக்கோல்


என்று பிழைகள் திருத்தப்பட்டன. பாலன் புகழ் மூலைமுடுக்கெல்லாம் பரவி யது. அவன் படித்த பள்ளிக்கும் பெருமை சேர்ந்தது.

அடுத்த இதழில்:


- பொங்கி எழும் சிங்கங்கள்-3
- புதுமைப் போட்டி 1ன் விடை
- கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் மனு

திருக்குறள் புதிர்





மேலே உள்ள இரு படங்களையும் பாருங்கள். ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறளை நினைவூட்டும். இரு குறள்களையும் ஒரு தாளில் எழுதிக்கொள்ளுங்கள். பிறகு 92—ஆம் பக்கத்தைப் புரட்டி, நீங்கள் எழுதியுள்ளவை சரிதானா என்று பார்த்துக் கொள்ளுங்கள்.



மாவட்ட வினா விடை

கேள்வி கேட்பவர்: **தஞ்சை மணவழகன்**
பங்கு பெறுவோர்: **சாந்தி, இராமநாதன், வசந்தலட்சுமி**

மணவழகன்: நன்செய்யும், புன்செய்யும் கொஞ்சிக் குலவும் தஞ்சை மாவட்டத்தைப் பற்றி உங்களிடம் சிலவற்றைக் கேட்கப் போகிறேன். விடை சொல்கிறீர்களா?
சாந்தி, இராமநாதன், வசந்தலட்சுமி: உம், கேளுங்கள்; சொல்கிறோம்.
மணவ: தஞ்சை மாவட்டத்திற்கு ஒரு சிறப்புப் பெயர் உண்டே, தெரியுமா?
இராம: தென்னாட்டின் நெற்களஞ்சியம்.
மணவ: சரியான விடை. 'தஞ்சை' என்று சொன்னவுடனே, நம் நினைவுக்கு வருவது எது?
சாந்தி: தஞ்சைப் பெரிய கோயில்!
மணவ: இப்பெரிய கோயிலைக் கட்டியவர் யார்?
வசந்த: இராஜராஜ சோழன்.
மணவ: இராஜராஜ சோழனுக்குத் தஞ்சையிலே இப்போது ஒரு விழா எடுத்தார்களே, தெரியுமா?
சாந்தி: தெரியும். சதய விழா.
மணவ: இல்லை... இராமநாதன், உனக்குத் தெரியுமா?
இராம: இராஜராஜ சோழன் முடிசூடிய ஆயிரமாவது ஆண்டுவிழா!
மணவ: சரியாகச் சொன்னாய். தஞ்சைப் பெரிய கோயிலின் சிறப்பு அம்சங்கள் யாவை?
வசந்த: இதன் கோபுரம் 216 அடி உயரம் உள்ளது. ஆனாலும், கோபுர விமான நிழல் தரையில் விழுவதில்லை. இக்கோயிலில் ஒரே கல்லால் ஆன 12 அடி உயரமுடைய நந்தியும் இருக்கிறது.
மணவ: குடந்தை என்பது எந்த ஊரைக் குறிக்கிறது?
இராம: கும்பகோணம்.
மணவ: கும்பகோணத்திற்கு மிகப் பெரிய சிறப்பு ஒன்று உண்டு. அது என்ன?
சாந்தி: மகாமகம் திருவிழா அங்கு நடக்குமே, அதைத்தான்...
மணவ: ஆம், பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை மகாமகம் (மாமாங்கம்) திருவிழா நடைபெறும். பல இடங்களிலிருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வந்து மகாமகக் குளத்தில் புனித நீராடுவார்கள். கும்பகோணம் அரசினர் கல்லூரியில் தமிழ்ப் பண்டிதராயிருந்து, ஏட்டிலிருந்த பல சங்க நூல்களையும், பழைய காவியங்களையும் முதல் முதலாக நல்ல முறையில் அச்சிட்டுத் தந்தவர் யார் என்று தெரியுமா?
சாந்தி: தமிழ்த் தாத்தா டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் தானே?
மணவ: ஆம், அவருடைய சொந்த ஊர் எது?
மூவரும்: (மௌனம்).
மணவ: இந்த மாவட்டத்திலுள்ள உத்தமதானபுரம் என்ற ஊர்தான். சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவராகிய தியாகராஜருக்கு ஆண்டுதோறும் உற்சவம் நடக்கிறதே, அது எந்த ஊரில் என்று கூற முடியுமா?
இராம: திருவாரூரில்.
சாந்தி: இல்லை, இல்லை. திருவையாற்றில்தான்.
மணவ: சாந்தி சொன்னதுதான் சரி. திருவையாற்றில்தான் தியாகராஜரின் சமாதி இருக்கிறது. அத்துடன், திருவையாறு ஒரு புண்ணிய ஸ்தலம். அந்த ஊருக்கு அப்பெயர் எதனால் வந்தது?
வசந்தி: அந்த ஊரில் உள்ள இறைவன் பெயர் ஐயாறப்பர் அதனால் தான்...
மணவ: இறைவன் பெயர் ஐயாறப்பர் என்பது சரிதான். ஆனாலும், தஞ்

சையிலிருந்து திருவையாறு வரையில் ஐந்து ஆறுகள் இருக்கின்றன. மணிமுத்தாறு, வெண்ணாறு, வெட்டாறு - குடமுருட்டியாறு, காவேரியாறு. இப்படி ஐந்து ஆறுகள் இருப்பதால், ஐயாறெனப் பெயர் பெற்றது. ஐயாறு, 'திருவையாறு' ஆயிற்று. சரி, 'திருவேரகம்' என்றால் என்ன? யாருக்குத் தெரியும்?

வசந்த: அது என்ன ரகம்?

சாந்தி: நான் சொல்கிறேன். சுவாமி மலையைத்தான் திருவேரகம் என்கிறார்கள்.

மணவ: சரியாகச் சொன்னாய். அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையா வாழும் ஆறுபடை வீடுகளில் ஒன்று சுவாமிமலை. செயற்கையாய் அமைந்த மலைமேல் இங்கு முருகன் காட்சி தருகிறான். என்ன, நான் சொல்வது சரிதானே?

சாந்தி: இன்னும் பால் பண்ணை, சைக்கிள் பாக்டரி, இராஜராஜ சோழன் சிலை, பஞ்சு மில், பனியன் பாக்டரி, ஒரத்தநாடு கால்நடைப் பண்ணை...

மணவ: சரி, மகாத்மா காந்தி தென்னாப்பிரிக்காவிலே போராட்டம் நடத்திய போது இம்மாவட்டத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவரும் பங்கு கொண்டு உயிர் துறந்தாரே, அவர் பெயர் தெரியுமா?

சாந்தி: வள்ளியம்மை.

மணவ: ஆம். 'தில்லையாடி வள்ளியம்மை' என்று அவரைக் குறிப்பிடுகிறோம். தில்லையாடி என்ற ஊர் இம்மாவட்டத்தில்தானே இருக்கிறது? ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தர் பிறந்த ஊர் எது?

இராம: சீர்காழி.

மணவ: ஆம். சீர்காழிக் கோயிலின் உள்ளே திருஞானசம்பந்தருக்குத்

• சாந்தி



• இராமநாதன்



• வசந்தலட்சுமி



மூவரும்: (தலையாட்டுகிறார்கள்.)

மணவ: நீங்கள் பலமாகத் தலையாட்டுவதைப் பார்த்ததும் எனக்குத் தஞ்சாவூர்த் தலையாட்டிப் பொம்மை நினைவுக்கு வருகிறது. தஞ்சைக்கு வந்து செல்பவர்கள் இங்கிருந்து முக்கியமாக என்னென்ன பொருட்களை வாங்கிச் செல்வார்கள்?

இராம: தலையாட்டிப் பொம்மை, தஞ்சாவூர்த் தட்டு, தஞ்சாவூர்க் கதம்பம், குடை மிளகாய், நெட்டி மாலை, நெல்மாலை, முந்திரிப்பருப்பு. திருநெல்வேலியிலிருந்து போன வாரம் வந்த என் மாமாவும், மாமியும் இவைகளைத்தான் தேடிப் பிடித்து வாங்கினார்கள்.

மணவ: தஞ்சையில் முக்கியமாகப் பார்க்க வேண்டிய இடங்கள்யாவை?

வசந்த: பெரிய கோயில், அரண்மனை, சங்கீத மஹால், கலைக் கூடம், சிவகங்கைப் பூங்கா, தர்பார் ஹால், மிகப் பெரிய பீரங்கி.

மணவ: அவ்வளவுதானா?

தனியாக ஒரு கோயில் இருக்கிறது. இக்கோயிலில் சித்திரை மாதம் நடைபெறும் திருவிழாவில் அவர் ஞானப்பால் உண்ணும் காட்சியைக் காணலாம். எல்லா மதத்தினரும் சென்று காணுகின்ற இரண்டு முக்கிய ஸ்தலங்கள் இம்மாவட்டத்தில் உள்ளன. அவை யாவை?

சாந்தி: அன்னை வேளாங்கண்ணி மாதா கோயில், நாகூர்ஆண்டவர் கோயில்.

மணவ: சரி, இம்மாவட்டத்தில் துறைமுகம் உண்டா?

இராம: உண்டு. நாகப்பட்டினம்,

மணவ: பண்டைக்காலத்தில் காவிரிப்பூம்பட்டினமும் ஒரு துறைமுகமாக இருந்தது. காவிரிப்பூம்பட்டினத்துக்கு மற்றொரு பெயர் உண்டு, தெரியுமா?

சாந்தி: தெரியும், பூம்புகார்.

மணவ: பூம்புகாரின் பெருமைக்குக் காரணம் யாது?

வசந்தி: கோவலன் கண்ணகி வாழ்ந்த ஊர் இது. சிலப்பதிகாரத்தில் சிறப்

பார்கப் பாடப்பெற்ற ஊர் இது. பூம்புகார் கலைக் கூடம் இங்கு இருக்கிறது. கண்ணகிக்கு அழகான ஒரு சிலையையும் வைத்திருக்கிறார்கள்.

மணவ: பூம்புகாரில் கடலுடன் வந்து கலக்கும் ஆறு எது?

இராம: காவிரியாறு.

மணவ: தஞ்சை மாவட்டத்தில் காவிரியாற்றின் குறுக்கே ஓர் அணை கட்டப்பட்டிருக்கிறது. அதன் பெயர் என்ன?

சாந்தி: கல்லணை

மணவ: கல்லணையைக் கட்டியவர் யார்?

வசந்தி: கரிகால் சோழன்.

மணவ: 'சோழ நாடு சோறுடைத்து' என்பதை மெய்ப்பிக்கும் அணை தான் கல்லணை. தஞ்சை மாவட்டத்தின் பெருமையை மேலும் உயர்த்தியுள்ளது தமிழக அரசு. எதன்மூலம் என்று கூற முடியுமா?

சாந்தி: தமிழ்ப் பல்கலைக் கழகத்தைத் தஞ்சாவூரில் அமைத்திருப்பதன் மூலமாக.

மணவ: சரியாகச் சொன்னாய். தமிழ் மொழியில் புலமை பெற இம் மாவட்டத்தில் உள்ள வேறு வசதிகள் யாவை?

வசந்தி: கரந்தையிலுள்ள புலவர் கல்லூரி (கரந்தைத் தமிழ்ச் சங்கம்) திருவையாற்றில் உள்ள அரசர் (தமிழ்க்) கல்லூரி ஆகியவை, தமிழ்மொழியில் பட்டம் பெறுவதற்கு உதவுகின்றன.

மணவ: 'தமிழ்த் தென்றல்' என்பவர் யார்?

இராம: திரு. வி. கல்யாணசுந்தரனார்.

மணவ: சரியான பதில். திரு. வி. க. அவர்கள் பிறந்த ஊர் எது?

சாந்தி: திருவாரூர்.

மணவ: இல்லை. அவர் பிறந்தது செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள 'துள்ளம்' என்ற ஊரில். ஆனாலும், அவரது தாய், தந்தையர் திருவாரூரைச் சேர்ந்தவர்களே. அதனால் தான் அவர் தமது பெயருக்கு முன்னால் திருவாரூரைக் குறிக்க 'திரு' என்றும், தந்தையார் விருத்தாசல முதலியாரைக் குறிக்க 'வி' என்றும் வைத்துக் கொண்டார். இம்மாவட்டத்திற்குப் பெருமை தரும் தமிழறிஞர்களில் சிலர்: ந. மு. வேங்கடசாமி நாட்டார், உமா. மகேஸ்வரம்பிள்ளை, மாயூரம் வேதநாயகம் பிள்ளை.

சாந்தி: அடேயப்பா! இவர்களெல்லாம் நமது மாவட்டத்தில் பிறந்தவர்களா?

மணவ: அதோடு மட்டுமல்ல. தஞ்சை மாவட்டம் தரங்கம்பாடியில்தான் வீரமாமுனிவர் தமிழ் கற்றுக்கொண்டார். இன்னொரு சிறப்பும் இந்த ஊருக்கு உண்டு. அது என்ன தெரியுமா?

மூவரும்: (மௌனம்.)

மணவ: ஒருவருக்கும் தெரியாதா? ஜெர்மனியிலிருந்து வந்த தமிழ் எழுத்துக்களைக் கொண்டு, தரங்கம்பாடியில் ஒரு தமிழ் நூலை அச்சிட்டார் வீரமாமுனிவர். இந்தியாவில் அச்சிடப்பட்ட முதல் தமிழ் நூல் அதுதான்! தஞ்சைக்குச் சில தனிச் சிறப்புக்கள் உண்டு. அவை யாவை?

வசந்தி: பொய்க்கால் குதிரை நாட்டியம், தஞ்சாவூர் மேளம்.

மணவ: வீணை இங்கு சிறந்த முறையில் தயார் செய்கிறார்கள்... இந்த மாவட்டத்தில் பாடல் பெற்ற ஒரு காடு இருக்கிறதே, தெரியுமா?

சாந்தி: காடா? கேள்விப்பட்டதே இல்லையே!

மணவ: திருமறைக்காடுதான் அது. வேதாரண்யத்திற்கு மறு பெயர் அது. வெள்ளையர் ஆட்சியை எதிர்த்து இராஜாஜி உப்புக் காய்ச்சிய ஊர் இது. சுதந்திரப் போராட்ட வீரர் சர்தார் வேதரத்னம் பிறந்த ஊரும் இதுதான்.

இராம: அப்படியா?

மணவ: 'பராபரக் கண்ணி'யை இயற்றிய தாயுமானவரும், திருவிளையாடல் புராணத்தை எழுதிய பரஞ்சோதி முனிவரும் பிறந்த ஊர் இது.

சாந்தி: நம் மாவட்டத்திற்கு எத்தகைய பெருமை!

மணவ: ஒன்றை முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். கம்பராமாயணத்தை இயற்றிய கவியரசர் கம்பர் பிறந்ததும், நம் மாவட்டத்திலுள்ள தேரழுந்தூரில்தான்! இம்மாவட்டத்தில் பட்டு ஜவுளிக்குச் சிறந்த ஊர் எது?

சாந்தி: கும்பகோணத்திற்குப் பக்கத்திலுள்ள திருபுவனம்.

மணவ: பாத்திரத் தொழிலுக்கு...?

வசந்த: கும்பகோணம், திருநாகேஸ்வரம், நாச்சியார் கோவில்.

மணவ: இன்னும் எவ்வளவோ பெருமைகள் தஞ்சை மாவட்டத்துக்கு உண்டு. வினாக்களைக் கேட்டுக் கொண்டே போனால், கோகுலத்தில் இடம் வேண்டுமல்லவா? அதனால், இத்துடன் முடித்துக் கொள்வோம்.


மாலியும் ஜூலியும் 7
கருத்து : எம்.ஆர்.ராஜன்
ஏண்டா மாலி! சிம்லாவுக்கு உன் அப்பா போனாரே, என்னடா வாங்கி வந்தாரு?
ஜோரா ஒரு கம்பளிப் போர்வை வாங்கி வந்திருக்கார்டா!
அதைப் போர்த்திண்டு படுத்தா.. அடாடா.. குளிருக்கு ரொம்ப அடக்கமாயிருக்கும்! நல்லாத் தூக்கமும் வரும்!
மணி, உள்ளே வாயேன், அந்தப் போர்வையைக் காட்டுகிறேன்.. அம்மா, எங்கே அம்மா, மேஜை மேலே இருந்த சிம்லா கம்பளி?
என்னம்மா இது சோபாவிலே விரிச்சுக் கிடக்குது?
சும்மா கிடக்கல்லேடா, அதோ பார்!.. நம்ம ஜூலி தலை தெரியுது! அதைப் போர்த்திண்டு சுகமாத் தூங்கி யிருக்கு!

குழந்தைகளுடன் பிந்துகோஷ்!

அட்டைப்படக் கட்டுரை

பிந்துகோஷுக்கு அதிக அளவு ரசிகாகள் குழந்தைகள்தான்.

அவர் தியாகராயநகர் ரங்கையர் தெரு குடியிருப்பு ஒன்றில் சிறுவர், சிறுமியரைக் காண வந்தபோது குழந்தைகளுக்கு ஒரே கொண்டாட்டம். அவருடன் பேச ஒவ்வொன்றும் போட்டியிட்டன.

''உங்களுக்குப் பேரே பிந்துகோஷ் தானு?''

''இல்லே குழந்தே, என் ஒரிஜினல் பேர் கிருஷ்ணவேணி. டான்ஸ் மாஸ்டர் விமலான்னு மாத்தினூர். கங்கை அமரன் பிந்துகோஷ்னு மாத்திட்டார்!''

''நீங்க எந்த ஸ்கூல்ல படிச்சீங்க?''

''தாம்பரத்துல... அப்பக்கூட, பள்ளிக்கூடத்துக்குப் பக்கத்திலே இருக்கிற புளிய மரத்துக்குக் கீழே உக்காந்திருப்பேன். கீழே விழுற புளியங்காய்களை எல்லாம் சேகரிப்பேன். பள்ளிக்கூடம் விடறதுக்கு முன்னுலேயே வீட்டுக்குத் திரும்பிப் போயிடுவேன்!''

குழந்தைகள் இதைக் கேட்டுச் சிரிக்கிறூர்கள்.

''நீங்க எப்பவும் ஃப்ராக்கே போடுங்க. அதான் உங்களுக்கு நல்லாருக்கு!'' என்கிறது ஒரு பெண் குழந்தை.

''நீங்க பெரியவங்களா இருந்தாக்கூட, குழந்தை மாதிரிதான் இருக்கீங்க!'' என்கிறது இன்னென்று. பிந்துகோஷ் சிரிக்கிறூர்.

''தீபாவளி வருதே. பட்டாஸ் நிறைய வாங்கி வெடிப்பீங்களா.?''

''ஐ யை யோ... பட்டாஸ்னுலே எனக்குப் பயம்!'' என்கிறூர் பிந்துகோஷ். ''பட்டாஸ் கொளுத்தினு, சமையல் அறையிலே போய் ஒளிஞ்சுக்குவேன். மத்தாப்புக் கொளுத்தினுக்கூடக் காதைப் பொத்திக்குவேன்!''



குழந்தைகள் ஒரேயடியாகச் சிரிக்கின்றன.

''நீங்க எந்தப் படத்துல முதல்ல நடிச்சீங்க?'' என்று கேட்கிறுன் ஒரு பொடியன்.

''களத்தூர் கண்ணம்மாவிலே. கமல் அதுல 'அம்மாவும் நீயே, அப்பாவும் நீயே' பாடுவாரே, அந்த சீன்ல நானும் இருக்கேன்!''

''அடுத்த தடவை உங்க பையனேக் கூட்டிக்கிட்டு வாங்க!'' என்கின்றன குழந்தைகள்!

''ஆகா!'' என்கிறூர் பிந்துகோஷ்.

பிந்து கோஷின் ரசிகர் கும்பல் குழந்தைகள்தானே! ஒரு கதை சொல்லாமல் விடுவார்களா அவர்கள்?

—எந்த மாதிரிக் கதை வேணும் உங்களுக்கு? ராஜா — ராணிக் கதையா? யானே — சிங்கம் கதையா?

—ஒரு குண்டுப் பையன் கதை சொல்லுங்க! என்றனர் குழந்தைகள்.

—என்னேக் கிண்டலா பண்றீங்க? உங்களுக்குக் கதை சொல்ல மாட்டேன், போங்க! என்று பிந்துகோஷ் முதலில் பிகு பண்ணிக் கொண்டார். பிறகு, சரி... சரி... குண்டுப் பையன் கதையே சொல்றேன்! என்றூர். கொஞ்சம் யோசிப்பது மாதிரி இருந்தார். அப்புறம் கதை சொல்லத் தொடங்கினூர்.

—ஒரு ஊர்லே ஒரு பள்ளிக்கூடம். உங்க பள்ளிக்கூடம் மாதிரின்னு வச்சுக்குங்களேன். பணக்காரப் பசங்க, நடுத்தரப் பசங்க எல்லாரும் படிக்கிற பள்ளிக்கூடம் அது. எல்லாரும் யூனிஃபாரம் போட்டுக்கிட்டுத்தான் வரணும். ஆனு விலே உசந்த பேனு வச்சுக்கலாம்; பால்பாயிண்ட் பேனு எடுத்துக்கிட்டு வரலாம். வாட்சு கட்டிட்டு வரலாம்... என்ன, கதை கேக்கறீங்களா, தூங்கிட்டீங்களா?

—தூங்கலே, தூங்கலே... கதையைச் சொல்லுங்க!

—மத்தியானம் இண்டர்வெல் போது ராமு, தாமு, குப்பு, கப்பு எல்லாரும் வெளியே வந்தாங்க. நீங்க வாங்குவீங்களே ஐஸ்க்ரீம், கடலே உருண்டைன்னு... அது மாதிரி வாங்க, கொஞ்சம் லேட்டா வெளியே வந்



தாங்க... நல்ல வெய்யில்... தெருவுல யாரும் அதிக நடமாட்டம் இல்லே... ஐஸ் வண்டிக்காரர் ரொம்ப தள்ளிப் போயிட்டிருந்தார்... (ஐஸ் வாங்கினுங்களா, இல்லியா? என்று பரபரப்புடன் கேட்கிறுன் ஒரு பையன்.)

—அவசரப்படாதே.. கதையைக் கேளு... இதுல ராமு, குப்பு, சுப்பு எல்லாம் தடியுமில்லே; ஒல்லியுமில்லே. தாமு நல்ல குண்டு. அவனை எல்லாரும் குண்டு, குண்டுதாமுன்னு தான் கூப்பிடுவாங்க... சடுகுடு விளையாட்டுல யாரானும் தாமுகிட்ட மாட்டிக்கிட்டா அவ்வளவுதான்.... ஒரே அமுக்கு... குண்டுன்னு சாதாரணக் குண்டு இல்லே...

—உங்களை மாதிரி, என்றன குழந்தைகள்.

—ஆங், நான் சின்ன வயசுல குச்சி மாதிரி இருந்தேனும். இப்பத்தான் இப்படி... மேற்கொண்டு கேளுங்க. தாமு கொஞ்சம் குண்டுன்னேனு? அதனுலே அவனைத்தான் எதையாவது தூக்கி வைக்கணும்னு கிளாஸ்லே முதல்ல கூப்பிடுவாங்க.

(—சரி, ஐஸ் வாங்கப் போனவங்க என்ன ஆனுங்க? என்குர்கள் குழந்தைகள்.)

—ஆங்... இவங்களைப் பார்த்துட்டு, வெடவெடன்னு உசரமா ஒரு ஆளு, அவங்க கிட்ட வந்தான். ராமு கையில வாட்சு கட்டியிருந்தானு? அவனை மட்டும் கூப்பிட்டு, தம்பி, மணி என்னுச்சு?ன்னுன். ராமு கடிகாரத்தைப் பார்த்து, 1—55—ன்னுன். இல்லியே, ரெண்டு ஆயிருக்கணுமே, இங்கே இப்படி காமி...ன்னுன்.

—டே, போகாதடா, போகாதடா'.. மணி எத்தனை ஆனு அவனுக்கென்னடா...ன்னுன் குப்புவும், சுப்புவும். ராமு தாமுவைப் பார்த்தான், அவன் ஐஸ்காரரைத் தேடிப் போயிட்டிருக்கான். பசங்க வரதா இல்லேன்னதும், ரௌடி, ராமுகிட்ட வந்து, அவன் கையைப் பிடிச்சு இழுத்தான்.

(—ஐயையோ, என்றன குழந்தைகள்.)

—வாட்சை லபக்னு அவங்கிட்டேருந்து கழட்டிட்டான்... திருடன், திருடன்னு ராமு கத்தினுன். சுப்புவும் குப்புவும் பயந்து போயிருந்தாங்க... ஆனுலும், ரௌடியோட சட்டையை ஒருத்தனும், வேட்டியை ஒருத்தனும் பிடிச்சுக்கிட்டான். ரௌடி ஓடப் பார்த்தா, வேட்டி அவுந்துடும்....

(குழந்தைகள் சிரிக்கிறுர்கள்.)

—தாமு, தாமு...ன்னு மூணுபேரும் கூச்சல் போட்டாங்க. ரௌடியை விடல்லே. தாமு திரும்பிப் பார்த்தான். ஐஸை மறந்துட்டு வேக வேகமா ஓடி வந்தான். மூச்சு வாங்குது... அப்படியும் ரஜினி ஸ்டைல்ல அவனை ஒரு குத்து விட்டான். வேட்டி போனுலும் போகட்டும், பசங்கக் கிட்டே இருந்து, வாட்சோட தப்பிச்சாப் போதும்னு ரௌடி ஓடப் பார்த்தான். தாமுவா ஓட விடுவான்? அவனுடைய இடுப்பு மேல ஏறி உக்காந்து, ரெண்டு கையாலயும் அவனை அமுக்கி, 'குடுடா வாட்சை! கொன்னுடுவேன்!' அப்படின்னுன்.

—ரௌடி திணறினுன். கழட்டின வாட்சை ராமு கையிலேயே குடுத்து என்னை விட்டுடு தம்பீன்னுன்.

—இனிமே இப்படி பசங்க கிட்ட திருடுவியா? மாட்டேன்னு சொல்லு... ம்... சொல்லு. இல்லேன்னு போலீஸ்லே புடிச்சுக் குடுத்துடுவேன்...னு அவனை மெரட்டிக்கிட்டே கையைப் பிடிச்சு முறுக்கினுன். தாமு கை, தும்பிக்கை மாதிரியில்ல இருக்கும்?...

—இனிமே இப்படிச் செய்ய மாட்டேன்... ஐயோ... என் முதுகு... என் இடுப்பு... என் மூஞ்சி... எல்லாம் நசுங்கிப் போச்சே... விடு தம்பீ...ன்னு கத்திக்கிட்டு, தாமு எழுந்ததும் அவன் எடுத்தான் பாரு ஒரு ஓட்டம்...

—பாத்தீங்களா! குண்டுப் பையன், குண்டுப் பையன்னு அவனை எல்லாரும் கேலி பண்ணினுலும், எப்படி சமயத்துல நண்பர்களைக் காப்பாத்தினுன்! இல்லே?... என்ன.... கதை நல்லாயிருக்கா?...

—ரொம்ப நல்லா இருக்கு! என்றன குழந்தைகள்.

—சித்தார்த்

அட்டை வண்ணப்படம்: யோகா

பிருந்தாவனக் கதையரங்கம்



கவிதையும் பரிசும்

சத்தியாபுரம் என்ற நாட்டில் ஓர் அரசன் இருந்தான். அந்த அரசன் சர்வ முட்டாள். படிப்பு என்றால் என்னவென்றே அறியாதவன்.

கவிஞர்கள் அரசனைப் புகழ்ந்து கவிதை இயற்றிக்கொண்டு வருவார்கள். ஆனால், அரசனுக்கோ அவற்றைப் படிக்கவும் தெரியாது; அவற்றின் தரம் அறிந்து சன்மானம் கொடுக்கவும் தெரியாது. எனவே, கவிதை எழுதிக் கொண்டு வந்த ஏட்டைத் தராசின் ஒரு தட்டிலும், அதற்குச் சமமான பொன்னை மற்றொரு தட்டிலும் வைத்து நிறுத்துக் கொடுத்தனுப்பி விடுவான்.

தங்களுடைய கவிதையின் தரத்தை உணர்ந்து அரசன் பரிசு வழங்காமல் நல்ல கவிதைக்கும், மட்டமான கவிதைக்கும் ஒரே மாதிரியாகப் பரிசை நிறுத்துக் கொடுப்பதைக் கண்டு கவிஞர்களும், மற்றவர்களும் மனம் வருந்தினார்கள்.

ஒருநாள் மந்திரிகள், கவிஞர்கள் அனைவரும் ஒன்று கூடி அரசனின் / முட்டாள்தனமான செய்கைக்கு முடிவு கட்டத் திட்டமிட்டனர். மறுநாள், அரசவையில் அரசன் வீற்றிருக்கும் வேளையில் ஒருவன் அரசனிடம் வந்து, தான் ஒரு கவிதை எழுதிக்கொண்டு வந்திருப்பதாகத் தெரிவித்தான். அரசனும் மந்திரியை அழைத்து, அதன் எடைக்குச் சமமான பொன்னைக் கொடுத்துப் போகச் சொல்லி உத்தரவிட்டான்.

மந்திரியும் அவனைப் பார்த்து, ''நீர் இயற்றிய கவிதையைக் கொண்டு வாரும்'' என்றான்.

வந்தவன், ''அதை என் ஒருவனால் தூக்கிக் கொண்டு வர முடியாது. வெளியில் வைத்திருக்கிறேன். வந்து பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றான்.

அனைவரும் வெளியே வந்து பார்த்தனர். ஒரு வண்டியில் பெரிய கரும் பாறைக் கல் இருந்தது. அதில் நான்கு வரிகளில் எதுகை மோனையோடு ஒரு கவிதை உளியால் செதுக்கப்பட்டிருந்தது.

நிறையப் பேர் சேர்ந்து அதைப் புரட்டிக் கொண்டு வந்து ஒரு பெரிய தராசில் வைத்தனர். அரசனின் பொக்கிஷத்தில் உள்ள அத்தனை தங்கத்தையும் போட்டும் பாறாங்கல் அசையவில்லை. அரசன், என்ன செய்வது என்று திகைத்து நின்றான். ஊர் மக்கள் அனைவரும் பார்த்துச் சிரித்தனர். மந்திரிகளும் கவிஞர்களும் சேர்ந்துதான் இப்படி ஒரு நாடகத்தை நடத்தி அரசனைத் திருத்த ஏற்பாடு செய்தனர் என்று அரசனுக்குத் தெரியாது. ஆனாலும், அவன் தன் முட்டாள்தனத்தை நன்கு உணர்ந்தான். பிறகு, மந்திரிகளும் கவிஞர்களும் தாங்கள் செய்த ஏற்பாடுதான் அது என்று கூறிக் குட்டை உடைத்தனர்! அன்றிலிருந்து அரசன் ஏட்டை நிறுத்துப் பார்த்துப் பரிசு வழங்குவதை விட்டு, கவிதையின் தரத்துக்கு ஏற்ற பரிசுகளை வழங்க மந்திரியிடம் உத்தரவிட்டான். கவிஞர்கள், ஊர் மக்கள், அனைவரும் மகிழ்ந்தனர்.

தி. யசோதா (2780), கோவை—1.



பசுவின் நன்றி

''போவாயா? இனிமேல் போவாயா?''

என்ற குரலுடன் 'மடார்! மடார்!' என்ற சத்தமும் கேட்டது. அரை குறைத் தூக்கத்திலிருந்த சதீஷ் எழுந்து வெளியே ஓடி வந்தான்.

எதிர்வீட்டு வளையாபதி தம்முடைய மாட்டை அடித்துக் கொண்டிருந்தார். அந்த மாடோ ஆடாமல் அசையாமல் நின்று கொண்டிருந்தது. அதன் கண்களிலிருந்து கண்ணீர் மட்டும் வழிந்து கொண்டிருந்தது.

சதீஷ் கோடை விடுமுறைக்காகச் சித்தியின் ஊருக்கு வந்திருந்தான். காலையில் சிற்றுண்டி முடிந்ததும், அவன் சிறிது கண்ணயர்ந்தான். அப்பொழுது வளையாபதி செய்த கலாட்டாவால் விழித்துக் கொள்ள நேர்ந்தது.

சற்று நேரத்திற்குப் பிறகு வளையாபதியின் மகன் வடிவேலு, சதீஷைத் தேடி வந்தான். வடிவேலுவோ சதீஷின் விளையாட்டுத் தோழன். வடிவேலு சொன்ன கதை சதீஷின் மனத்தை உலுக்கியது.

வளையாபதி வீட்டுப் பசு தினமும் பால் கறக்கிற வேளையில், கட்டை அவிழ்த்துக் கொண்டு ஓடுமாம். எங்கே தெரியுமா? இடுகாட்டுக்கு! அங்கே போய் ஒரு சிறுமியின் சமாதியில் பாலைக் கொஞ்சம் சுரந்துவிட்டுப் பிறகு திரும்பி வருமாம். அதற்குப் பிறகுதான் பாலைக் கறக்க விடுமாம்; கன்றுக்கும் ஊட்டுமாம்.

வளையாபதி இதைத் தடுக்க எவ்வளவோ முயற்சி பண்ணினார். எப்படிக் கட்டிப் போட்டாலும், பசு அறுத்துக் கொண்டு ஓடியது. யாராவது தடுத்தால் ஆக்ரோஷமாகத் தாக்கிவிட்டு ஓடிவிடும்!

அந்தப் பசு அப்படிச் செய்ததற்குத் தகுந்த காரணம் இருந்தது. ஒருநாள் இருப்புப் பாதையை ஒட்டிய நிலத்தில், அந்தப் பசு மேய்ந்து கொண்டிருந்தது. அப்போது தாயைத் தேடி விட்டிலிருந்த கன்று கயிற்றை அவிழ்த்துக்கொண்டு ஓடி வந்தது. இருப்புப் பாதையைக் கடக்க முடியாமல் நடுவில் நின்று 'மா! மா!' என்று குரல் கொடுத்தது கன்று.

அதே சமயம், எக்ஸ்பிரஸ் ரயில் ஒன்று அவ்வழியில் விரைந்து வந்தது. கன்று பாதையை விட்டு விலகாமல் கத்தியது. தாய்ப் பசுவும் தூரத்தில் நின்று கதறியது.

அப்பொழுது சாணம் பொறுக்கிக் கொண்டிருந்த ஏழைச் சிறுமி செல்வி ஓடிப் போனாள். கன்றைத் தூக்கி இருப்புப் பாதைக்கு வெளியே போட்டாள். அவளும் பாதையைத் தாண்ட முயன்றாள். ஆனால், கால் தடுமாறிக் கீழே விழுந்து விட்டாள். விரைந்து வந்த ரயில் அவள் உயிரைப் பறித்த பிறகுதான் நின்றது!

அதன் பிறகு செல்வியின் சமாதியில் பசு பாலைச் சுரப்பது வழக்கமாகி விட்டது. ஆனாலும், கருமி வளையாபதிக்கு இது பிடிக்கவில்லை. செல்வியால் தம் கன்று பிழைத்ததை அவர் எண்ணிப் பார்ப்பதில்லை. பால் வீணாகிறதே என்று மட்டும் கவலைப்பட்டார். பசுவைப் போட்டு அடிஅடி என்று அடித்து வந்தார்.

கதையைச் சொல்லி முடித்ததும், ''எங்க அப்பாவின் மனத்தை மாற்ற வழியுண்டா?'' என்று கேட்டான் வடிவேலு. சதீஷ் ஒரு யோசனை சொன்னான். அதன்படி மறுநாள் இருவரும் நனைந்த உடைகளுடன் வளையாபதியின் முன்னால் போய் நின்றார்கள்.

''அப்பா! சதீஷ் மட்டும் சமயத்தில் வந்து காப்பாற்றியிராவிட்டால் நான் ஆற்றோடு போயிருப்பேன்! குளிக்கும் போது சுழலில் மாட்டிக் கொண்டேன். இவன் என்னைக் காப்பாற்றினான்!'' என்றான் வடிவேலு.

''அப்படியா சதீஷ்! உன் உதவியை மறக்க முடியாதப்பா!'' என்று சதீஷின் கைகளைப் பிடித்துக் கொண்டு கண்ணீர் விட்டார் வளையாபதி.

''அப்பா! நம்ம பசுவும் செல்வியின் சமாதிக்குப் போய் நன்றி செலுத்துவதில் தவறில்லையே!'' என்று கேட்டான் வடிவேலு.

''ஹா! ஆ...மா...! சரிதான்! பசு சமாதியில் பாலைச் சுரப்பது நியாயம் தான்! இப்பத்தான் எனக்குப் புத்தி

வந்தது. அந்தச் சிறுமியின் சமாதி இருக்குமிடத்தில் ஒரு கோயிலையே கட்டிவிடுவோம்!'' என்றார் வளையாபதி

—எஸ். அருண், (219)பரங்கிப்பேட்டை.



பார்க்கர் பேனா

அன்பு மிகுந்த சித்தப்பாவுக்கு,

சேது வணக்கமாய் எழுதியது. இங்கு எல்லோரும் சுகம். அவ்விடமுள்ளோர் சுகமறிய அவா. நான் நன்றாகப் படித்து வருகிறேன். நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்குவேன் என்ற நம்பிக்கை இருக்கிறது. பரீட்சை அடுத்த வாரம் வருகிறது. என்னுடைய பார்க்கர் பேனா தொலைந்து விட்டது. எழுதுவதற்குப் பேனா கிடையாது. ஆகையால், கூடிய சீக்கிரம் ஒரு பேனா வாங்கி அனுப்பிவைத்தால் நன்றாக இருக்கும். உங்கள் தபாலை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.

இப்படிக்கு,
சேது.

மேஜை மேலிருந்த இக்கடிதத்தைக் கண்ட சேதுவின் அப்பா ருத்ரமூர்த்தியாகி விட்டார். ''வரட்டும் பயல்; முதுகுத் தோலை உரித்து விடுகிறேன்'' என்று உறுமினார். அவருடைய கோபக் குரலைக் கேட்டதும், ''ஏன் இப்படி எரிந்து விழுகிறீர்கள்?'' என்று அடுக்களையிலிருந்து கேட்டுக்கொண்டே ஓடிவந்தாள் சேதுவின் அம்மா.

''உன்னைப் போலத்தானே உன் குழந்தையும் இருப்பான்! பார்க்கர் பேனா வாங்கிக் கொடுத்து ஒருமாதம் கூட ஆகவில்லை. அதற்குள் தொலைத்து விட்டான்'' என்று பேசிக்கொண்டே போனார்.

''ஐயோ! அது அதிக விலை கொடுத்து வாங்கியதாயிற்றே!'' என்று வருத்தப் பட்டாள் சேதுவின் அம்மா.

''தொலைத்தது மட்டுமல்லாமல், அவன் சித்தப்பாவிடம் வேறு பேனா வாங்கித் தரும்படி எழுதியிருக்கிறான். இதோ, நீயே பார்'' என்று அந்தக் கடிதத்தைக் காட்டினார்.

அப்போது வெளியே சென்றிருந்த சேது ஏதோ ஒரு பாட்டை முணுமுணுத்தபடி உள்ளே வந்தான். அவனைக் கண்டதும், ''டேய், சேது, இங்கே வா'' என கர்ஜித்தார் அவன் அப்பா. சேதுவின் மனம் கலங்கியது. அவன் அப்பாவின் பக்கத்தில் சென்று நின்றான். பிறகு, அம்மாவின் முகத்தைப் பார்த்தான். அவன் பார்வை, 'ஏனம்மா, அப்பா இப்படிக் கோபமாக இருக்கிறார்?' என்று கேட்பது போல் இருந்தது. தான் மத்தியஸ்தம் பண்ணப் போனால், தன் மீதும் அவர் எரிந்து விழுவார் என்று நினைத்தவளாய்ச் சேதுவின் அம்மா பேசாமல் இருந்து விட்டாள்.

''டேய், நான் வாங்கித் தந்த பார்க்கர் பேனாவை எடடா'' என்று அதட்டினார். சேது, திருதிரு என விழிப்பான் என நினைத்தார்.

'ஐயோ, குழந்தையைக் கொன்று விடப் போகிறாரே! ஆண்டவா! காப்பாற்று' என்று தியானிக்க ஆரம்பித்தாள் சேதுவின் தாய்.

''ப்பூ, இதுதானா!'' என்று கூறிக் கொண்டே, தன் மேஜை அறைக்குள் இருந்த பேனாவை எடுத்துத் தந்தையிடம் நீட்டினான் சேது. அப்போது அவன் அம்மா மிகவும் ஆனந்தமடைந்தாள். ஆனால், அப்பாவின் முகத்தில் ஏமாற்றக் குறி தோன்றியது. ஆனாலும், அவர் விடவில்லை. ''ஏண்டா, சித்தப்பாவிடம் பேனா வாங்கித் தரச் சொல்லிக் கடிதம் எழுதினாய்?'' என்று மிரட்டினார். பயல் இதிலாவது மாட்டிக் கொள்வான் என்று நினைத்தார்.

''என்ன அப்பா இது! இன்று பள்ளியிலே வாத்தியார் எங்கள் வகுப்புப் பையன்களிடம் 'நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய உறவினருக்கு எழுதுவது போல் ஒரு கடிதம் எழுதுங்கள்' என்று சொன்னார். நான் கட்டுரை நோட்டுக் கொண்டு செல்லாததால் தனியாக ஒரு காகிதத்தில் எழுதிக் காட்டினேன். அவருடைய கையெழுத்தும், எனக்குக் கிடைத்த மார்க்கும் பின்புறம் இருக்கின்றன.

திருப்பிப் பாருங்களேன்'' என்றான் சேது.

அப்பா திரும்பிப் பார்த்தார். சேது கூறியதுமிகமிக உண்மையாக இருந்தது. அவசரத்தில் ஏற்பட்ட தவறை உணர்ந்தார். மௌனமாகத் தன் அறையினுள் நுழைந்தார்.

எஸ்.வி.—கௌரி(1494), பொள்ளாச்சி.



காந்தி பொம்மை

சாந்தா பெயருக்கேற்றாற்போல் எப்போதும் சாந்தமாகவே இருப்பாள். அவளுடைய பெற்றோர்களுக்கு ஒரே செல்லப் பெண். அவளுக்கு ஒரே சகோதரன். சாதாரண மத்தியதரக் குடும்பத்தில் பிறந்திருந்தாலும், சாந்தாவைப் பொறுத்தவரையில் அவளுக்கு எந்தக் குறையும் வைக்காமல், அவள் மீது வீட்டில் உள்ளவர்கள் அனைவரும் அன்பைப் பொழிந்தார்கள்.

சாந்தா சிறுமியாக இருக்கும்போது சாப்பிடப் படுத்துவாள். அவள் பாட்டி அவளுக்கு நிறையக் கதைகள் சொல்லி, அவளை எப்படியாவது தாஜா செய்து சாப்பிட வைத்து விடுவாள். பாட்டி சொன்ன கதைகளில் அரிச்சந்திரன் கதையும், மகாத்மா காந்தியின் வரலாறும் அவளுக்கு ரொம்பப் பிடித்தவை.

அரிச்சந்திரன் கதையைக் கேட்டு மகாத்மா காந்தி, தம் இறுதி நாட்கள் வரை உண்மையைக் கடைப்பிடித்ததை அறிந்து, அண்ணல் காந்தியையே தனது இஷ்ட தெய்வமாகவும் மானசீகக் குருவாகவும் கொண்டாள். தனது தந்தையை நச்சரித்து மரத்தில் செய்து வர்ணம் கொடுக்கப்பட்ட ஒரு பெரிய காந்தி பொம்மையை வாங்கி அவளுடைய புத்தக அலமாரியில் நடு நாயகமாக வைத்து, அவரை எப்போதும் வணங்கி வந்தாள்.

படிப்பிலும் படுசுட்டியாக இருந்த சாந்தா, அடிக்கடி பள்ளிகளில் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் கலந்து கொண்டு, மகாத்மா காந்தியின் அருமை பெருமைகளைப் பற்றி உணர்ச்சி ததும்பப் பேசுவாள். காந்தி மகானிடம் அவளுக்கு உள்ள பக்தி காரணமாக அவளைப் பள்ளியில் எல்லோரும் 'சாந்தா காந்தி' என்றே கேலியாக அழைப்பார்கள்.

நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்த சாந்தா, பி. எஸ்ஸி. முதல் வகுப்பில் தேறி, தேசிய மயமாக்கப்பட்ட ஒரு வங்கியில் வேலையில் சேர்ந்து விட்டாள். வேலை கிடைத்த சுருக்கில் அவளுடைய கல்யாணமும் இனிது நடந்தேறியது.

கல்யாணம்ஆகிகணவனுடன்சென்னையில் உள்ள புக்ககத்திற்குக் கிளம்பும் நேரம். சுவாமி படத்தையும் பெற்றோர்களையும் வணங்கி விட்டுப் பெற்றோர்களைப் பார்த்துத் தழுதழுத்த குரலில், ''என்னைப் பெற்று வளர்த்து எவ்வளவோ கஷ்டப்பட்டு எனக்குச் செய்ய வேண்டியதையெல்லாம் சிறப்பாகச் செய்து விட்டீர்கள். உங்களிடமிருந்து இன்னும் ஒரு பொருளையும் கொண்டு செல்ல விரும்புகிறேன்'' என்று கூறினாள்.

''உனக்கு இல்லாதது என்னம்மா இருக்கிறது? எது வேண்டுமானாலும் கேள்'' என்றார், அப்பா.


''நீங்கள் சின்ன வயதில் எனக்கு வாங்கித் தந்த காந்தி பொம்மையை என்னுடன் எடுத்துச் செல்கிறேன்.''

''தாராளமாக எடுத்துப்போம்மா. உன் ஐந்து வயதில் வாங்கியது. வர்ணம் எல்லாம் போய் விட்டதே!'' என்று தந்தை கூறினார்.

''வர்ணம் போனாலும், காந்தி காந்திதானே அப்பா... நாம் எவ்வளவு பகட்டாக இருந்தாலும், அந்தத் தூய்மைச் சின்னத்தின் கோடியில் ஒரு பங்கைக் கூட நம்மால் எட்ட முடியுமாப்பா? ஒவ்வொரு இல்லத்திலும் இல்லறம் நல்லறமாக விளங்க அருமையான இந்த அண்ணலின் சின்னம்தான் மிகவும் இன்றியமையாதது'' என்று கூறிக்கொண்டே பழைய காந்தி பொம்மையைத் தனது சூட்கேஸில் பயபக்தியுடன் எடுத்து வைத்துக் கொண்டு, தனது புதிய திருமண வாழ்க்கைப் பாதையில் கணவனுடன் அடி எடுத்து வைத்தாள் சாந்தா.

—ஜி. கௌசல்யா (6165), ஸ்ரீரங்கம்.

கோகுலக் கவியரங்கம்



புரிந்து கொண்ட பாடத்தைப்
புதுமை யாக எழுதுங்கள்.

அதனைக் காணும் ஆசானும்
அதிக மதிப்பெண் தருவரே.

அதிக மதிப்பெண் பெறுவதே
அறிவு வளர முதற்படி.

அதற்குப் பிறகு பலபடி
அடைவோம் பெரியோர் சொற்படி!

-ஏ. ஆர். கதிரவன் (6552), கல்லூரணி

★



நெல்லிக்காய்

மல்லி, மல்லி, வந்துநீ பார்.
நெல்லிக் காயைத் தின்றுமே பார்.

பச்சை யாக இருக்குது பார்.
பளபளப் பாகத் தெரியுது பார்.

'சி'வைட்டமின் கொண்டது பார்
ஜீரண சக்திக்கு உதவுது பார்.

புளிப்பும் இனிப்பும் கலந்தது பார்.
புன்சிரிப் புடனே தின்றுநீ பார்.

—கே. வெங்கடேசன் (5114), ஓங்கூர்.

★

தேர்வு

தேர்வு நல்ல தேர்வுதான்
தினமும் படித்தால் எளிதுதான்!

படித்த பாடம் விளக்கமாய்ப்
பாலைப் போன்ற தாளிலே

கடலைப் போன்ற மையினால்
கருத்தாய் நீங்கள் எழுதுங்கள்.



என்ன வரும்?


அடித்தால் கோபம் வரும்
அன்பு செய்தால் இன்பம் வரும்.
படித்தால் அறிவு வரும்.
பகை கொண்டால் துன்பம் வரும்.
தடித்தால் பிணிகள் வரும்.
தர்மம் செய்தால் உயர்வு வரும்.
குடித்தால் கெடுதல் வரும்.
கும்பிட்டால் நன்மை வரும்.

-எஸ். தனராணி(4733), திருநெல்வேலி

★

பச்சைக்கிளி

பச்சை பச்சைக் கிளியாம்.
பழங்கள் தின்னும் கிளியாம்.



கொச்சைத் தமிழ் பேசிக்
குழந்தை போலப் பழகும்.

காடு மேடு தன்னில்
கனிகள் தின்று வாழும்.
கூடு தன்னில் வளர்த்தால்
கொஞ்சிக் கொஞ்சிப் பேசும்.

மதுரை ஆளும் தேவி
மடியில் அமர்ந்த கிளியாம்.
மதுர மழலை பேசி
மயக்கு கின்ற கிளியாம்!

இரா. சரவணன் (3403),
தாழையூத்து.

சுப்பிரமணிய சிவா

நான் வழிபடும் தெய்வம் பாரத மாதா.
என் ஜாதி பாரத ஜாதி.
என் வேலை தேச சேவை.

—இப்படிச் சொன்னார்; சொன்னபடி வாழ்ந்தும் காட்டினார் சுப்பிரமணிய சிவா. இவர் மேடைகளில் வீரம் ததும்பப் பேசுவார்; பத்திரிகைகளில், உணர்ச்சி ததும்ப எழுதுவார். இவர் குஸ்தி, சிலம்பம் போன்றவற்றில் நல்ல பயிற்சி பெற்றதோடு, யோகமும் ஞானமும் பயின்றார்.

'திருநெல்வேலி இரட்டையர்' என்று இவரையும், கப்பலோட்டிய தமிழர் சிதம்பரனாரையும் அக்காலத்தில் மக்கள் குறிப்பிடுவார்கள்.

சிறையில் இருந்தபோது சிதம்பரனார் செக்கிழுத்தார்; சிவா கம்பளி மயிர் வெட்டினார். இதனால் இவருக்குப் பெருநோய் வந்தது!

திலகரிடத்திலே இவருக்கு மிகுந்த பக்தி. திருவல்லிக்கேணிக் கடற்கரைக்கு 'திலகர் சட்டம்' என்று பெயர் வைத்தவரே சிவாதான்! 'பாரதாசிரமம்' என்ற நிலையத்தை ஏற்படுத்தி, அதில் தமிழக வாலிபர்களை ஒன்று திரட்டி, அவர்களைச் சுதந்திர வீரர்களாகவும், நாட்டின் நன்மணிகளாகவும் ஆக்க வேண்டும் என்று ஆசைப்பட்டார்.

'ஞானபானு', 'பிரபஞ்ச மித்திரன்' போன்ற பத்திரிகைகளை நடத்தியும், 'சிவாஜி', 'தேசிங்கு ராஜன்' போன்ற நாடகங்களை எழுதியும், மகாகவி பாரதியாரின் பாடல்களை நாடு முழுவதும் உணர்ச்சியோடு பாடியும் தேச பக்தியை வளர்த்தார்.

இவருக்கு ஓர் ஆசை இருந்தது. பாரத தேவிக்குப் பல இடங்களில் கோயில் கட்டவேண்டுமென்பதே அந்த ஆசை. அது கடைசி வரை நிறைவேறவில்லை.

இந்த ஆண்டு இவரது நூற்றாண்டு.

படம்: நன்றி: **ரகமி**





இராமலிங்க சுவாமிகள்

இராமலிங்க சுவாமிகள் சின்னஞ்சிறு வயதிலே தாய் தந்தையரை இழந்துவிட்டார். தமையனார்தான் இவரை வளர்த்து வந்தார்.

தமையனார் பெரியபுராணச் சொற்பொழிவு செய்வதில் வல்லவர். ஒரு சமயம், அவர், சென்னை முத்தியாலுப் பேட்டையில் பெரிய புராணச் சொற்பொழிவு செய்ய ஒப்புக் கொண்டிருந்தார். ஆனால், போக இயலவில்லை. தம்பியை அனுப்பி, வர இயலவில்லை என்பதைத் தெரிவித்துவிட்டு, இரண்டு மூன்று பாடல்களைப் பாடிவிட்டு வரச் சொன்னார்.

இராமலிங்கரின் பாட்டைக் கேட்ட சபையோர், அவற்றிற்கு விளக்கமும் கேட்டனர். மிக நன்றாக விளக்கம் கூறி, அவர்களது பாராட்டையும் பெற்றார்.

இளம் வயதிலேயே சொந்தமாகப் பாடல்களை இயற்றும் சக்தி இவருக்கு இருந்தது. எளிய நடையிலே உள்ளத்தை உருக்கும் பல ஆயிரம் பாடல்களைப் பாடினார். இவர் இயற்றிய நூலின் பெயர் 'திருவருட்பா!'

'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்று பாடினார் வள்ளலார். பயிர் வாடி நிற்பதைக் காணும் போதே, மனம் வாடுகின்ற இவருடைய உள்ளம் எத்தகைய கருணை உள்ளமாக இருந்திருக்கவேண்டும்?

வடலூரிலே இவர் புதுமுறையிலே ஒரு கோயிலைக் கட்டினார். அது தாமரை வடிவில் எட்டுக் கோணமாகக் கட்டப்பட்டுள்ளது. அதன் பெயர் 'சத்திய ஞான சபை'. அக்கோயிலின் உள்ளே விளக்கு ஒன்று இருக்கிறது. அந்த விளக்கின் முன்னால் ஏழு திரைகள் இருக்கின்றன. திரைகளை ஒவ்வொன்றாக நீக்கிய பிறகு தோன்றும் விளக்கு ஒளியை, அருட்பெருஞ்சோதி ஆண்டவராக வழிபட்டு வரும்படி கேட்டுக் கொண்டார்.

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

1940. பழ. சுப்பிரமணியன், 51, சாரங்கபாணி தெரு, சென்னை—17.
1941. வை. சுபாஷிணி, 67, பிருந்தாவன நகர், மன்னார்குடி—614 001.
1942. ச. ச. பாலாஜி, 84/எல், எஸ். கே. வி. ரோடு, ஈரோடு—1.
1943. எம். வி. சூரியநாராயணன், 8, சக்கரபாணி தெரு, மேற்குமாம்பலம், சென்னை—33.
1944. S. Bhavani, 55C/GG1 (Pocket), Vikaspuri, New Delhi-110018.
1945. ஞா. கவிதா, சி/2, நான்காவது மெயின் ரோடு, கோட்டூர்புரம், சென்னை—85.
1946. எஸ். சுவாமிநாதன், த/பெ. ஆர். சங்கரன், செம்மங்குடி, கும்பகோணம்—612 603.
1947. இரா. மலர்விழி, 1, வீரன்ன செட்டித் தெரு, பொறையார்—609 307.
1948. ஆர். குணபூஷணம், 42, சத்திய மூர்த்தி தெரு, திருவள்ளூர்.
1949. அ. சந்திரசேகரன், 13, ஞானசம்பந்தர் தெரு, சீர்காழி—609 110.
1950. வி. பாபு, 54—பி, திருநகர், கருமண்டபம், திருச்சி—1.
1951. என். ஸ்ரீஹரி, நம்பர் 17—டி, கே. நம்பித்தெரு, காஞ்சிபுரம்—631 503.
1952. க. சிவநேசன், 9, சர்வமானிய அக்ரஹாரம், நீடாமங்கலம்—614 0404.
1953. எஸ். பி. சித்ரா, 1, ஆர்க்காடு குமரப்ப செட்டியார் தெரு, என். புதூர், காரைக்குடி—623 001.
1954. என். ராமசேஷன், 134, சண்முகபுரம், திருவொற்றியூர், சென்னை—19.
1955. ஆர். எம். வைரவன், 21, ஆனந்தம்காலனி, மந்தைவெளி, சென்னை—28.
1956. ஆர். எம். பழனியப்பன், 21, ஆனந்தம் காலனி, மந்தைவெளி, சென்னை-28.
1957. எம். முரளிதரன், 29, லோகநாதன் தெரு, தாம்பரம் மேற்கு; சென்னை—45.
1958. ச. சிவராமன், 6/67, மேலத்தெரு, முடிகொண்டான் அஞ்சல், நன்னிலம் தாலுகா.
1959. பி. சுரேஷ், 15, மாணிக்கநகர், மருத்துவக்கல்லூரி ரோடு, தஞ்சாவூர்—613007.
1960. எஸ். பாலாஜி, 370/71, ஸ்ரீராம் நிவாஸ், கிளாக்டவர் ரோடு, தஞ்சாவூர்—613 001
1961. எம். பரமேஸ்வரன், 38, அடஞ்சான் முதலி தெரு, மந்தைவெளி, சென்னை—600028
1962. ஆர். ரங்கராஜன், 14—7—1—பி, பொன்னு மூப்பன் வீதி, மகாதேவிபுரம், மேட்டுப்பாளையம்—641 305.
1963. இராம. சந்திரசேகர், 15, அவிநாசி ரோடு, திருப்பூர்-638 602.
1964. ஆர். பாலசந்தர், டி. எண். 31, சின்ன வீதி; சத்தியமங்கலம்—638 401.
1965. ஆர். ரெங்கராஜ், 38, எம். பி. எஸ். அக்ரஹாரம், குளித்தலை—639 104.
1966. என். ஆர். ராஜகோபால், 3, வெங்கடேசநகர், கடலூர்—607 002.
1967. என். சபாபதி, 5/33, வைரிசெட்டிப்பாளையம்—621 012.
1968. கே. அன்னாதுரை, 40, மோரை மேட்டுத் தெரு, நெல்லிக்குப்பம், பண்ருட்டி தாலுகா.
1969. ஜெ. பிரடரிக், 16, துரைசாமிபுரம், திருச்சி—620 001.
1970. யூ. எப். பைசல் அஹமது, 25, ஏ. டி. எச். சாலை, தாங்கல், சென்னை—19.
1971. வி. கல்யாணசுந்தரம், த/பெ. வி. கே. வேலுசாமி, வெள்ளியங்கிரிப்பட்டினம், ராசிபுரம், தொண்டாமுத்தூர், கோயம்பத்தூர்மாவட்டம்
1972. B. Rajesh 167, Type-3, Sector I, Barco Township, Korba, Madyapradsh, 495684.
1973. எம். ஏ. செல்வக்குமார், எண். 737, ஜவகர்பஜார், கரூர்—639 001.
1974. பி. எஸ். அகத்தியப்பன், த/பெ. சுப்பராயன், பாசா சாயபுக் காடு, உமையாள்புரம், ஆத்தூர் வட்டம்.
1975. பி. கதிரேசன், 56, அபிராமி அம்மன் கோவில் தெரு, திண்டுக்கல்—624 001.
1976. பி. வாசுதேவன், 56, அபிராமி அம்மன் கோவில் தெரு, திண்டுக்கல்—624 001.
1977. தி. அ. நம்பிராஜன், ஜோன்ஸ்புரம் முதல் தெரு, வீ. எண். 13—ஏ, பசுமலை, மதுரை—625 004.
1978. ந. லே. அ. இராஜாராமன், 10, கொசமடத்தெரு, திருவண்ணாமலை.
1979. வி. ஸ்ரீபிரியா, மகேஷ்மஹால், 6—ஏ, என். எஸ். ஆர். ரோடு, கோயம்பத்தூர்—641 011.
1980. ப. நிர்மலா, அரசினர் மேல்நிலைப்பள்ளி, ஆறும் வகுப்பு 'ஆ' பிரிவு, ஊத்துக்குளி, பெரியார் மாவட்டம்.
1981. எஸ். சந்திரசேகர், எருமைகுளம், இடையான்குடி அஞ்சல், திருநெல்வேலி ஜில்லா.
1982. ப. ரவி, 87, சாந்தமூர்த்தி தெரு, குறிச்சி, மேலப்பாளையம்—627 005.
1983. பி. கௌரிசங்கர், 1873, வசந்தா காலனி, E.W.S. அண்ணாநகர், சென்னை—40.
1984. எல். சைலபதி, 22, மிடில் தெரு, கழுகுமலை.
1985. சி. சசிவாணன், த/பெ. எஸ். கே. சிவசாமி, அரண்மனைத் தோட்டம், கிரமங்கலம் அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம்.
1986. எஸ். காஞ்சனாதேவி, த/பெ. எஸ். கே. சிவசாமி, அரண்மனைத் தோட்டம், கிரமங்கலம் அஞ்சல், புதுக்கோட்டை மாவட்டம்.
1987. வை. ஸ்ரீராம், சண்முகப்ரியா, 74, ஜெயநகர், போரூர், சென்னை—602 104.
1988. வை. ஸ்ரீகாந்த், சண்முகப்ரியா, 74, ஜெயநகர், போரூர், சென்னை—602 104.
1989. ரா. ராஜேஷ்வர் ஆனந்த், சி—22, சுப்பிரமணியநகர், சேலம்— 636005




1990. ரா. மீராப்ரியா 1/5—ஏ, அண்ணாசாலை, சுவர்ணபுரி, சேலம்—636 004.
1991. சுபாசுந்தரம், த/பெ. டாக்டர். எம். சுந்தரம், மலையப்ப நிலையம், வேலாயுதம் பாளையம் அஞ்சல், 639 117.
1992. எஸ். முத்துலட்சுமி, 9—ஏ, வீரப்பன் நகர், 2—வது குறுக்கு, கிருஷ்ணகிரி—635 001.
1993. எஸ். மகாதேவன், 9—ஏ, வீரப்பன்நகர், 2—வது குறுக்கு, கிருஷ்ணகிரி—635 001.
1994. செ. அருள்அரசு, 17, செட்டித் தெரு, பழைய தாம்பரம், சென்னை—600 045.
1995. எஸ். ராஜசேகரன், 3/3, கங்கவார்வீதி, பாப்பநாயக்கன்பாளையம், கோயம்புத்தூர் —641 037.
1996. வி. பத்மா, அங்காளம்மன் கோயில் தெரு, புங்கம்பேடு, மீஞ்சூர் போஸ்ட்—601203.
1997. க. இராம்குமார், 250, சலிவன் வீதி, கோவை—1.
1998. சு. ரகு, சி—75, 4—வது கிராஸ் ரோடு, தில்லைநகர், திருச்சி—18.
1999. எஸ். ஸ்ரீதரன், 41, எஸ். எம். இ. எஸ். சி. ஸ்டாப் காலனி, திருச்சி—21.
2000. எஸ். வரதராஜன், 41, எஸ். எம். இ. எஸ். சி. ஸ்டாப் காலனி, திருச்சி—21.
2001. ஆர். ராஜலெஷ்மி, 41, எஸ். எம். இ. எஸ். சி. ஸ்டாப் காலனி, திருச்சி—21.
2002. கி. சிவா, இ/2, 158, கைலாசபுரம், திருச்சி—14.
2003. ஆர். சரவணக்குமார், 16, தாரமங்கலம் மெயின் ரோடு, ஜலகண்டபுரம் அஞ்சல், சேலம்—636 501.
2004. எம். ஸ்ரீப்ரதா, 21, ராமலிங்கம் தெரு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி.
2005. ஸ்ரீ பாலாஜி வெங்கட்ராமன், பிளாட் எண். 5, இரண்டாவது குறுக்குத்தெரு, பாலாஜி நகர், கொளத்தூர், சென்னை—600 099.
2006. எஸ். ஹரிஹரன், 100, 9 வது தெரு, காந்திபுரம், கோயம்பத்தூர்—641 012.
2007. அ. வை. சாந்தகுமார், 13, குப்புசாமி தெரு, செங்கற்பட்டு.
2008. எம். ரமேஷ், 243, திருச்சி ரோடு, துறையூர், திருச்சி (D.T.)
2009. ஆர். சிவகுமார், 66, 2—வது முனியப்பன் கோவில் தெரு, குகை, சேலம்—6.
2010. பி. முருகன், த/பெ. எம். பெரியசாமி, தாமல் கிராமம், எம். குன்னத்தூர், உளுந்தூர் பேட்டை தாலுகா.
2011. எஸ். சகுந்தலா, த/பெ. டி. சண்முகம், பெ. மு. பாளையம், அய்யம்பாளையம் (P.O.), மங்கலம் வழி, கோயம்புத்தூர் மாவட்டம்.
2012. டி. எஸ். வெங்கட்ரமணன், 2—ஏ, கர்ணம் சுப்பிரமணியம் தெரு, சீனிவாசநகர், கவுண்டன் பாளையம் போஸ்ட், கோவை—30.
2013. எஸ். பி. மோகன்ராஜ், 18, ஜனார்த்தன மில்ஸ் காலனி, உப்பிலிப்பாளையம் போஸ்ட், கோவை—641 015.
2014. வி. ராஜு, பி—7, பழைய காலனி, சங்கர் நகர், திருநெல்வேலி—627 357.
2015. க. ஜ. ஹபீபுர் ரஹமான், 67, ஜாவியா தெரு, கூத்தாநல்லூர்—614 101.
2016. எஸ். பாலச்சந்திரன், த/பெ. ஆர். சேதுராம், பாலன்தெரு, சின்னாளப்பட்டி போஸ்ட்—624 301.
2017. வெ. மோகன், த/பெ. கே. வி. வெள்ளைச்சாமி, கவராயப்பட்டி, நொச்சடைப்பட்டி போஸ்ட், திண்டுக்கல் தாலுகா.
2018. எஸ். கல்பனா, த/பெ. எஸ். சேஷகிரி, மானேஜர், இந்தியன் பாங்க், மசினக்குடி, நீலகிரி.
2019. ஏ. செந்தில்வேல், 5, கம்பர் தெரு, மகாலிங்கபுரம், பொள்ளாச்சி, கோயம்புத்தூர் மாவட்டம்.
2020. வெ. சதீஷ்குமார், 6, ஸ்டேட் பாங்க் காலனி, லால்பகதூர் நகர், மயிலாடுதுறை—609 001.
2021. ச. சிவக்குமார், த/பெ. எஸ். சம்பத்முதலியார், மராட்டிபாளையம் குருவராக பாளையம்—632 107.
2022. என். அருணா, சு—25, சந்தானம் ரோடு, டீ. வி. நகர், மதுரை—625 003.
2023. ஞா. இளங்கோ, 269, கன்னிமார்தெரு, தென்காசி.
2024. எஸ். எஸ். வன்னிநாயகம், 228, புதுக்கிராமம் தெரு, அம்பாசமுத்திரம், நெல்லை மாவட்டம்.
2025. கோ. இலட்சுமி, த/பெ. ஆர். கோபாலகிருஷ்ணன், நேமம் அக்ரஹாரம், திருக்காட்டுப்பள்ளி வழி, தஞ்சை மாவட்டம்.
2026. கோ. சரவணன், த/பெ. ஆர். கோபாலகிருஷ்ணன், நேமம் அக்ரஹாரம், திருக்காட்டுப்பள்ளி வழி, தஞ்சை மாவட்டம்.
2027. க. அருணா, 260, குட்செட் தெரு, மதுரை—1.
2028. டி. ராஜேந்திரன், 85, வடசேரி ரோடு, பட்டுக்கோட்டை—614 601.
2029. ஏ. டில்லிக்குமார், 88, காந்திநகர், கூடுவாஞ்சேரி.
2030. பி. டி. ராஜன், 25, காந்தியடிகள் சாலை, கும்பகோணம்—612 001.
2031. பா. ஆனந்தகிருஷ்ணன், 37—பி, பிடாரி கோவில் தெரு, திருவாரூர்.
2032. ஹ. ரம்யா, ஏ—8, டால்மியா மேக்னசைட் கார்ப்பரேஷன், கருப்பூர், சேலம்——636 012.
2033. ஹ. ராஜேஷ், ஏ—8, டால்மியா மேக்னசைட் கார்ப்பரேஷன், கருப்பூர், சேலம் —636 012.



(இன்னும் வரும்.)

ஒலிம்பிக் துணுக்குகள்!



✽ ஏழு வருஷங்களாக அமெரிக்கத் தடை ஓட்டப் பந்தயத்தில் வெற்றி வாகை சூடியவர் மோஸஸ். உலக ஓட்டப் பந்தயப் போட்டிகளில் 102 பந்தயங்களில் வெற்றி பெற்றுத் தன்னிகரற்றவர். பதினைந்து மீட்டர் தூரத்தில் முன்னணியில் ஓடும்போது இவருக்கு அதிக அளவு வேடிக்கையாயிருக்குமாம். எட்வின் மோஸஸ் ஒலிம்பிக் போட்டியில் 'ஒலிம்பிக் பிரதிக்ஞை' எடுத்துக் கொள்ளும் வாய்ப்பைப் பெற்றார்.

✽ சீனா 1932-ம் ஆண்டு ஒரே ஒரு விளையாட்டுக் கலைஞரை லாஸ் ஏஞ்ஜெல்ஸ் ஒலிம்பிக்குக்கு அனுப்பியது. 1984 லாஸ் ஏஞ்ஜெல்ஸ் ஒலிம்பிக்குக்குச் சீனா 226 விளையாட்டுக் கலைஞர்களை அனுப்பி வைத்திருக்கிறது.

✽ தென்கொரியாவிலுள்ள சியோலில் அடுத்த ஒலிம்பிக் போட்டி 1988-ல் நடைபெறவிருக்கிறது.

✽ ஒலிம்பிக் சின்னம் 'ஸாம்' கழுகு. ஒலிம்பிக் தத்துவத்தை மகிழ்வோடு நினைவூட்டும் சின்னம். அதோடு அந்த 'ஸாம்' கழுகுச் சின்னம் 'Swifter Higher, Stronger' என்ற ஒலிம்பிக்கின் குறிக்கோளையும் நினைவூட்டுகிறது.

✽ 1984 ஒலிம்பிக் போட்டியின் சின்னமாகிய இந்தக் கழுகுச் சின்னத்தைப் படைத்தவர்கள் வால்ட் டிஸ்னி ஸ்டுடியோவைச் சேர்ந்தவர்கள்.

ஒரு உண்மையான மொட்டைத் தலைக் கழுகு பயிற்சி அளிக்கப்பட்டு, அது ஒலிம்பிக் ஆரம்ப தினத்தன்று 'அதிசய விருந்தாளி'யாக வருவதற்கு ஏற்பாடு செய்திருந்தனர். இருபது வருஷக் கழுகு, பயிற்சியின் போது மரணமடைந்தது துரதிர்ஷ்டம்! இந்தக் கழுகு இல்லாத ஒலிம்பிக் நிறைவில்லை!

✽ அமெரிக்க மல்யுத்தப் போட்டி வீரர்களில் அப்பாவும், பிள்ளையும் இருந்தார்கள். இரட்டையர் போல்தோற்றமளிக்கும் இவ்விரண்டு பேரும் இணைந்து மல்யுத்த மைதானத்தில் காட்சியளித்தார்கள்! லோ ஓர் ஆசிரியர் கூட. 'The new Breed' அமெச்சூர் மல்யுத்தப் போட்டி வீரர்களுக்கு அளிக்கப்பட்ட இவரது நூல்!

✽ 597 அமெரிக்க ஒலிம்பிக்போட்டியாளர்களில் இரண்டு சகோதர — சகோதரி இணைப்பு உள்ளது. கார்ல், காரல் லூயிஸ் என்பவை அவரது பெயர்கள்:

✽ சைக்கிள் போட்டியில் கணவன்—மனைவி இருவரும் ஒலிம்பிக்கில் பங்கேற்றார்கள். டேவிஸ் பின்னி — கோனி கார்பெண்டர் தம்பதியே அவர்கள்!

பில், கார்ல் டிச்சன், தந்தை—பிள்ளை கோஷ்டியாகப் படகுப் போட்டியில் இடம் பெற்றனர்.

✽ ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற வயது முதிர்ந்த குதிரை பதினெட்டு வருஷங்களுக்கு முன் 1976 மாண்ட்ரீயால் ஒலிம்பிக்கில் கலந்துகொண்ட சிறப்புப் பெற்றது.

✽ ஜிம்னாஸியப் போட்டியாளர்களில் குள்ளமானவர் மேரி லொ ரெலிட்டன். நாலடி ஒன்பது அங்குல உயரம் கொண்டவர்.

✽ இதய நோயாளி டோம் போல்லியோவுக்கு எழுபது வயது. இவர் தம் சக வீட்டுக்காரர்களிடம் நிதி சேகரித்து, 3000 டாலர் கட்டி ஒரு கிலோ மீட்டர் தூரம் 'ஒலிம்பிக் டார்ச்'சுடன் ஓடி மகிழ்ந்தார். இந்த 3000 டாலர் இளம் ஓட்டக்கலைஞர்களுக்குப் பயன்படப் போகிறதாம்!

—பி. எஸ். மணி



மாம்பட்டிப் பெரிய பண்ணையார் மகன் நடேசவுக்கும், சேவல்பட்டி ஜமீன்தார் மகள் தமிழ்ச் செல்விக்கும் திருமணம் பேசி முடித்தார்கள். கல்யாணம் சேவல்பட்டியில் நடப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. மாம்பட்டியிலிருந்து நூற்றைம்பது கல் தொலைவில் உள்ள சேவல்பட்டிக்குக் கல்யாணத்துக்குப் போய்வர எப்படியும் ஒரு வார காலம் ஆகிவிடும். பண்ணையார், ஊரில் திருட்டுப் பயம் இருக்கவே கொஞ்சம் பயந்தார். இருந்தாலும் வீட்டில் இரண்டு வேலையாட்களைப் போட்டுவிட்டுப் பார்த்துக் கொள்ளச் சொல்லிவிட்டு, திருமணத்தில் அணிய வேண்டிய நகைகள், ரொக்கம் எல்லாவற்றையும் ஒரு சூட்கேஸில் போட்டுக் கையோடு கொண்டு போகலாம் எனத் தீர்மானித்தார்.

மாம்பட்டியிலிருந்து ஒரு முப்பது பேர் கொண்ட பட்டாளமே சேவல்பட்டிக்குக் கிளம்பியது. பிரயாணிகள் எண்ணிக்கை இரண்டுங்கெட்டானாக — முப்பதாக இருக்கவே தனியாக பஸ் ஏற்பாடு செய்துகொண்டு போக முடியவில்லை. இருந்தாலும் பெரிய பண்ணையார், தம் சொந்தச் செல்வாக்கில் தனியார் பஸ் ஒன்றில் ஒட்டுமொத்தமாக முப்பது பேருக்குப் பிரயாண ஏற்பாடு செய்தார். சேவல்பட்டிக்குப் போகும் கடைசி பஸ் இரவு 9.00 மணிக்கு. இரவுப் பயணம் களைப்புத் தெரியாது என்பதால் இரவு கடைசி பஸ்ஸில் இடம் பிடித்தார் பண்ணையார்.

சின்னானையும் உடன் அழைத்தார். ''நான் எதுக்குங்க? — அதான் கல்யாணப் பிள்ளையும் பொண்ணும் இங்கேதானுங்க இருக்கப் போறாங்க— பார்த்துக்கிட்டாப் போச்சு'' —என்று சின்னான் சொல்லிப் பார்த்தான். ஆனால், பண்ணையார் விடுவதாக இல்லை. ''நீ என்கூட சும்மா வந்து தான் ஆகணும். நீதான் எங்கே போறே — எங்கே வர்றே... நீ இந்தச் சின்னக் கிராமத்திலே இருந்துக்கிட்டே இவ்வளவு புத்திசாலித்தனமா பேசறே; நடந்துக்கறே. நிறைய அனுபவம் அடைஞ்சிருக்கே... நாலு இடம் போனா — பழகினா நீ உன்னை இன்னும் வளர்த்துக்கிட்டு நம்ம ஊர்ப் பேரை நிலை நாட்டுவாய். மேலே மேலே பேரும் புகழும் அடையலாம். உன்னைப் பத்தி • அந்த ஊர்க்காரங்களும், என் சம்பந்தி வீட்டாரும் தெரிஞ்சுக்கிட்டும். சின்னான், அதுக்காகத்தான் கூட்டிக்கிட்டு போறேன் — மறுப்புச் சொல்லாமல் வா''— என்றார் பண்ணையார்.

புதுச்சட்டையும், வேட்டியும்கூட வாங்கிக் கொடுத்தார். நாட்டாண்மை —மற்றும் பஞ்சாயத்துக்காரர்களும் கூட 'சின்னானைக் கண்டிப்பாக ஊர் ஊராக அழைத்துப் போய்க்காட்டி— நம்ம ஊர்ப் பேரும் புகழும் — சின்னானுடைய பேரும் புகழும் —உலகறியச் செய்யணும்' என்று ஒரே குரலில் கூறினார்கள்.

சின்னான் மறுப்புப் பேசாமல் கிளம்பினான்.

பெருமாள் கோயில், பிள்ளையார் கோயில், மற்றும் அம்மன் கோயில்களில் தேங்காய் உடைத்து — கற்பூரம் காட்டிப் பூஜை செய்துவிட்டுப் பண்ணையார், ஊர்ப் பெரிய தனக்காரர்கள் சின்னான் சகிதமாகக் கிளம்பினார்.

பண்ணையார் மிகுந்த செல்வாக்கு உடையவரல்லவா! அதுவும் அந்தத் தனியார் பஸ்ஸின் முதலாளி பண்ணையாருக்கு மிகவும் நெருங்கிய நண்பர். அதனால், ஊர்க் கூட்டு ரோடு வரை வரும் பஸ், அன்று பண்ணையாருக்காகக் கிராமத்துக்குள்ளேயே வந்தது.

சின்னான் கீழிருந்தபடியே கொண்டு போக வேண்டிய சாமான்களை எண்ணி எண்ணி, பஸ்ஸுக்குள் ஏற்றினான்.

பஸ் ஆனந்தமாக இருளைக் கிழித்துக் கொண்டு மலைத்தொடர்ச்சி ஓரமாய் நெடுஞ்சாலையில் போய்க் கொண்டிருந்தது. ஐம்பது பேர் ஏறக் கூடிய பஸ் ஆகையால், அங்கங்கே பஸ்ஸை நிறுத்தி வழிப்பயணிகளையும் ஏற்றிக் கொண்டார் கண்டக்டர்.

நள்ளிரவு மணி பன்னிரண்டரை. ஒரு கூட்டு ரோட்டில் ஒரு கடா மீசைக்காரன் சூட்கேஸும் கையுமாய் இறங்கினான். பஸ் நின்ற குலுக்கலில் தூங்கிக் கொண்டிருந்த பண்ணையார் மற்றும் சின்னான் மற்றும் சிலர் விழித்துக் கொண்டனர். அந்தத் தூக்கக் கலக்கத்தில் இருந்த போது கூட அரைவிழிப்பில் பண்ணையார் தம் சூட்கேஸைத் தடவிப்பார்த்தார்— மடியில் காணவில்லை! தூங்கிக்கொண்டிருந்த போது நழுவி விழுந்துவிட்டது. சட்டென்று அந்த மங்கலான நீல இரவு விளக்கு வெளிச்சத்தில் சூட்கேஸ் முன் ஸீட்டிற்கு அருகே கிடந்தது. அதை எடுத்த பண்ணையார் அப்படியே பிரமை பிடித்தவர் போல நின்றார் அது அவருடையதல்ல. காலியாய் இருந்தது. அதனால் லேசாக இருந்தது.

''சின்னான்... சின்னான், நம்ம சூட்கேஸை எவனோ களவாடிக்கிட்டுப் போயிட்டான். கொஞ்சம் தேடு... தேடு'' என்றார் பண்ணையார். அந்தக் கலாட்டாவில் பஸ்ஸில் எல்லோரும் விழித்துக் கொண்டனர். சின்னான் பஸ் முழுக்கத் தேடினான்; கிடைக்கவில்லை. ''எவனோ சூட்கேஸை மாற்றி வைச்சு நம்ம பெட்டியைக் களவாடிக்கிட்டு இறங்கியிருக்கான் பண்ணையார்'' என்றான் சின்னான். அவன் அதிபுத்திசாலியல்லவா? சட்டென்று என்ன நடந்திருக்கும் என்று புரிந்து கொண்டான்.

அதற்குள் கண்டக்டர் 'புலிக்காடு கூட்டு ரோட்டிலே ஒரு மீசைக்காரன் நம்ம பஸ்ஸிலேயிருந்து ஒரு பெட்டியோட இறங்கினான், பண்ணையாரு... ஒருகால் அவன் மாற்றி எடுத்துக்கிட்டுப் போயிட்டானோ என்னவோ?'' என்றார்.

''இப்ப எப்படி இந்த இருட்டிலே நடுராத்திரியிலே அவனைத் தேடறது?.. கல்யாண நகைங்களெல்லாம் வச்சிருந்தேன். ரொக்கமாப் பணம் வச்சிருந்தேன்... நாளைக்குக் கல்யாணத்திலே என் கௌரவம் என்ன ஆறது?'' என்று புலம்பினார் பண்ணையார்.

''அடுத்த டவுன்லே போய் போலீஸ் ஸ்டேஷன்லே புகார் கொடுத்துடுவோம்'' என்றார் ஊர்ப் பெரியவர் ஒருவர்.

''என்னங்க, ஆகிற காரியமாச் சொல்லுங்க.''

''போலீஸிலே புகார் கொடுத்தால், இந்த நடுநிசியிலே அவங்கதான் என்ன செய்யப் போறாங்க? உடனடியா நடக்கிற யோசனை சொல்லுங்க'' என்றார் நாட்டாண்மை!

''ஐயா நாட்டாண்மைக்காரரே, நான் ஒண்ணு சொல்லவா?'' என்றான் சின்னான்.

''சொல்லு சின்னான் — நீதான் எந்த அவசரத்திலேயும் நிதானத்தை இழக்காமல் புத்திசாலித்தனமா யோசனை சொல்லுவியே! சொல்லு, சொல்லு!'' என்றார் பண்ணையார்.

இதற்குள் வண்டி இரண்டு கிலோ மீட்டர் கடந்து வந்துவிட்டது. சின்னான் டிரைவரை அழைத்து வண்டியை நிறுத்தச் சொன்னான். வண்டி நின்றது.

''ஐயா டிரைவர், இந்த இருட்டிலே நடுராத்திரியிலே அந்தத் திருடன்கூட எங்கேயும் போயிட முடியாது —நாம மலைக்கு நடுவிலே ரோட்டிலே வந்துக்கிட்டிருக்கோம். அவன் எங்கேயும் போக மாட்டான். எதிர்த்தாப் போல வேறே ஏதாவது பஸ்ஸோ, லாரியோ பிடிக்கப் போகலாம்னு அவன் அங்கேதான் நின்னுக்கிட்டிருப்பான். நாம எல்லோரும் இவ்வளவு சீக்கிரம் திருட்டுப் போயிட்டதைத் தெரிஞ்சுக்கிடுவோம்னு அவனாலே நினைச்சிருக்க முடியாது. எல்லோரும் தூங்கிக்கிட்டிருக்காங்க. டிரைவருக்கும், கண்டக்டருக்கும் பெட்டியை மாத்தி எடுத்துக்கிட்டுப் போனது எப்படித் தெரியப் போவுதுன்னுதான் நினைப்பான்..

''அதனாலே வண்டியைத் திருப்பிக்கிட்டு நேரா வந்த வழியே போக

லாம். ஆனால், எல்லோரும் தூங்குகிற மாதிரியே பாசாங்கு பண்ணுங்க. டிரைவரும் கண்டக்டரும் முண்டாசு கட்டிக்கிட்டுக் கொஞ்சம் ஆள் மாறின மாதிரி இருக்கட்டும். அவன் ஏதோ ஒரு பஸ்ஸோ, லாரியோ வருது — எந்த வண்டியா இருந்தால் என்னன்னு தான் அவசர அவசரமா வண்டியிலே ஏறிக்குவான். வண்டிக்குள்ளே வந்ததும் அப்புறம் நாம நம்ம கைவரிசையைக் காட்டுவோம்'' என்றான் சின்னான்.

''ஆமாம். நம்ம பஸ்ஸைப் பார்த்து அவன் கண்டுக்கிட்டான்னா?'' என்று சந்தேகத்தைக் கிளப்பினார் ஒருவர்.

''அட நீங்க ஒண்ணு — அவன் இருட்டிலே வண்டியையும் கலரையும்— அது எங்கே போகுதுன்னு பார்க்கப் போறான்? டிரைவரய்யா, நீங்க யாராவது பெட்டியோட கைநீட்டி நிறுத்தச் சொன்னால் தூரத்திலேயே விளக்கை அணைச்சுப்புட்டுச் சின்ன விளக்கிலேயே போங்க'' என்றான் சின்னான்.

வண்டி திரும்பி, வந்த வழியே போனது.

சொல்லி வைத்தாற் போல ஓர் உருவம் பெட்டியோடு கைகாட்டுவது தெரிந்தது. டிரைவர் சின்னான் சொன்னது போலவே செய்தார். அந்த உருவம் வண்டிக்குள் ஏறியது. எல்லோரும் தூங்குவது போலப் பாசாங்கு செய்தனர்.

கொஞ்ச தூரம் போனதும் பஸ் பழையபடி திரும்பிற்று. கண்டக்டர் டிக்கெட் கேட்பது போல அந்த உருவத்திடம் வந்தார்.

கண்டக்டரைப் பார்த்ததும் திருடன் புரிந்து கொண்டான், ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதென்று. பஸ்ஸின் கதவுகள் போடப்பட்டிருந்தன.

சின்னானும் எழுந்து வந்தான் — ''ஐயா பண்ணையாரய்யா, பெட்டியை எங்கேயோ வச்சுட்டுத் தூங்கறீங்களே'' என்று உரக்கக் கத்திக் கொண்டே திருடனின் பக்கத்தில் இருந்த பெட்டியை எடுத்தான்.

''யோவ் — அது என் பெட்டி — கண்ணு தெரியல்லே?'' என்று கேட்டுச் சின்னானை முறைத்தான், அந்தத் திருடன்.

அதற்குள் டிரைவர் பஸ்ஸில் தனக்கு நேரே மேலே மாட்டியிருந்த கண்ணாடி வழியே பார்த்து, ''இதே ஆசாமிதான் கொஞ்ச நேரத்துக்கு முன்னே 'புலிக்காடு' கூட்டு ரோட்டிலே இறங்கினான்'' — என்று உறுதிப் படுத்தினார்.



லேட்டா போனால்?

''வாத்தியார் வீட்டிலே பிச்சை கேட்கச் சரியான டயத்துக்குப் போயிடணும்''.

''லேட்டா போனா என்ன?''

''அரைமணி வெயிலிலே நிக்கவெச்சுட்டுத் தான் பிச்சை போடுவார்''.

-ஆர். பி. ராஜ்

பெட்டியைத் திருடிக்கொண்டு போய்க் கொஞ்ச நேரமே ஆகியிருந்ததால், அவனால் பெட்டியை உடைத்து என்ன இருக்கிறது என்றுகூடப் பார்க்க முடியவில்லை.

சின்னான் கேட்டான் — ''இது உன் பெட்டியா? அப்படியானால் இதுக்குள்ளே என்ன வச்சிருக்கேன்னு சொல்லு — ஆனால், நாங்க அந்தப் பெட்டியைத் திறக்காமலேயே அது உள்ளே என்ன என்ன இருக்குன்னு சொல்றோம்.''


நன்றாக மாட்டிக் கொண்டோம் என்று புரிந்து கொண்டான் திருடன். இதற்குள் பண்ணையார் சாவிபோட்டுத் திறந்து பார்த்தார். பெட்டியில் எல்லாம் வைத்தது வைத்தபடியே இருந்தன.

அடுத்த ஊர்ப் போலீஸ் ஸ்டேஷனில் பஸ்ஸை நிறுத்தி — பண்ணையார் மற்றும் ஊர்ப் பெரியவர்கள் திருடனை ஒப்புவித்தார்கள். அவனைப் பிடிக்க, புத்திசாலித்தனமாய் வழி சொன்ன சின்னானையும் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் — ''இந்த ரூட்டிலே இதுமாதிரி சமீபத்திலே கொஞ்ச நாளா நடந்துக்கிட்டு வர்ரதா புகார் வந்தது. திருடனைக் கண்டு பிடிச்சுக் கொடுத்ததற்காக ரொம்பவும் நன்றி'' என்று கூறிச் சின்னானைப் பாராட்டினார்.

அவனைப் பிடித்ததில் மேலும் பல திருட்டுக் குற்றங்கள் புலனாயின. ஒரு திருட்டைப் பிடிக்க ஒன்பது திருட்டுக்கள் வெளிப்பட்டன!

பெட்டி கிடைத்த இரட்டிப்பு மகிழ்ச்சியில் பண்ணையார் திருமணத்தை மிகமிகச் சிறப்பாக நடத்தி வைத்தார்!



கனவு கலைந்தது

ஸ்ரீரங்கம் சித்ரா

முரளிக்குப் பகல் கனவு காண்பது நிரம்பப் பிடிக்கும். பகல் கனவு என்றால் என்ன தெரியுமோ? ஒரு மூலையில், ஒருவர் தொந்தரவும் இல்லாமல் போய் உட்கார்ந்து கொண்டு கண்களை மூடி சுவாரஸ்யமாய்க் கற்பனை செய்வதுதான்!

அவன் கனவுகளில் எல்லாம் அவனே தான் ஹீரோ. எல்லோருக்கும் உதவி செய்வான். டிஷ்யூம்.. டிஷ்யூம்...என்று சண்டை போடுவான்; துப்பறிவான்; கண் தெரியாதவனைக் கையைப்பிடித்துச் சாலையைக் கடக்க உதவி செய்வான்; இன்னும் என்னென்னவோ செய்வான் — எல்லாம், கனவில்தான்!

அம்மா வருவாள்.

''டேய் முரளி, காய்கறிக் கடைக்குப் போய் அரைக்கீரை வாங்கிட்டு வர்றியா?''

''போம்மா. சும்மா ஏதாவது வேலை சொல்லிக்கிட்டு...'' என்று சிணுங்குவான்.

''எனக்கு உடம்பு முடியலேடா. சீக்கிரமா சமையல் செய்யணும். அப்பாவுக்கு • ஆபீசுக்கு லேட்டாயிடுச்சாம்... போடா...''

''போம்மா.'' எழுந்து போய்விடுவான்.

''ச்சே... வீட்டுல இருந்தாத்தானே இந்த வம்பு...? வெளியே போகலாம்...''

வீதியில் நடக்கும் போது எதிரே காலில் கட்டுப் போட்டுக்கொண்டு நொண்டியபடி ஒருவர் வந்தார்.

'யாரோ கண்ணாடிச் சில்லை வீதியில் போட்டதால் அதை மிதிச்சிருக்கார். அதனாலேதான் காயம். கட்டுப்போட்டிருக்கார்... நான் என்ன செய்வேன் தெரியுமா...? இமே நடக்கிற வழியிலே பிளேடு, கல், கண்ணாடித் துண்டு, ஆணி எது கிடந்தாலும் தூக்கி மூலையிலே போட்டிடுவேன்...'

யோசித்தபடி நடந்ததில் கொட்டாங்கச்சியின் மேல் காலை வைத்துவிட்டான். 'நறுக்'கென்று அது காலில் குத்தியது. 'ஆ'வென்று கத்தியபடி அதை முறைத்தான்.

'பொறுப்பே இல்லாதவங்க... இப்படியா குப்பையை நடு ரோட்டில போடுவாங்க...? குப்பைத் தொட்டியில் தானே போடணும்? நானா இருந்தால் எங்க வீட்டுக் குப்பையை, குப்பைத் தொட்டியில்தான் போடச் சொல்லுவேன்...' என்று நினைத்தபடி மேலே நடந்தான்.

பெட்டிக்கடை ஒன்றில் தினசரி பேப்பரின் போஸ்டர் இருந்தது. 'பயங்கரக் கொள்ளை; கொலை... திருடர்களைத் தேடிப் போலீஸ் வலை வீச்சு...' படித்ததும் முரளிக்குத் துணிச்சல் பொங்கியது.

'நான் சி. ஐ. டி. யா இருந்தால்... எல்லோரையும் நானே கண்டுபிடிப்பேன்... ஒரு திருடனும் தைரியமா வெளியே வர முடியாது... மக்கள் எல்லாம் சந்தோஷமா இருப்பாங்க..'

மேலே நடந்தான்.

யாரோ ஒரு அம்மா, தன் மகனிடம் கெஞ்சிக் கொண்டிருந்தாள்.

''டேய்... தங்கச்சியைப் பார்த்துக்கடா... எனக்கு வேலை இருக்கு...''



இன்னும் தூக்கம் ஏனடா?

செல்ல கணபதி

காக்கை, பாட்டுப் பாடவே
காலை நேரம் மலர்ந்தது.
தூக்கம் போதும். தம்பியே,
சோம்பல் ஏனோ? எழுந்திரு!

ஊக்கம் கொண்டு உழைத்திடின்
உயர்ந்த பதவி கிடைத்திடும்.
தூக்கம் மிகுந்த சோம்பலால்
துவண்டு போகும் வாழ்க்கையே.

பூக்கள் மீது கும்பலாய்ப்
புதிய தேனை உண்ணவே
ஈக்கள் கூடும் அழகுபார்!
இன்னும் தூக்கம் ஏனடா?

சாரை சாரை யாகவே
சலித்றி டாமல் எறும்புகள்
ஓர மாகச் சென்றுதான்
உழைத்துத் தின்னும் அழகுபார்!

தென்றல் வீசும் காலையில்
சீக்கி ரம்நீ எழுந்திரு.
உன்றன் பாடம் படித்திடு.
உலக அறிவைப் பெற்றிடு.

வளர்ந்து நன்கு நீயுமே
வாலி பத்தை அடைந்ததும்,
தளர்ந்தி டாமல் உழைத்திடு.
தக்க வாழ்வு கிடைக்குமே!

''போம்மா... உனக்கு வேறு வேலை இல்லே. நான் விளையாடப் போகணும்...'' என்றான் அந்தப் பையன்.

முரளிக்கு அந்தப் பையன் மேல் கோபம் வந்தது.

'இப்படியா இருக்கிறது...?' நானா இருந்தால் தங்கச்சியை வச்சுக்கிட்டு... நிறையக் கதை எல்லாம் சொல்லி விளையாட்டுக் காண்பிப்பேன்... அவ சிரிச்சுக்கிட்டே இருப்பா...'

எதிரே கோவில் குறுக்கிட்டது. கோவில் பிராகாரத்தில் ஒரு சாமியார் பேசிக் கொண்டிருந்தார். நிறையப் பேர் கேட்டுக் கொண்டிருந்தனர். முரளியும் ஓர் ஓரமாய்ப் போய் நின்று கொண்டான்.


''...ஆகவே, நாம் நம்மால் முடிந்த அளவுக்கு மற்றவர்களுக்கு உதவி செய்ய வேண்டும். 'எனக்குப் பணம் இருந்தால், இதைச் செய்வேன்.... அதைச் செய்வேன்' என்று எல்லோரும் பெருமையாகச் சொல்லிக் கொள்வார்கள். ஆனால், பணம் கிடைத்ததும் மாறிவிடுவார்கள். கடவுள் நம் ஒவ்வொருவருக்கும் ஒரு சக்தியைக் கொடுத்திருக்கிறார். நம் சக்திக்கு உட்பட்ட அளவுக்கு உதவி செய்யலாம். மனசுக்குள் உதவி செய்ய ஆசைப்படுவதும்... பேசுவதும் நல்லது தான். ஆனால், அதற்கும் மேலாக அதைச் செயலிலும் காண்பித்தால் தான் கடவுள் நமக்குக் கொடுத்த சக்தியை உடயோகப்படுத்தியதாகும். இறைவனும் நம்மேல் சந்தோஷப் பட்டு நமக்கு அருள் புரிவார். வழியில் கிடக்கும் ஆணி, கண்ணாடித் துண்டுகளை எடுத்து மிதிபடாத இடமாகப் போடுவதுகூட நல்ல காரியம்தான். பக்கத்து வீட்டுப் பையனுக்குப் பாடம் தெரியாது போனால், நமக்குத் தெரிந்த வரை சொல்லிக் கொடுப்பதும் நல்ல காரியம்தான். உடம்பு சரியில்லாதவர்களுக்கு ஆறுதல் சொல்வது.. உதவி செய்வது எல்லாம் நல்லது தான்... நம் சகோதரன்... அப்பா,... அம்மா... இவர்களிடமே சண்டை போட்டால்.., உதவி செய்யாவிட்டால் எப்படி நாம் அடுத்தவர்களை நேசிப்போம்...?'

சாமியார் பேசிக் கொண்டே போனார்.

கேட்டுக் கொண்டிருந்த முரளிக்குக் கண்களில் நீர் வழிந்தது.

யாருக்கும் எந்த உதவியும் செய்யாமல் வெறு மனே பகல் கனவு கண்டு கொண்டிருப்பதால் என்ன பயன்? நிஜமாக யாராவது உதவி கேட்டால், முடிந்தால் செய்யலாமே! மனசுக்குள் ஆயிரம் நல்ல விஷயங்களை செய்வதாக நினைத்துக் கொண்டால் என்ன பயன் இருக்கும்?

திரும்பி வேகமாய் வீட்டை நோக்கி நடந்தான், 'அம்மாவுக்கு உதவி செய்யணும், சீக்கிரமாகப் போய்' என்ற நினைப்புடன்!



சொர்க்கத்தில் காண்பார்!

என். செந்தில்குமார்

''மகன் தந்தைக்காற்றும் உதவி'' இந்தக் குறளையே நான்காவது முறையாக வகுப்பில் நடத்திக் கொண்டிருந்தார் ஆசிரியர் வேதலிங்கம். பாடம் நடத்தும்போதே அவருக்குத் தொண்டையை அடைத்தது. மேலும், இதைப் பற்றி விவரிக்காமல் அடுத்த குறளுக்குப் போய்விட்டார்.

பள்ளி மணி கணகணத்தது.

சிறுவர்கள் சிதறிய முத்துக்கள் போலப் பள்ளியில் இருந்து தத்தம் வீடுகளை நோக்கி ஓடினார்கள்.

எல்லாக் குழந்தைகளும் சென்றபின் கல்விச் செல்வத்தை வாரி வழங்கும் வள்ளலாகிய வேதலிங்கம் பள்ளிக் கூடத்தைப் பூட்டிக்கொண்டு, மனக் கதவைத் திறந்துகொண்டு வீடு நோக்கி நடந்தார்.

வேலனூர் சிறிய கிராமம்தான். புற இருளைப் போக்க மின்சாரம் வரவில்லையே என வருந்திய கிராம மக்கள், அக இருளை நீக்க வேதலிங்கம் இருக்கிறார் என்ற மனமகிழ்ச்சியில் நிம்மதியுடன் இருந்தனர்.

சிறுவர்களுக்கு அழியாச் செல்வமாகிய கல்வியைப் புகட்ட அந்தச் சிறிய குடிசைப் பள்ளிக்கூடத்தைத் தவிர மக்களுக்கு வேறு கதி கிடையாது.

வேதலிங்கத்துக்கும் அந்தச் சிறுவர்களைத் தவிர வேறு கதி கிடையாது. அவர்களுக்கு அறிவு புகட்டுவதிலேயே தம் வாழ்நாளின் பெரும் பகுதியைச் செலவிட்டவர். பதவியில் இருந்து ஓய்வு பெறும் நிலையில் இருந்த அவர், தாம் இறக்கும் போதுகூட, பள்ளி ஆசிரியர் வேதலிங்கமாகத்தான் இறக்க வேண்டும் என்று அடிக்கடி சொல்லுவார்.

ஆம், அப்படிப்பட்ட உயர்நோக்கம் கொண்டிருந்த வேதலிங்கம் மனைவியை இழந்தவர். இப்போது மகனையும் பறிகொடுத்து நிற்கின்றார்.

மனைவியோ உலகைவிட்டுப் போய் விட்டாள்.

மகனோ ஊரைவிட்டுப் போய் விட்டான்.

ஆனால், வேதலிங்கத்துக்கு ஊர், உலகம் எல்லாமே அந்தச் சிறிய கிராமமான வேலனூர்தான்! வேலனூர் வாசிகள்தான் அவரது சுற்றத்தார், சொந்தம், பந்தம் எல்லாமே! மக்களும், ஒரு குருவுக்குத் தரவேண்டிய அனைத்து மரியாதைகளையும், மதிப்பையும் கொடுத்துக் கௌரவித்தார்கள்.

வேதலிங்கம் பள்ளிக்கூடம் விட்டதும், நேரே அந்த இடிந்த பிள்ளையார் கோயிலுக்கு வந்தார். கோவிலை வலம் வந்து கண்ணீர் மல்க இருகரம் கூப்பித் தொழுதார்.

அவர் வாழ்க்கையைப் போலவே அந்த விநாயகர் கோவிலும் இடிபாட்டுடன் இருந்தாலும், பொது மக்களால் பூஜிக்கப்பட்டு வந்தது.

பிள்ளையார் கோவிலும் ஊரின் ஒதுக்குப்புறத்தே எல்லையில் இருந்தது.

அவர் வாழ்க்கையும் முடியும் எல்லையில்தான் இருந்தது.

விநாயகரும் தனி ஆள். இவரும் தனி ஆள். அவர் அருளினைத் தருகிறார். இவர் அறிவைத் தருகிறார். இருவரும் கடவுளர்கள்தானே!

பிள்ளையாரை வணங்கி விட்டு, செருப்பை மாட்டிக் கொண்டு மேலத் தெரு வழியாக வந்து கொண்டிருந்தார் வேதலிங்கம்.

''ஐயா! வாத்தியாரய்யா, ஒரு சின்ன உதவி!''

''யாரது? ஓகோ, சின்னையனா! என்னப்பா விஷயம்? அது என்ன, கையிலே கடுதாசி?''

''இதுக்காகத்தாங்க கூப்பிட்டேன். இந்தக் கடுதாசியிலே என்ன எழுதியிருக்குதுன்னு தெரியல்லே. தபால்காரய்யா கொடுத்துட்டுப் போனாரு. என் மகனைப் பத்தி ஏதாவது தகவல் உண்டான்னு....?''

''எங்கே, அதைக் கொடுங்க பார்ப்போம்... உங்க மகன்தானய்யா எழுதியிருக்கார். சென்னையிலிருந்து இன்னும் இரண்டு நாளிலே வர்றதாக எழுதியிருக்கார்...'' இதைச் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அவர் தொண்டையை அடைத்தது; கண்களிலே நீர் திரையிட்டது.

''அது சரிங்க! அதுக்காக உங்கள் கண்ணிலே... ஏதாவது தப்பான சமாசாரமா? சொல்லுங்க ஐயா, சீக்கிரம்!''

இப்போது அவர் தம்மைப் பற்றிய உண்மையைக் கூறி விட்டால், சின்னையன் தம் மகனுக்கு ஏதாவது நேர்ந்து விட்டதோ என்றல்லவா எண்ணுவான்?

''சின்னையா, உன் மகனுக்கு ஒன்றும் இல்லையப்பா. என் துன்பத்துக்குக் காரணம், என் மகனைப் பற்றித்தான்!''

''உங்க மகனைப் பற்றியா? உங்களுக்கு ஒரு மகன் இருப்பது எனக்குத் தெரியுமுங்க. ஆனால், அவரு எங்கேயோ வடக்கே வேலையிலே இருப்பதாகத்தானே சொல்லுவீங்க!''

''ஆமா சின்னையா! வாத்தியார் பிள்ளை மக்காயிருக்கலாமா? என் மகன் குணசீலனை ஒருநாள் படிக்காமல் இருந்ததுக்காக, பத்து வருஷத்துக்கு முன்னே என் கண்முன்னே முழிக்காதேடான்னு சொல்லி அடிச்சு விரட்டிட்டேன். அதனாலே அவன் ஊரை விட்டே ஓடிப் போய் விட்டான். இப்போ ஒவ்வொரு நாளும் என் மனக்கண்ணை விட்டு நீங்கவே மாட்டேங்கறான். எப்போ அவனை நான் பார்க்கப் போறேனோ? இப்போ அதை நினைச்சுத்தான் எனக்கு...'' என்று சொல்லிக்கொண்டே கண்களைத் துடைத்துக்கொண்டு வீட்டை நோக்கி நடந்தார் வேதலிங்கம்.



வேதலிங்கத்தின் வீடு — அவரைப் போலவே தனித்து — ஊரின் கடைசியில் இருந்தது. வீட்டுக்கு வந்தவுடன் வைத்தியர் கொடுத்த மருந்தைச்சாப்பிட்டுவிட்டுப் படுத்துக் கொண்டார்.

இரண்டு நாட்களாகவே அவர் உடல் நலம் இன்றி வாட்டமுடன் இருந்தார்.

படுத்த உடனே அவருக்கு மார்பை வலித்தது. மார்பை அழுத்திப் பிசைந்தார். மெதுவாய் எழுந்து சென்று மண்பானையில் வைத்து இருந்த தண்ணீரை எடுத்துக் குடித்தார். மார்பு வலி பொறுக்க முடியாமல் கட்டிலில் வந்து சாய்ந்தார். தம் மனைவியின் உயிரையும், மகனின் உடலையும் பறி கொடுத்த அவர், இன்று தம் உயிர், உடல் இரண்டையும் இழக்கும் நிலையில் இருந்தார். ஆதரவுக்கு யாருமில்லை. கண்களில் கசிந்த நீர் அவரது துயரங்களைக் கூறிக்கொண்டே வழிந்து வழிந்து ஓடியது.

இறக்கும் நிலையில் கூடத் தம் மகனைப் பார்க்க முடியவில்லையே என்று நினைத்துத்தான் அவர் மனம் உருகினார்.

பொழுது விடிந்தது.

வேதலிங்கத்தின் வீட்டின் உள்ளே கூட்டம்.

அவர் இறுதிப் பயணத்தைத் தகுந்த மரியாதையுடன் செய்வதற்காகத்தான் கிராம மக்கள் கூடியிருந்தார்கள். அவ ரிடம் படித்த அந்தக் குழந்தைகள், கட்டிலைச் சுற்றி அமர்ந்திருந்து கதறிக் கண்ணீர் விட்டார்கள்.

அவருக்கா ஆதரவு இல்லை?

இவர்களெல்லாம் அவரது 'குழந் தைகள்' இல்லையா?

இந்த மக்களெல்லாம் அவரது 'சுற்றத்தார்கள்' இல்லையா?

ஆம், வாத்தியார் வேதலிங்கத்தின் வாழ்வு முடிந்து விட்டது.

எந்த மகனின் வரவுக்காக எதிர் பார்த்துக் கொண்டிருந்தாரோ அந்த மகனைப் பார்க்காமலே கண்ணை மூடி விட்டார்.

''சார் போஸ்ட்!''

தபால்காரர் வீசிய கடிதம் வேத லிங்கத்தின் பூத உடல் மீது வந்து விழுந்தது.

அதை ஒருவர் எடுத்துப் படித்தார்.

கடிதம் இந்திய எல்லைப் பகுதியில் இருந்து வந்திருந்தது. அந்நிய நாட் டுடன் நடந்த போரில், பாரத நாட் டுக்காகத் தன் உயிரை அர்ப்பணித்துக் கொண்டதற்காக, இறந்து போனவும் அவரது மகன் குணசீலன். அவனுக்கு அளிக்க வேண்டிய அரசினர் விருதை வந்து பெற்றுச் செல்லும்படி, ஆசிரியர் வேதலிங்கத்துக்கு வந்த கடிதமே அது.

ஆனால்...

'விருது மட்டும் எனக்கு வேண் டாம். அவனை நேரிலேயே சந்தித்துக் கொள்கிறேன்' என்றல்லவா வேத லிங்கம் மகனைத் தேடிப் போய்க் கொண்டிருக்கிறார். வேதலிங்கம் கண் களிலிருந்து கண்ணீர் வடிந்து கொண்டு தான் இருந்தது.


''பாவம்! நாட்டுக்காகத் தம் மகன் உயிர் நீத்தான் என்ற நல்ல செய் தியை அறிந்து கொள்ளாமல் மனுஷன் போயிட்டாரே?'' என்று கூட்டத்தினர் அங்கலாய்த்தனர்.

ஆனால், அவர்களுக்குத் தெரியாது... வீரமரணம் அடைந்த தம் மகனை அவர் வீர சொர்க்கத்தில் கண்டு கட்டித் தழுவி — ஆனந்தக் கண்ணீர் விடுகிறார் என்பது.

அவன் அந்நியனை எதிர்த்துப் பகை இருளை அழித்தான்.

அவரோ அறிவினைக் கொடுத்து அக இருளை அழித்தார்.

மகன் தந்தைக்காற்றும் நன்றி இதுதானோ!





பட்டுப் பாவாடை

லட்சுமி ராஜரத்னம்



தீபாவளி நெருங்கிக் கொண்டிருந்தது. சித்ராவின் அம்மா ரேவதி வேகமாகத் தையல் மெஷினை ஓட்டிக் கொண்டிருந்தாள். கணவனை இழந்தபின் அவளுக்கும், சித்ராவுக்கும் அந்தத் தையல் மெஷின்தான் சோறு போட்டது என்று சொல்லலாம். ரேவதியும் ஏனோதானோவென்று தைக்காமல் நன்றாகத் தைத்துத் தருவாள். அதனால் வாடிக்கையாளர்கள்-அதிலும் பெண்கள் அவளிடம் நிறையவே தைக்கக் கொடுத்து வந்தார்கள்.

தீபாவளியோ நெருங்கி விட்டது. வெடிச் சப்தம் தீபாவளி வந்து விட்டது என்பதை நினைவுபடுத்தியது. மூலையில் மலைபோல் குவிந்து கிடக்கும் துணிகளைப் பார்த்தாள். பிரமிப்புதான் ஏற்பட்டது. ஒரு டீ குடித்தால் தேவலாம். மெஷினை விட்டு எழுந்து நின்ற போது ''ரேவதியம்மா, ரேவதியம்மா'' என்று கூப்பிட்டபடியே வந்தாள் பார்வதி.

''என்ன பார்வதி, இவ்வளவு அவசரம்?'' என்று கையைச் சொடக்கி நீவி விட்டுக் கொண்டே கேட்டாள் ரேவதி.

''நம்ம பெரிய வீட்டு மகனுக்கு இந்த வருஷம் தலை தீபாவளியாச்சே, எல்லாருமா இன்னும் இரண்டு நாளிலே சம்பந்தி வீட்டுக்குப்போகப் போறாங்க. பொண்ணு வீட்டிலே இந்தப் பாவாடையைப் பெரிய வீட்டு ஜெயந்திக்குக் கொடுத்து அனுப்பி இருக்காங்க. இதை உடனே தச்சுத் தரச் சொன்னாங்க...''

பார்வதி நீட்டிய துணிப் பொட்டலத்தை வாங்கிப் பார்த்தாள் ரேவதி. சிவப்பு நிறத்தில் சரிகை இழைகள் பளபளக்கக் கையில் நிற்காமல் துவண்டது.

''தீபாவளி நேரம்... பொறுமையாகத் தைக்கணும். துணி வழுக்கிக் கிட்டே போகுது பார்வதி. இப்பக் கொண்டு வந்து தர்றியே!'' என்று இழுத்தாள் ரேவதி.

''நல்லாத் தச்சுக் கொடு ரேவதியம்மா. கூலி கொஞ்சம் போட்டுத்தரச் சொல்றேன்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டாள் பார்வதி.

'பெரிய வீட்டு ஜெயந்தி நல்ல சிவப்பு. அவளுக்கு இந்தத் துணியைத் தைத்துப் போட்டுக் கொண்டால் நன்றாக இருக்கும்' என்று எண்ணிய பொழுது, ''ஏன் உன் மகள் சித்ராவுக்கு மட்டும் நன்றாக இருக்காதா?'' உள் மனம் கூக்குரலிட்டது. 'நன்றாகத்தான் இருக்கும். ஆனால் தகுதி இல்லாதவர்கள் ஆசைப்படக் கூடாது' என்று தன் மனத்தை அவள் அடக்கினாள்.

ஒரு டீயைக் குடித்து விட்டு அந்தத் துணியை அளவு எடுத்த பொழுது சித்ரா பள்ளிக்கூடம் விட்டு ஓடி வந்தாள்.

''ஹை... அம்மா... யார் வீட்டுத் துணியம்மா?'' என்று கேட்டுக் கொண்டே ஓடி வந்து கையால் தடவிப் பார்த்தாள். கண்கள் அகல விரிந்தன.

''உன் வகுப்பிலே படிக்கிறாளே ஜெயந்தி அவளுக்குத்தான்.''

மகள் ஏக்கப் பெருமூச்சு விடுவதைக் காணப் பொறுக்காமல் தலையைக் குனிந்து கொண்டாள் ரேவதி.

''அம்மா... எனக்குத் தீபாவளிக்குப் பாவாடை எடும்மா.''

மகளின் தலையைக் கோதி விட்ட ரேவதி ''எடுக்கலாம்மா... உனக்கு டீ வச்சிருக்கேன்... போயி குடி...டப்பா விலே கொஞ்சம் மிக்சர் இருக்குது. எடுத்துக்க'' என்றாள்.

குழந்தை சித்ரா நகரவில்லை. ''அம்மா, எனக்கு என்ன பாவாடை எடுக்கப் போறே?''

ரேவதிக்கோபேசுவதற்குப்பொறுமை இல்லை. தைத்துத் தைத்துக் கைகளும் தலையும் வலித்தன. ஆனால், தன் ஆசை மகளைக் கடிந்து பேசவும் முடியவில்லை.

''நல்லதா எடுத்துத் தாரேன்.''

''இது மாதிரி எடும்மா.''

ரேவதிக்குச் சிரிப்பு வந்தது. ''இது மாதிரியா? என்னம்மா நீ? இது இங்கே கிடைக்காது. இது சிங்கப்பூர்த் துணி!''

சித்ரா சிறிது நேரம் யோசித்தபடி மூலையைப் பார்த்தாள். ''சரிம்மா... எனக்குப் பட்டுப் பாவாடையாவது வாங்கிக் கொடும்மா...''

ரேவதி மகளைக் கூர்ந்து பார்த்தாள். 'இவளுக்கு என்ன தெரிகிறது? சுமை தெரியாத தேன் சிட்டு.... பட்டுப் பாவாடை என்ன, வாங்குகிற விலையிலா விற்கிறது?'

''என்னம்மா வாங்கித் தர்றியா? என் தோழிகள் வீணா, கீதா, பாமி, கண்ணம்மா எல்லாரும் பட்டுப் பாவாடை வாங்கிட்டு இருக்காங்களாம்.''

பட்டுப் பாவாடையா? இந்த துணிகளையும் தைச்சுக் கொடுத்தாக் கூட அவ்வளவு பணம் வருமா? ரேவதிக்கும் ரெண்டு மாற்றுப் புடவைகள் வாங்கியாக வேண்டும். கொஞ்சம் அரிசி வாங்கிப் போட்டுக் கொள்ள வேண்டும்! இதெல்லாம் இந்தக் குழந்தைக்கு என்ன தெரியும்! கண்கள் குளமாகக் கணவனின் புகைப் படத்தைப் பார்த்தாள்.

சித்ரா பட்டுப் பாவாடையை மறக்கவில்லை. தினமும் பள்ளிக்கூடத்தி லிருந்து வந்து புத்தக மூட்டையைப் போட்ட பின்பு ஓடிவந்து அம்மாவின் கழுத்தைக் கட்டிக்கொண்டு, ''அம்மா, இன்னிக்குப் போகலாமா? அப்புறம் நல்ல பட்டுப் பாவாடை எல்லாம்



புதுமொழிகள்

-ஜோ. பத்மினி

குருடன் பார்வைக்கு அலைந்தால்
திருடன் பர்சுக்கு அலைவதா!

'இட்லி'யே ஒசியிலே கிடைக்குமான்னு
போனால்
சட்னிக்கும் தனியா காசுகேட்டானும்.

படிப்பதே இரவல் பேப்பராம்.
பாதி கிழிஞ்சிருக்குதுன்னு சண்டை
வேறு?

வாங்கறதைத் திருப்பிக் கொடுக்கிற
பழக்கமில்லே.
வட்டி எவ்வளவு இருந்தாலென்ன?

'பல்ஸ் வீக்' என்றால் டாக்டரை
அழைக்கலாம்.
'பாட்டரி வீக்' என்றால் அவரையா
அழைப்பது?

விருந்தாளி குழந்தையென்றுஉபசரித்தா
விளையாட 'பிளேமவுத்' கேட்குதாம்!

வித்துப் போயிடும்'' என்பாள் கொஞ்சலாக.

''ஆகட்டும் கண்ணு, நாளைக்குப் போகலாம்'' என்றாள் ரேவதி.

மறுநாள். சித்ரா பள்ளிக்கூடத்திலிருந்து வந்தாள். ''அம்மா, கிளம்பலாமா?'' என்ற கேள்வியுடன் வந்தாள்.

நடுப்பகலில் ரேவதி தன்னிடம் சேர்ந்திருந்த பணத்தை எண்ணிப் பார்த்தாள். இருநூறு ரூபாய் சேர்ந்திருந்தது. எப்படிப் பட்டுப்பாவாடைக்குப் போதும்? அடுத்த வீட்டு அம்மாளிடம் சொல்லி, தெரிந்த கடையில் இரண்டு மாதத்தில் மீதிப் பணத்தைத் தருவதாகச் சொல்லி வைத்திருந்தாள்.

சித்ராவுடன் கிளம்பினாள் ரேவதி. அவர்கள் வீடு நகரை விட்டுச் சற்றுத் தொலைவில் இருந்தது. மெல்ல மகளின் கரத்தைப் பிடித்துக் கொண்டு கடைத் தெருவை நோக்கி நடந்தாள். திரும்பி வரும் பொழுது குழந்தைக்கு அல்வா வாங்கித்தர வேண்டும் என்று எண்ணிக் கொண்டாள்.

அவர்கள் பாதித் தூரம் சென்றிருப்பார்கள். பெரிய திடல் சின்னச் சின்னத் துணிக் கூடாரங்கள்..

''இங்கே யார் வசிக்கிறாங்கம்மா?''

''ஊசி, மணி விக்கிறவங்க. கூடை முடையறவங்க.'. இப்படிப் பலதரப்பட்டவங்க இருக்காங்க சித்ரா.''

''இவங்களெல்லாம் ஏம்மா வீடு கட்டிக்கல்லே?''

''வீடு கட்டிக்கறதுன்னு பணம் வேண்டாமா?''

தங்கள் கூடாரங்கள் முன்னால் அவர்கள் கற்களைக் கூட்டி வைத்துச் சமையல் செய்து கொண்டிருந்தார்கள். அடுப்பைச் சுற்றி ஆண்களும், பெண்களுமாய் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

''வேகமா நட சித்ரா. மழை வரும் போல இருக்கு. கடைத் தெரு இன்னும் ரொம்பத் தூரம் இருக்கு!''

இடுப்பில் அரைகுறை ஆடைகளுடன் அங்கே விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் மீது வைத்த பார்வையைத் திருப்பிக் கொண்டு தாயின் வேகத்துக்கு ஓடினாள் சித்ரா.

படபடவென்று வந்த மழை, இரண்டே நிமிடத்தில் பலத்த மழையாகி விட்டது. சித்ராவின் கையைப் பற்றிக் கொண்டு எதிரில் உள்ள பெரிய வீட்டின் திண்ணையில் ஒண்டிக் கொண்டாள் ரேவதி.

மழையின் நீர்த் திரையைத் தாண்டிப் பார்வையைக் கூடாரங்கள் மீது தாவ விட்டாள் சித்ரா. சற்று முன் ஆரஞ்சு சுவாலையுடன் எரிந்த தீ தண்ணீர் பட்டு நன்றாக அணைந்திருந்தது. அவசர அவசரமாகச் சோற்றுப் பானையுடன் துணிக் கூடாரங்களுக்குள் ஓடினார்கள் அவர்கள்.

மழை நீரின் வேகம் அதிகரித்தது. தெருவில் தண்ணீர் சிற்றோடைகளாக ஓடியது. கூடாரங்களின் உள்ளேயும் தண்ணீர் ஓடியது. மேடு, பள்ளம், என்று பாராமல் அப்படி ஒரு வெள்ளம்... தண்ணீர்ப் பிரவாகம்... மழையின் வேகத்தைத் தாங்க முடியாமல் கூடாரத்து மக்கள் தங்கள் குழந்தைகளுடன் ஓடிவந்தார்கள். சித்ராவும், அவள் அம்மாவும் நின்ற திண்ணைகளிலும், அடுத்துள்ள இடங்களிலும் ஓடி ஒதுங்கினார்கள்.

குழந்தைகள் குளிரால் நடுநடுங்கினர். சுவருடன் ஒட்டிக் கொண்டனர்.

''யம்மா, சோறும்மா... பசிக்குது. எப்பம்மா போடுவே?'' என்று சுருதி வேறு கூட்டினார்கள்.

சுமார் ஐந்து மணிக்கு ஆரம்பித்த மழை எட்டு மணியளவில் தான் கொட்டித் தீர்த்த திருப்தியுடன் நின்றது.

''வாம்மா சித்ரா, போகலாமா? ரொம்ப நேரம் ஆயிடுச்சு. கலர் கூடச் சரியாகத் தெரியாது'' என்று மகளின் கரத்தைப் பற்றிக் கொண்டாள் ரேவதி.

மழை நீரில் இறங்கியதும் சிலீரென்ற குளிர் தேகத்தை நடுங்க வைத்தது.

''சோறெல்லாம் என்னாச்சுதோ? வாங்க கரைச்சு ஊத்தறேன். ராவுக்குப் படுக்க எங்கேயாச்சும் இடம் தேடணும்'' என்று கூடாரத்து மக்கள் ஓடினார்கள்.

மகளுக்குக் குளிருமே என்று முந்தானையை எடுத்து மகள் மேல் பட்டும் படாததுமாகப் போர்த்தினாள் ரேவதி.

''அம்மா, வழக்கம் போல சுமாரான விலையில் பாவாடை, சட்டை எடுத்துடும்மா'' என்ற சித்ராவை ஆச்சரியத்துடன் பார்த்தாள் ரேவதி.

''ஏம்மா? ஏன் திடீர்னு இப்படிச் சொல்றே? ஒரு வாரமாய் பட்டுப் பாவாடை, பட்டுப் பாவாடைன்னு ஜபம் பண்ணினே... பிடிவாதம் பிடிச்சே...'' என்று கேட்டாள் ரேவதி.

''வீணா, கமலா, பாமி, கண்ணம்மா — இப்படிப் பணக்காரங்க வாங்கினது தான் அப்ப எனக்குத் தெரிஞ்சுது. தங்குறதுக்குக் குடிசை இல்லாமே, உடுத்தவும் துணி இல்லாமே இருக்கறவங்களைப் பார்த்ததும் தான் நாம எவ்வளவோ தேவலைன்னு நல்லாப் புரிஞ்சுக்கிட்டேன். கடன் வாங்கியாவது பட்டுப் பாவாடை வாங்கித் தான் தீரணுமா? வேண்டாம்மா'' என்றாள் சித்ரா.

மகள் வாழ்க்கையைப் புரிந்து கொண்டாள் என்ற திருப்தி ரேவதிக்கு ஏற்பட்டது. மகளைப் பரிவுடன் தழுவிக் கொண்டாள்.

பொக்கைவாய்ப் புன்னகையுடன் போட்டியிடும் பாப்பா!



பிருந்தாவனம்

கிரிக்கெட் வீரர்கள் - தெரு



சென்னைநகரில் சில தெருக்களின் பெயர்களைப் பார்க்கும் போது, அவை நமக்குக் கிரிக்கெட் வீரர்களின் பெயர்களை நினைவூட்டுகின்றன: இதோ சில:

சேப்பல் சர்ச் தெரு,
கிரிபத் ரோடு,
ஹால்ஸ் ரோடு,
மில்லர்ஸ் ரோடு,
வுட்ஸ் ரோடு,
டேவிட்சன் ரோடு,
டெய்லர்ஸ் ரோடு,
வையிட்ஸ் ரோடு,
மார்ஷல்ஸ் ரோடு.

—எம். ஆர். ஸ்ரீப்ரியா
சென்னை—33.

தேசிய விளையாட்டு



ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு விளையாட்டு தேசிய விளையாட்டாக இருக்கும். இங்கே, சில நாடுகளில் தேசிய விளையாட்டுக்களைக் காணலாம்.

நாடு	தேசியவிளையாட்டு
இந்தியா	—ஹாக்கி
ஆஸ்திரேலியா	—கிரிக்கெட்
கனடா	—ஐஸ் ஹாக்கி
ஜப்பான்	—கராத்தே
அமெரிக்கா	—பேஸ்பால்
இங்கிலாந்து	—கிரிக்கெட், ரக்பி, புட்பால்.
ரஷ்யா	—செஸ்

—எஸ். கார்த்திகேயன் (1122),
தேமத்தான்பட்டி.

டெலிபோனில் முதல் பேச்சு



டெலிபோனைக் கண்டுபிடித்த ஆல்பர்ட் கிரகாம் பெல், முதல் முதலாக மாடியில் இருக்கும் தம்முடைய நண்பருடன் பேசினார். என்ன பேசினார்?

''மிஸ்டர் வாட்ஸன், கீழே வாருங்கள்; வேலை இருக்கிறது.''

—எஸ். மாதவன் (204), திருச்சி.

ஒரு G+4T

'ஒரு G'யும் '4 T'யும் சேர்ந்தால் என்ன வரும்?

'ஒரு G' '4T'— இதை வேகமாகச் சொல்லுங்கள். Originality வரும்.

—வி. சாரதா (1699).


சர்டிபிகேட்

''டேய், நான் இதுவரை ஐந்து ஸ்கூலில் படிச்சிருக்கேன். நாலில் சர்டிபிகேட் வாங்கியிருக்கேன்.''

''எந்தப் போட்டியில்? பேச்சுப் போட்டியிலா? ஓவியப் போட்டியிலா? கட்டுரைப் போட்டியிலா?''

''எந்தப் போட்டியிலும் இல்லே. ஒவ்வொரு ஸ்கூலிலும் டிரான்ஸ்பர் சர்டிபிகேட் வாங்கியதைத்தான் சொன்னேன்.''

-அ. முருகன் (5483), ஆத்தூர்.





தாத்தாவுக்கு எதற்கு?

''நீதான் பஸ் பாஸ் வாங்குகிறாய். உன் தாத்தாவுக்கு எதுக்கு பஸ்பாஸ்?''

''எங்க தாத்தா முதியோர் கல்விக் கூடத்தில் படிக்கிறாரே!''

—கே. வெங்கடேசன் (4145), சுந்தராபுரம்.



சாவி வந்தும் சங்கடம்!

கல்லூரி விடுதியில் இருந்த ஒரு மாணவன் அறைச் சாவியைத் தொலைத்து விட்டான். தன் நண்பனின் அறையில் தங்கிக் கொண்டு, பூட்டின் மற்றொரு சாவியை உடனே அனுப்பும்படி தன் பெற்றோருக்கு எழுதினான். 'மூன்று நாட்களாகியும் சாவி வரவில்லையே!' என்று கவலைப் பட்டான். நாலாம் நாள் அவன் வெளியே போயிருந்த சமயம் தபால்காரர் விடுதிக்குள் போய்க் கடிதங்களைக் கொடுத்து விட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அவரை வழியில் பார்த்த அந்த மாணவன், ''எனக்கு ஏதாவது தபால் உண்டா?'' என்று கேட்டான்.

''ஆமாம் தம்பி. கனமாக ஒரு உறை உன் பேருக்கு வந்திருந்தது. உன்னைக் காணோம். அறையும் பூட்டியிருந்ததாலே, கதவுக்குக் கீழே இருக்குதே இடைவெளி, அது வழியாக உள்ளே தள்ளிவிட்டேன். போய் அறையைத் திறந்து எடுத்துக்கொள் தம்பி'' என்று சொல்லி விட்டு வேகமாகப் போய் விட்டார் தபால்காரர்.

பத்மஜா (3356), கடலூர்–1.

எடிசன் சொன்னது?

ரப்பர் மரத்தைத் தவிர புதிய மரஞ் செடிகள் எவற்றிலாவது இயற்கையான ரப்பர் கிடைக்குமா என்று 50,000 தாவர வர்க்கங்களை தாமஸ் ஆல்வா எடிசன் சோதித்துப் பார்த்து விட்டார். எதுவும் பயன்படவில்லை.

பக்கத்திலிருந்த நண்பர் ''மிஸ்டர் எடிசன், நம்முடைய 50,000 சோதனைகளுக்கும் ஒரு பலனும் இல்லாமல் போய் விட்டதே!'' என்று கூறி வருத்தப்பட்டார்.

''ஏன் பலன் இல்லை? இந்த 50,000 மரம் செடிகளும் ரப்பர் செய்யப் பயன்படாது என்று அறிந்தோமா, இல்லையா?'' என்று அமைதியாகப் பதில் அளித்தார் எடிசன்.

—சே. கோகுல் (4556), சென்னை–38

டீன் ஏஜ்

'டீன் ஏஜ்' என்கிறார்களே, அது எந்த வயதிலிருந்து எந்த வயது வரை தெரியுமா? 13—ஐ தர்டீன் (Thirteen-என்கிறோம். இது போல் 19ஐ நைன்டீன் (Nineteen) என்கிறோம். இடையிலுள்ள எல்லாமே டீன், டீன் (teen) என்று தான் முடியும். அதனால்தான் 13 முதல் 19 வயது வரை 'டீன் ஏஜ்' என்கிறார்கள்.

—த. அருள்சிவபாலன் (47), செங்கற்பட்டு.



என்னைக் கவர்ந்த விளம்பரங்கள்

காண்போரைக் கவரும் வண்ணம் விளம்பரம் செய்வது ஒரு கலையாகும். நான் பார்த்த விளம்பரங்களில் என்னைக் கவர்ந்தது:


மனிதன் மனிதனுக்குச் சொன்னது
—திருக்குறள்.

மனிதன் தெய்வத்துக்குச்சொன்னது
—திருவாசகம்.

தெய்வம் மனிதனுக்குச் சொன்னது
—பகவத் கீதை.

இந்த மூன்று நூல்களையும் படிக்க வேண்டும் என்று பழனி கரு. சேது புத்தகக் கடையினர் விளம்பரம் செய்துள்ளனர்.

—இரா. முருகன் (3296), பழனி.






தமிழ் மாதங்களில் இருப்பவை

சின்னம்மா இருக்கும் மாதம்-'சித்தி'ரை
புண்ணியத்தலம் இருக்கும் மாதம் - வை'காசி
பசு இருக்கும் மாதம் — 'ஆ'னி
கண்ணாடி இருக்கும் மாதம் — 'ஆடி'
சுவரில் அடிப்பது இருக்கும் மாதம் 'ஆ'வ'ணி'
சாப்பிடச் சொல்லும் மாதம் — 'பு'ரட்டா'சி'
சாப்பிடாத போது 'இது' எடுக்கும் மாதம் —ஐப்'பசி'
மேகம் இருக்கும் மாதம் —'கார்'த்திகை
தடி இருக்கும் மாதம் — மார்'கழி'
குதிக்கும் மாதம் — 'தை'
பெரியதைக் குறிக்கும் மாதம் —'மா'சி
உடம்பை வளைக்கச் சொல்லும் மாதம்- பங்'குனி'

—ரா. மது (1121), கோவை—2.



குப்பைத் தொட்டி


ஏ... குப்பைத் தொட்டியே
உன்னை நிரப்பும் குப்பையைக்
கண்டு குமுறி வெதும்பாதே!
என்றைக்காவது சுத்தம் செய்து விடுவார்கள்.

எங்கள் இதயங்கள் கூட
குப்பை எண்ணங்களால் நிறைந்து கிடக்கின்றன.
சுத்தம் செய்வது யார்?

—ஆர். கார்த்திகேயன் (586), பாண்டிச்சேரி—4.

பறவைகள் பலவிதம்.

கோவி_



ஆப்பிரிக்கா ஜக்கானு

இப்பறவை நீரில் மிதக்கும் இலையின் மீது லாவகமாக நிற்க வல்லது. உடலளவு பறந்த இதன் கால்கள் மற்ற பறவைகளை ஒப்பிடுகையில் மிகப் பெரியவை.



கிரீ:ப்பின் கழுகு

ஆஸ்திரேலியத் தலை நகர் வியன்னாவின் மிருகக் காட்சிசாலையில் இது 118 வருடங்கள் உயிர் வாழ்ந்தது.

புலிப் பறவை

தென்னமெரிக்காவில் பிட்டர்ன் என்ற இப் பறவை விரோதிகளிடமிருந்து தற்காத்துக் கொள்ள புலியைப் போல் கர்ஜிக்கும்.





இதுக்கு மேலே...!

தி. வி. அரிகிருஷ்ணன்

காட்சி 1

இடம்: வீதி.

பங்கேற்போர்: மாணவர்கள் ரவி, கோபு, சேகர்.

(மாணவர்கள் மூவரும் புத்தகங்களுடன் சென்று கொண்டிருக்கிறார்கள்.)

ரவி: (கோபுவின் தோளில் கையைப் போட்டுக் கொண்டு) அப்போ, உன் பக்கத்து வீட்டுப் பையன் 'சரியான சீனுன்னு' சொல்லு, அப்படித்தானே?

கோபு: ஆமாண்டா...

சேகர்: (ஆர்வத்தோடு குறுக்கிட்டு), அது என்னடா சரியான சீனுன்னு புதுசா ஏதோ சொன்னே? அப்படின்னு என்னடா அர்த்தம்?

கோபு: டேய் சேகர், நீ பள்ளிக்கூடத்துக்கே புதுசு! அதனாலே, உனக்குப் புரியலே!

ரவி: (இடைமறித்து) அதாவது நம்ம கிட்ட ஒருத்தர் பேனாவோ, புத்தகமோ வாங்கித் திருப்பிக் கொடுக்காம ஏமாத்திட்டா என்ன சொல்வோம்...?

சேகர்: நாமம் போட்டுட்டான்னு சொல்வோம்.

ரவி: ஆமாம், அதே மாதிரிதான் யாரையாவது சிடுமூஞ்சி, கஞ்சன், பத்தாம்பசலின்னு சொல்றதுக்குச் 'சரியான சீனுன்னு' பட்டம் சூட்டுவோம். ஏன்னா, நம்ப வகுப்பிலே தனியா உட்கார்ந்திருப்பானே சீனு, அவன் அந்த மாதிரி டைப்!

(அப்போது வேகமாக வந்து கொண்டிருந்த சீனு அவர்களைக் கடந்து செல்கிறான்.)

சேகர்: ஆமாண்டா; நீங்க சொல்றது ரொம்பப் பொருத்தமான வார்த்தைதாண்டா! நாமோ அரட்டை அடிச்சுக்கிட்டு ஜாலியா இருக்கோம். இவன் என்னடான்னா, நம்மோட கலந்துக்காமே இதுக்கு மேலே தலைபோகிற மாதிரி ஒதுங்கிப் போறானே!

காட்சி 2

இடம்: வகுப்பறை: பங்கேற்போர் ஆசிரியர், மாணவர்கள்.

ஆசிரியர்: மாணவர்களே! அடுத்த ஞாயிற்றுக் கிழமை காலை ஐந்து மணிக்கெல்லாம் இங்கிருந்து கிளம்பி மகாபலிபுரம் போகிறோம்...

சேகர்: சார்! அவ்வளவு காலையிலே எப்படி சார் வர முடியும்? ரொம்ப தூரத்திலேயிருந்து நான் வரணுமே சார்?

ஆசிரியர்: அவசரப்படாதீர்கள்! அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். ரொம்ப தூரத்திலேயிருந்து வர்றவங்க சனிக்கிழமை இரவு பள்ளிக்கூடத்திலேயே தங்க ஏற்பாடு செய்திருக்கோம். ஏன்னா... காலையில் சீக்கிரம் கிளம்பினாத்தான் நாம்ப போட்டிருக்கிற திட்டப்படி எல்லாவற்றையும் பார்க்க முடியும், சரிதானே!

(மணியடித்ததும் வகுப்பு கலைகிறது.)

காட்சி 3

இடம்: தெரு.

பங்கேற்போர்: சேகர், ரவி, கோபு, சீனு.

(சேகர், ரவி, கோபு மூவரும் போய்க் கொண்டிருக்கிறார்கள்.)

ரவி: டேய், இவ்வளவு மெதுவாப் போனா எப்படிடா? பந்தாடப் போக வேணாமா?

(சேகர் மெதுவாக நடக்கிறான். ரவி தலையில் அடித்துக் கொண்டே.)

சரியான சீனுடா நீ...

சேகர்: (திரும்பிப் பார்த்து) டேய், அதோ சீனுவே வந்துக்கிட்டு இருக்காண்டா. (மற்றவர்களும் திரும்பிப் பார்க்கிறார்கள். அப்போது சீனு அவர்களைக் கடந்து வேகமாகப் போகிறான்.)

கோபு: டேய் சீனு! (சீனு கவனிக்காமல் வேகமாகப் போய்க்கொண்டிருக்கிறான்.)

ரவி: (உரத்த குரலில்) டேய் சீனு! டேய்!

சீனு: (திரும்பிப் பார்த்தவாறே) என்ன?

ரவி: நாங்க பந்தாடப் போறோம்; நீயும் வர்றியா?

சீனு: இல்லே, வேலையிருக்கு...

சேகர்: அப்போ, நாங்கயெல்லாம் வேலை வெட்டி இல்லாதவர்களாடா? (கையைப் பிடித்திழுத்து) விளையாட வாடான்னு... இதுக்கு மேலே என்னடா தலை போகிற வேலை? பெரி...ய... வேலை?

ரவி: (குறும்பாக) டேய், அவனைப் போய்க் கூப்பிடறியே, அவன் வீட்டிலே மாவு அரைக்கணுமோ, துணி துவைக்கணுமோ!

கோபு: இல்லே... சாப்பாடே ஆக்கணுமோ, என்னவோ, பாவம்!

சீனு: (இருவரும் கிண்டல் செய்வதையறிந்து) நான் வரேன்... (அங்கிருந்து போகிறான்.)

சேகர்: டேய் ரவி! நீ கில்லாடி தாண்டா! சீனுவுக்குப் பரிஞ்சு பேசற மாதிரி அவனை மட்டமா தாக்கிட்டியே!

கோபு: ரவி வாழ்க! அவன் புகழ் ஓங்குக!

ரவி: சரி, சரி. தேர்தல் நேரத்திலே கேட்டுக் கேட்டு அலுத்துப் போன ஜோக், வாங்கடா, மணியாச்சு.

காட்சி 4

இடம்: வகுப்பறை.

பங்கேற்போர்: மாணவர்கள், ஆசிரியர்.

ஆசிரியர்: நான் சொன்னபடி ரொம்ப தூரத்திலே இருக்கறவங்கயெல்லாம் இன்னிக்குப் பள்ளியிலேயே தங்க இரவே வந்திடுங்க.

ரவி: சார், நம்ப சீனுவுக்கு அந்தப் பிரச்சினைக்கே இடமில்லே, சார்!

ஆசிரியர்: ஏன்?

கோபு: அவன்தான் வரப் போறதில்லையாமே!

ஆசிரியர்: (சீனுவின் பக்கம் திரும்பி) உண்மையாகவா, சீனு?

சீனு: ஆமாம் சார்! எனக்கு வசதிப்படாது.

ஆசிரியர்: பணம் கிடைக்கலியா?

சீனு: அதெல்லாம் ஒண்ணுமில்லே சார்! வரச் சந்தர்ப்பமில்லே.

ரவி: அவன் எப்போதும் இப்படித்தான் சார்! யாரோடும் கலந்துக்காத 'சிடுமூஞ்சி'...

ஆசிரியர்: அப்படியெல்லாம் யாரும் யாரையும் சொல்லக் கூடாது. அது அவரவர் சூழ்நிலையைப் பொறுத்தது.

சேகர்: (எழுந்து நின்று) சார்! நான் டிரான்சிஸ்டர் எடுத்துக்கிட்டு வரலாமா, சார்?

ஆசிரியர்: உங்க வீட்டிலே டி. வி. இருக்குதா?

சேகர்: ஏன் சார் கேக்குறீங்க?

ஆசிரியர்: (நகைச்சுவையாக) ஏன்னு, டிரான்சிஸ்டருக்குப் பதிலா டி.வியை வேணுமானாலும் எடுத்துக்கிட்டு வரலாம்னு சொல்றதுக்காகத்தான் கேட்டேன்.

(மாணவர்கள் அனைவரும் ஆரவாரம் செய்கிறார்கள். சேகர் வெட்கத்துடன் தலை குனிகிறான்)

ஆசிரியர்: உஸ், அமைதி! சேகர், நான் எதுக்குச் சொன்னேன் தெரியுமா? பள்ளிக்கூடத்திலே படிப்பது மட்டும் பாடமல்ல — பிரயாணம் போவதும் படிப்பதற்குச் சமம் தான். ஒரு இடத்துக்குப் போகும்



போது நகை, பணம், விலை உயர்ந்த கைக்கடிகாரம்னு எடுத்துக்கிட்டுப் போகக் கூடாது. நம் சிந்தனையெல்லாம் எப்போதும் அதன் மேலேயே இருக்குமே தவிர போகிற இடத்திலே பார்க்க வேண்டியதைப் பார்க்கவோ, ரசிக்கவோ, மனம் போல ஓடி, ஆடவோ முடியாமல் இடையூறாக இருக்கும்! அல்லது நம் சிந்தனை வேறு எதிலாவது ஈடுபட்டு விட்டால், நாம் பொருட்களைத் தவற விட்டுவிட்டுப் பிறகு வேதனைப் பட வேண்டியிருக்கும்.

சேகர்: உண்மையான பேச்சு, சார்!

ஆசிரியர்: சிலருக்குப் புரியாமல் இருக்கலாம். ஆனால், என்னுடைய அனுபவத்திலே எத்தனையோ அசம்பாவித சம்பவங்களைக் கண்டிருக்கிறேன். (சிறிது நேரம் யோசித்து) ஒருசமயம், மாணவர்கள் அனைவரும் நதியில் குளித்துக் கொண்டிருக்கும் போது, தாமோதரன்னு ஒரு பையனின் கழுத்திலிருந்த மைனர் செயின் தண்ணீரில் விழுந்துவிட்டது. அதுவும் அவன் அதை அவனுடைய மாமாவிடம் கேட்காமலேயே எடுத்து வந்திருக்கிறான். வெகு நேரம் தேடியும் கிடைக்காமல் முகம் வீங்கும் வரை அழுதுவிட்டான். இந்த அதிர்ச்சியின் காரணத்தால் திட்டமிட்டபடி எங்களால் பல இடங்களைக் காண முடியவில்லை. மற்ற மாணவர்களுக்கும் உற்சாகம் பறந்து போய்ச் சோகம் கப்பிக் கொண்டது. இதற்காகவா நாம் பயணம் போகிறோம்! இம்மாதிரி வீணான சோதனைகளெல்லாம் அவசியமா? சிறிது யோசித்துப் பாருங்கள் உங்களுக்கே தெளிவாகப் புரியும்!

கோபு: அப்படித்தான் சார், எங்க வீட்டிலே இருந்த துரை என்ற சிறுவன் மதுரைக்குப் போயிருந்த போது குளத்தில் தாமரைப்பூ பறிக்க முயன்றான். அப்போது அவனுடைய விலையுயர்ந்த பேனா தவறிக் குளத்தில் விழுந்துவிட்டது. அலறிக்கொண்டே பேனாவைத் தேடக் குளத்தில் இறங்கியதும் தாமரைக் கொடிகளில் அவன் கால்கள் சிக்கித் தவித்தானாம். மிகுந்த சிரமப்பட்டு அவனை வெளியே எடுத்தார்களாம்... அவன் வீட்டில் விஷயம் தெரிந்த பிறகு, அந்தப் பையனின் அப்பா அவனைப் புரட்டிப் புரட்டி உதைத்தாராம்!

ரவி: (கிண்டலாக) எப்படி உதைத்தார்டா?

கோபு: ஏன்? தெரிஞ்சுக்கணுமா? இங்கே வா, உதைத்துக் காட்டுகிறேன்.

(அனைவரும் சிரிக்கிறார்கள். ஆசிரியர் மேஜை மீது பிரம்பைத் தட்ட மாணவர்கள் அமைதியாகிறார்கள்.)

ஆசிரியர்: ரவி, எவ்வளவு முக்கியமான விஷயத்தைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கிறோம். இந்த நேரத்தில்தான் கிண்டல் பேச்சு பேசணுமா? நம் சிந்தனையைச் சிதறடிக்கக் கூடாது..

(மணியடிக்கவே வகுப்பு கலைகிறது. ஆசிரியர் ரவியைக் கையசைத்துக் கூப்பிடுகிறார்.)

ரவி: ஏன் சார்?

ஆசிரியர்: நாளைக்குச் சுற்றுப்பயணம் போகிறதுக்கு வேண்டிய கொஞ்சம் சாமான்களை இன்றிரவே வாங்கிட்டா நல்லதில்லையா?

(கோபுவும், சேகரும் ரவியின் பக்கத்தில் வந்து நிற்கிறார்கள்.)

ரவி: ஆமாம் சார், போகிற இடத்திலே செலவும் அதிகமாகும்; பொருளும் நல்லதா கிடைக்குமான்னு சந்தேகம்தான்.

ஆசிரியர்: நீங்களும் வாங்க! (கோபு, சேகர் பக்கம் திரும்பி) கடைத் தெருவுக்குப் போய் வரலாம்.

(கோபுவும், சேகரும் சரியென்று தலையசைக்கிறார்கள்.)

காட்சி 5

இடம்: வீதி.

பங்கேற்போர்: ஆசிரியர், ரவி, கோபு, சீனு, சேகர், குமார்.

(கையில் சாமான்கள் வாங்கிய பைகளுடன் ஆசிரியர் சேகர், கோபு, ரவி ஆகியோர் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள்.)

ஆசிரியர்: வேறு ஏதாவது வாங்கணுமா?

கோபு: இது போதும் சார்.

(ஆசிரியர் சிறு சந்து வழியே போகிறார்.)

ரவி: ஏன் சார், இந்தச் சந்து வழியா போறீங்க?

ஆசிரியர்: நடமாட்டமில்லாமல் அமைதியா இருக்குது. சிரமமில்லாமல் போகலாமேன்னுதான்.

(சிறிது தூரம் அனைவரும் நடக்கிறார்கள்.)

சேகர்: இருட்டா இருக்குதே, சார்!

ஆசிரியர்: இன்னைக்கு அமாவாசை அல்லவா? அப்படித்தானிருக்கும்.

(சிறிது தூரம் வந்ததும்) பேசாமே வாங்க, யாரோ பாடம் படிக்கிற சத்தம் கேட்குது.

ரவி: அதோ அந்தத் திண்ணையிலே யாரோ ரெண்டு பையன்கள் சிம்னி விளக்கிலே படிக்கிறாங்க.

ஆசிரியர்: உஸ்... சத்தம் போடாமே வாங்க. இதோ இந்தச் சுவர் மறைவிலே நின்னு கேட்கலாம்.

கோபு: சரி, சார்!

ஒரு குரல்: வேண்டாம் குமார்! எழுந்தாலும் உன்னால் உட்கார முடியாது. அப்படியே படுத்துக்கொண்டு இந்த மருந்தைக் குடி, இந்தா!

குமார்: அண்ணா! எனக்கு உடம்பு சரியில்லேன்னு நீ ஏன் இவ்வளவு சிரமப்படணும்! உன் வகுப்பிலே எல்லோரும் மகாபலிபுரம் போறாங்களாம். நீ மட்டும் அதுலே கலந்துக்கலே. 'உன் உடம்பு இருக்கிற நிலையிலே நான் உல்லாசப் பயணம் போகணுமா'ன்னு கேக்கறியே! அதுக்கு நான் எப்படி நன்றி சொல்றதுன்னே புரியலே..... உனக்கே தினமும் எத்தனையோ பிரச்சினை இருக்கும்போது, ஓட்டுத் திண்ணையில் இருக்கிற எனக்குத் தினமும் பாடம் சொல்லிக்கொடுத்திட்டு, அதுக்கு மேலே வீட்டுக்குப் போய்ப் பாடம் படிக்கிறே! இதில்லாமல் எனக்கு வசதியில்லேங்கறதுக்காக அடிக்கடி பென்சில், நோட்டுன்னு எப்படியோ வாங்கித்தர்றே.

சீனு: அடடே... குமார், ஒரேயடியா புகழ்ந்துக்கிட்டே போறியே? கொஞ்சம் நிறுத்து!

சேகர்: (மெதுவாக) சார், இது சீனு குரல் மாதிரி இருக்கே?

ரவி: சந்தேகமில்லே. சீனு குரலேதான்!

ஆசிரியர்: சீனுவேதான். மங்கலான வெளிச்சத்திலும் அவன் உருவம் தெரியுது. ஓசைப்படாமே கேட்கலாம்.

குமார்: சீனு அண்ணே, நான் தவறுதலாகவோ, இல்லாததையோ சொல்லலையே, அண்ணா? உம், என்னாலே சரியாப் பேச முடியலே (லொக், லொக் என்று குமார் இருமுகிறான்) இல்லேன்னா எப்படி எப்படியெல்லாமோ உனக்கு நன்றி சொல்லணும்.
நீ என்கிட்ட வைத்திருக்கிற பாசத்தையும் நீ எனக்குச் செய்கிற உதவியையும் நினைக்கிற போது, தெய்வமே உன் உருவத்திலே வந்து இந்தத் திக்கற்றவனுக்கு உதவுதுன்னு தோணுது. உங்கப்பா அம்மாவுக்கு இதெல்லாம் தெரிந்தால்...



என்ன பரிசு?

"நீ எட்டாம் வகுப்பு பாஸ் பண்ணினால் உனக்கு சைக்கிள் பரிசு..."

"தாங்ஸ் மாமா. பத்தாம் வகுப்பு பாஸ் பண்ணினால்...?"

"சைக்கிள் ரிக்ஷா."

சீனு: குமார், உனக்கு உதவி செய்யறதிலே எங்க அப்பா, அம்மாவுக்கு ரொம்ப சந்தோஷம். அவங்களுக்குத் தெரிந்தேதான் உனக்குத் தினமும் உதவி செய்து வருகிறேன்.

குமார்: (ஆச்சரியத்துடன்) அப்படியா!

சீனு: ஒருநாள் என் அப்பாவிடம் சொன்னேன். ''அப்பா, ஒரு ஏழைப் பையனை அவனுடைய அம்மா அடித்துக் கொண்டிருந்தார்கள். கூடவே, 'நானே நாலு வீட்டிலே எடுபிடி வேலை செய்து காலம் கழிக்கறேன். இந்தக் கழுதை என்னடான்னா படிக்கறதுக்கு ஸ்கூலுக்குப் போகணுமாம். இன்னொரு தடவை அடம் பிடிச்சாத் தீர்த்துக் கட்டிடுவேன்'னு சொன்னாங்க. ஆகவே, 'அவ்வளவு ஆர்வம் இருக்கிற பையனுக்கு எப்படியாவது உதவி செய்து படிக்க வைக்கணும்'னு சொன்னேன். அவரும் மகிழ்ச்சியோடு, 'நானும் அப்படித்தான்டா ஒருத்தர் ஆதரவிலே வளர்ந்து பெரியவனானேன்'னு சொன்னார். என்னாலே இந்த அளவாவது உனக்கு உதவ முடியறதிலே எனக்குச் சந்தோஷம். சரி, அப்புறம் ஒரு மணி நேரங் கழித்து மருந்து சாப்பிடு, என்ன?

இந்த நோட்டையும், பென்சிலையும் படுக்கைக்குக் கீழே வைக்கிறேன். (படுக்கைக்குக் கீழே வைத்துவிட்டு) வரட்டுமா?

குமார்: சரி அண்ணா! (சீனு எதிர்த் திசையிலே திரும்பிச் செல்கிறான்.)

ஆசிரியர்: சரி, சீனு போயிட்டான். வாங்க நாம் போகலாம்.

(அனைவரும் நடக்கிறார்கள்.)

ரவி: சார், சீனு தினமும் பள்ளிக் கூடம் முடிஞ்சதும் யாரோடும் விளையாடாமல் போய் விடுகிற காரணம் இப்போதுதான் புரியுது.

(தழுதழுத்த குரலில்) அவனுக்கிருக்கும் பெருந்தன்மையும் கடமையுணர்ச்சியும் எங்களுக்கில்லே சார்...

கோபு: எதிலும் கலந்துக்காமே இருக்கானேன்னு அவனை எல்லோரும் மட்டமா கேலி செய்து 'இதுக்கு மேலே என்னடா தலைபோற வேலை'ன்னு கேலி பண்ணி இருக்கோம்.

சேகர்: அவன்கிட்டே இருக்கிற பண்புக்காக நாங்க நாளைக்கு மன்னிப்புக் கேட்கிறோம் சார். மேலும் அவனுக்கு இனி உதவியாகவும் இருப்போம் சார்.

ஆசிரியர்: (மூவரையும் பார்த்து) காரியத்திலே... ஏன் லட்சியத்திலே கண்ணா இருந்ததாலே சீனு வீண் பெருமையையும், வம்பையும் புறக்கணித்தான். நீங்க, அவனை எவ்வளவு கலாட்டா செய்தீர்களோ அவ்வளவும் எனக்கு முன்பே தெரியும்!

(ரவி, சேகர், கோபு மூவரும் திகைக்கிறார்கள்.)

சேகர்: என்ன சொன்னீங்க சார்! உங்களுக்கு இதெல்லாம் முன்பே தெரியுமா?

ஆசிரியர்: தெரியாமலென்ன? சீனுவின் அப்பா என்னை அடிக்கடி கடைவீதியிலே சந்தித்து நீங்க சீனுவைக் கலாட்டா செய்கிற விஷயத்தையும் 'இதுக்கு மேலே என்னடா தலை போகிற வேலை'ன்னு அடிக்கடி அவனைக் கேட்டதையும், அதே நேரத்தில் தன் மகன் சீனு ஒரு ஏழைப் பையனுக்குத் தன்னாலான உதவிகளைச் செய்து வரும் விஷயத்தையும் என்னிடம் பலமுறை சொல்லியிருக்கிறார்.

ரவி: தெரிந்துமா, நீங்கள் யாரையும் இதுவரை கண்டிக்கவேயில்லை சார்!

ஆசிரியர்: நான் நேரடியாக உங்களைக் கண்டித்திருந்தால், உங்களிடம் தெளிவு பிறந்திருக்காது! விவரம் புரியாத உங்களைக் கண்டித்தால் என் மீது வீண் விரோதமும், புகார் செய்ததற்காகச் சீனுவின் மீது குரோதமும் வளர்ந்திருக்குமே தவிர, உங்கள் மனம் மாறியிருக்காது. நேரம் வரும்போது நீங்களே உங்கள் தவறை உணர்ந்து திருந்த வேண்டுமென்று காத்திருந்தேன். அதனாலேதான் கடைக்குப் போக உங்களை மட்டும் அழைத்தேன். சீனு தினசரி இந்த நேரத்தில் அந்த ஓட்டுத் திண்ணை வீட்டில் இருப்பான் என்பது தெரியும். நீங்களே நேரில் பார்த்து உங்கள் தவறைப் புரிந்து கொள்ள வைத்தேன். சரிதானே!

அவனுக்குத் தன்னைக் கவனித்துக் கொள்ளவும், பிறருக்கு நேசத்துடன் உதவவும் தெரிந்து இருக்கிறது. உங்களுக்கு அரட்டையடித்து வீண் பொழுது போக்கவும் பிறரைக் கண்டபடி கேலி செய்து அவர்கள் மனத்தைப் புண்படச் செய்யவுமே தெரிந்திருக்கிறது. இந்த லட்சணத்தில் 'இதுக்கு மேலே என்னடா தலைபோற வேலை'ன்னு ஆயிரம் தடவை கேட்டிருக்கீங்க.

சேகர்: சார், நாங்க செய்ததெல்லாம் ரொம்ப தப்பு. எங்களை மன்னிச்சுடுங்கோ.

ரவி: சீனுக்கிட்ட நீங்களே எங்கள் நிலையைச் சொல்லி எங்களை மன்னிச்சிடச் சொல்லுங்க, சார்!.


ஆசிரியர்: மன்னிக்க வேண்டிய அவசியம் இல்லை. மற்றவர்களுக்கு நாம் சிறு உதவி செய்யாவிட்டாலும் அவர்களுக்கு எந்த விதத்திலும் இடையூறு செய்யாமலிருந்தால், அதுவே பெரிய காரியம். அது நீங்க அவங்களுக்குச் செய்கிற மிகப் பெரிய உதவின்னுகூடச் சொல்லலாம்! சீனுவிடம் நீங்கள் அனைவரும் வித்தியாசமின்றிப் பழகுங்கள், அது போதும்!

கோபு: சீனு மட்டுமென்ன, இனி எல்லோரிடத்திலும் அன்போடும், பாசத்தோடும் பழகுவோம் சார்!

ரவி: சார், நாங்க இப்படியே பள்ளிக் கூடத்திற்குப் போகிறோம் சார்!

ஆசிரியர்: நல்லது, போய்வாருங்கள்! அரட்டை அடிக்காமல், ஓய்வெடுங்க! அதிகாலையிலே மகாபலிபுரம் புறப்படணும். இப்போ நான் வரட்டுமா?

(வணக்கம் தெரிவித்து ரவி, சேகர், கோபு மூவரும் போகிறார்கள்.)



கந்தசாமி என்ற ஆலமரம்

அ. திலகவதி

கள்ளக்குறிச்சி நகரின் குறுகலான கடைவீதி. மையத்தில் அமைந்திருந்த அந்தக் கடையில் விற்காத பொருளே இல்லை. மளிகைச் சாமான்கள், பள்ளிப் புத்தகங்கள், நோட்டுக்கள், பேனாக்கள், பென்சில்கள், பயிருக்குத் தேவையான உர வகைகள், இப்படிப் பல விற்பனைக்கிருந்தன. வியாபாரமும் சுறுசுறுப்பாக நடந்து கொண்டிருந்தது.

அந்தக் கார் கடை வாசலில் நிற்க, காரிலிருந்து பெரியவர் கந்தசாமி — ஓய்வு பெற்ற கல்வி அதிகாரி — மெல்ல இறங்கிக் கடைக்குள் நுழைந்தார்.

தற்செயலாகத் தலைநிமிர்ந்த கடை முதலாளி மாடசாமி, பெரியவர் கந்தசாமியைக் கண்டதும், பதறியடித்துக் கொண்டு எழுந்தார். ''ஐயாவா! வாங்க! வாங்க!'' என்று ஆர்வமாக வரவேற்றார். பரபரப்போடு, கந்தசாமி அமர நாற்காலியைத் தானே எடுத்து வந்து போட்டார். காபி வரவழைத்துத் தந்தார். பின் அருமையாக ஒரு சீப்பு வாழைப்பழத்தை அவர் முன் வைத்தார். ''ஐயாவுக்கு இந்த இனிப்பான மலைப்பழம்னா உசிராச்சே! சாப்பிடுங்க'' என்று உபசரித்தார்.

''மாடசாமி, நீ இன்னும் பழசை மறக்கலியா?'' என்று புன்முறுவலுடன் வினவிய கந்தசாமி, ஒரு பழத்தை எடுத்து உரித்தார். மெல்லச் சுவைத்துச் சாப்பிடலானார்.

எதிரே பணிவோடு நின்றிருந்த மாடசாமியின் மனம் 'ஜிவ்'வென்று பழைய நினைவுகளை நோக்கிப் பறந்தது. இருபதாண்டுகளுக்கு முன் நடந்திருந்தாலும் எவ்வளவு பசுமையாக நெஞ்சில் பதிந்திருந்தன?

கள்ளக்குறிச்சி பஸ் நிலையம் அருகே ஒரு பெட்டிக்கடை. பக்கத்தில் ஒரு கோணி விரித்து அதன் மீது ஒரு தார் மலைவாழைப்பழம் நிறுத்தியிருந்தது. அதை விற்க வேண்டிய சிறுவன், தன் பணியை மறந்து, எதிரே சுவரில் ஒட்டப்பட்டிருந்த சினிமா விளம்பரத்தை எழுத்துக் கூட்டிப் படிப்பதில் ஈடுபட்டிருந்தான்.

''யாரப்பா பழம் விற்பது? நாலு பழம் கொடு'' என்றார் கந்தசாமி. குரல் கேட்டுத் திரும்பிய அந்த ஆதிவாசிச் சிறுவன், அவர் அருகிலே ஓடிவந்து பழங்களை எடுத்துக் கொடுத்தான். பின் காசை வாங்கவும் மறந்து அங்கிருந்தபடியே விளம்பரத்தை வெறித்து நோக்கிக் கொண்டிருந்தான். அதைக் கண்ட கந்தசாமிக்குக் கோபம் வந்து விட்டது. ''ஏண்டா பயலே! படிக்கிற வயதில் இவ்வளவு சினிமா மோகமா? இன்று மாலையே அந்த சினிமாவுக்குப் போய் விடுவாய்; இல்லையா?'' என்றார் குத்தலாக.

''இல்லை ஐயா!'' என்றான் சிறுவன். தொடர்ந்து கம்மிய குரலில் கூறினான்: ''எனக்கு சினிமா ஆசை இல்லைங்க. மூணாங்கிளாசோட படிப்பு நின்னு போச்சு. அம்மா தவிர வேறு யாருமில்லே. அதுவும் உடம்பு சொகமில்லாமே படுத்திடிச்சு. நான்தானே காப்பாத்தணும்? பழம் விற்க வந்து விட்டேன்!'' என்றான்.

சிறுவனின் கள்ளமற்ற பேச்சு கந்தசாமியின் மனத்தைக் கனிவித்தது. ''பின் ஏன் சினிமாப் போஸ்டரை அப்படி வைத்த கண் வாங்காமல் பார்த்தே?'' என்றார்.

''எனக்குப் படிக்கணும்னு ரொம்ப ஆசைங்க. பள்ளிக்கூடமும் போக முடியாது. புஸ்தகம் வாங்கவும் முடியல்லே. கத்துக்கிட்ட எழுத்துக்களை மறக்காம இருக்க இப்படி விளம்பரங்களைப் படிச்சுக்கிட்டே இருக்கேன். அதோபாருங்க! பு...ன...ர்—ன்...ம...ம். நடுவிலே அந்த எழுத்து என்னுங்க?'' என்று ஆர்வத்தோடு கேட்டான் அவன். அவனது பேச்சு கந்தசாமியின் கண்களில் நீரை வரவழைத்தது. ''தம்பி! அந்த எழுத்து ஜெ. சேர்த்துப் படிச்சா புனர்ஜென்மம். அதாவது புது வாழ்வுன்னு அர்த்தம்'' என்றார் கனிவாக.

அவர் மனத்தில் உடனே ஒரு திட்டம் உருவானது. அதை அப்பொழுதே செயல்படுத்த விரும்பினார்.

''தம்பி, உன் பெயரென்ன?''

''மாடசாமி.''

''மாடசாமி! உன் படிப்பிற்கு ஒரு வழி செய்கிறேன், கேள்! இனி நீ விற்பதற்குக் கொண்டு வரும் பொருளை இந்தப் பெட்டிக்கடையில் வைத்துவிடு. கடைக்காரர் எனக்கு மிகவும் வேண்டியவர். விற்றுக்கொடுப்பார். நீ பள்ளிக்கூடம் சென்று படிக்கலாம். படிப்புச் செலவை நான் பார்த்துக் கொள்கிறேன். என்ன, சம்மதமா?'' என்றார்.

மாடசாமியின் முகத்தில் ஒளி பிறந்தது. ''ரொம்ப நன்றிங்க ஐயா! எப்படியாவது அம்மாவிடம் சொல்லிச் சம்மதம் வாங்கி விடறேன் சாமி, நீங்க ரொம்ப நல்ல சாமி!''—குரல் தழுதழுக்கக் கூறினான் மாடசாமி.

கல்வி அதிகாரி ஆனபடியால், ஆதிவாசிச் சிறுவனுக்குரிய அனைத்துச் சலுகைகளையும்மாடசாமிக்குப் பெற்றுத் தர, கந்தசாமியால் முடிந்தது. உண்மையிலேயே படிப்பில் அவனுக்கிருக்கும் ஆர்வத்தை உணர்ந்து மகிழ்ந்தார். மேலும் உதவினார்.

பள்ளிப் படிப்பை முடித்த மாடசாமி விருத்தாசலம் கல்லூரியில் படித்துப் பட்டம் பெற்றான். பின் சுய முயற்சியில் வங்கிக் கடன் உதவி பெற்றுக் கடை ஆரம்பித்தான். விரைவில் வாழ்வில் உயர்நிலைக்கு வந்தாகி விட்டது.

''என்ன மாடசாமி! நான் இளம்பலாமா? சேலத்தில் ஒரு நண்பர் வீட்டுத் திருமணம். மாலைக்குள் போய்ச் சேர வேண்டும்'' என்றார் பெரியவர் கந்தசாமி.

''ஐயா! நீங்க ஆலமரம். உங்க நிழலில் இளைப்பாறும் சிறு குருவி நான். என்னை வாழ்த்துங்கள் ஐயா!'' என்ற மாடசாமி, கண்களில் நீர் மல்கக் கந்தசாமியின் கால்களில் பணிந்தார்.

தடுத்து, மாடசாமியை அணைத்துக் கொண்ட கந்தசாமியின் கண்களில் கடையின் பெயர்ப் பலகை பட்டது. ''கந்தனருள் பல்பொருள் அங்காடி.''

கந்தசாமியின் மனம் பெருமித மடைந்தது.

எதற்கும் மனம் தளராத தங்கள் முதலாளி, இந்தப் பெரியவர் முன் சிறு குழந்தையாகத் தளர்ந்து குழைந்து போவதைக் கண்டு கடைச் சிப்பந்திகள் ஆச்சரியமடைந்தனர்.

அவர்களுக்குத் தெரியுமா கந்தசாமி என்ற ஆலமரத்தின் பெருமையைப் பற்றி?



ஏன் நிறுத்தினாய்?

"நான் தினமும் காலை 5-59க்கு எழுந்து 6-13க்கு பல்தேச்சு 6-22க்கு காபி குடிச்சு 6-29க்கு குளிச்சிட்டு 7-13க்கு சாப்பிட்டு 7-13க்கு ஸ்கூலுக்குகிளம்பி 7-13க்கு சாப்பிட்டு 7-13க்கு டிபன் சாப்பிட்டு 7-13க்கு விளையாடி 7-13க்கு"

"ஏன் 7-13-ஐயே திரும்பத் திரும்பச் சொல்றியே!"

"7-13க்கு கடிகாரம் நின்னுட்டதே!"



பெற்ற வயிறு

கமலா நடராஜன்

வாய் அருகில் கொண்டுபோன சோற்றைக் கையிலேயே வைத்துக் கொண்டு, வாசலில் நடந்த சம்பாஷணையைக் கவனித்தான் கணபதி.

அம்மாவோடு பேசிக் கொண்டிருப்பது யார்?

ஓ... ஊரிலிருந்து மாமா வந்திருக்கிறார் போலும்!

''கொஞ்சம்கூடப் பொறுப்புங்கறதே இல்லை அண்ணா. எப்படி இந்தக் குடும்பம் நடந்துட்டு வருது. இன்னும் நான் போய் யார் யாரிடம் கடன் வாங்க முடியும் -- இதைப் பத்தியெல்லாம் இவனுக்குக் கவலை இருக்கிறதாகவே தெரியலை. இந்த ஆடி வந்தா, இருபது வயசு ஆகப் போகுது. என்ன செய்யறது சொல்லு?'' —அம்மா கண் கலங்கக் கூறிக் கொண்டிருந்தாள்.

'சாப்பிடாமலே எழுந்து போய் விடலாமா?' — வேகம் வருகிறது கணபதிக்கு.

அதைச் செயல்படுத்த முடியாமல் தடுக்கிறது பசியின் வேகம்.

சே, இந்த அம்மா சுத்த மோசம். யார் என்று இல்லை, எப்போதென்றில்லை, பிள்ளையின் மேலே புகார் சொல்லவேண்டியது. அவளுக்கு இதுவே பழக்கமாகி விட்டது!

''கணபதி, இன்னமும் வேலை வெட்டின்னு எதுவும் தேடிக்காமே ஊர் சுத்தினா, நீயும் நானும் எப்படிடா சாப்பிடறது? இப்போக்கூட இமாம் அலி இரும்புக் கடையில் சொல்லிட்டுத்தான் வர்றேன். போய்க் கேட்டால் உனக்கும் ஒரு வேலை கொடுப்பார். வேதாசலத்தின் மளிகைக் கடைக்கு ஆள் வேணுமாம், அங்கே வேணுமானாச் சேர்ந்துக்கோ. டெய்லர் நடேசன்கிட்டே, தையல் கத்துக்கிறதுன்னாலும் சொல்லு. சம்பளம் குறைச்சல். இருந்தாலும் உன் எதிர்காலத்துக்கு ஒரு தொழிலைக் கத்துக்கிட்டாப் போல இருக்கும் — தொழிலை நல்லாத் தெரிஞ்சுக்கிட்டா, பாங்கிலே கடன் வாங்கித் தொழில் நடத்தி ஓரளவு வசதியா வாழலாம்'' சதா இந்த நச்சரிப்புத்தான்.

காலையில் கூட சப்தம் போட்டாள், தேங்காய் வியாபாரியிடம் கொஞ்சம் முன்பணம் வாங்கி வரச் சொல்லி! மறந்து விட்டான். அது என்ன பெரிய தப்பு? அரிசி வாங்கவே இணறிப்போனாளாம்.

அப்போது ஆரம்பித்தவள் இன்னும் ஒய்ந்தபாடில்லை.

மாமா என்னவோ பதில் சொல்கிறார். காதில் விழவில்லை. அவர் மட்டும் என்ன? அவள் கட்சியில்தான் பேசுவார்!

கணபதியின் அப்பா காலமானபோது, அவனுக்கு வயது பத்து. தகப்பன் இல்லாத பிள்ளை ஆயிற்றே என்று கொஞ்சம் அதிகச் செல்லம் கொடுத்து வளர்த்து விட்டாள் சரஸ்வதி. பிள்ளை படித்துத் தன் பஞ்சத்தைத் தீர்த்து விடுவான் என்று நம்பினாள். ஆனால், அவனுக்கோ படிப்பில் நாட்டமே இல்லை. அவனைப் போலவே படிக்காத சிறுவர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றினான். விளைவு, ஐந்தாம் வகுப்பிலேயே மூன்று வருஷம்! அத்துடன் படிப்புக்கும் முற்றுப்புள்ளி!

வேறு ஏதாவது தொழிலைக் கற்றுக் கொடுத்தாலாவது, பிள்ளை பிற்காலத்தில் பிழைக்க உதவுமே என்று அவள் எவ்வளவோ முயன்றாள். அதிலும், ஓர் இடத்தில்கூட அவன் நிலைத்து நிற்பதில்லை. போன சில தினங்களிலேயே திரும்பி வந்து விடுவான்.

சரஸ்வதி சாப்பாட்டிற்கே கஷ்டப் படத் தொடங்கி விட்டாள். நாலு வீட்டில் பத்துப் பாத்திரம் தேய்த்தும், பலகாரம் செய்து விற்றும், தன் வயிற்றைக் குறைத்துக்கொண்டு, பிள்ளைக்குக் குறை வைக்காமல் வளர்த்தாள். அதன் பலன், வரவர அவளால் அந்த வேலைகளையும் செய்ய முடிய வில்லை.

கணபதி மாடு போல் வளர்ந்திருந்தானே தவிர, உழைக்க வேண்டும், முன்னேற வேண்டும் என்கிற எண்ணமே வரவில்லை.

எவ்வளவு காலம்தான் பொறுமையாய் இருப்பாள் சரஸ்வதி?

இப்போது ஊரிலிருந்து வந்திருக்கும் தன் அண்ணனிடம் சொல்லி வருந்தி இருக்கிறாள்.

சாப்பிடப் பிடிக்காமல் ஏதோ பேர் பண்ணிவிட்டு எழுந்தான் கணபதி.

கையை வேஷ்டியிலேயே துடைத்துக் கொண்டு வெளியே வந்தான்.

''வாங்க மாமா.''

மாமா சிறிது நேரம் அவனோடு பேசிக் கொண்டிருந்தார்.

பிறகு வெற்றிலைச் சீவல் பொட்டலத்தைப் பிரித்துப் போட்டுக் கொண்டவர், வாசலில் முட்டாகப் பறித்துப் போடப்பட்டிருந்த தேங்காய்களை ஒரு தடவையும் அங்கிருந்த தென்னை மரங்களை ஒரு தடவையும் நோட்டம் விட்டார்.

''ஏன் சரசு, இந்தத் தென்னந் தோப்பு மட்டும் இல்லேன்னா இப்போ உன் பாடு பசியும் பட்டினியும்தான்னு சொல்லு?''

''ஆமாண்ணா. இப்போதெல்லாம் என்னாலே வீடுகளிலே போய் வேலை செய்ய முடியறதில்லே. உடம்பும் வர வர பலகீனமாய்ப் போச்சு.''

''சரி, இப்போ இதில் எத்தனை காய்கள் தேறும்?''

''கிட்டத்தட்ட முந்நூறு இருக்கும்.''

''நாளைக்கு போய் அந்த வியாபாரியை வரச் சொல்றேன். காய்களைப் போட்டுப் பணத்தை வாங்கிக்கோ.''

''சரி அண்ணா. நீ சமயத்தில் கொடுத்து உதவிய பணமெல்லாம் கூடத் திருப்பித் தர முடியலே. இவைகளைப் போட்டுப் பணம் வந்ததும்...''

''சேச்சே, அப்புறம் சாப்பாட்டுக்கு என்ன செய்வே? அதெல்லாம் ஒண்ணும் அவசரமில்லே. முதலில் மத்த கடன்களைக் கொடுத்துட்டுச் சோத்துக்குன்னு ஏதாவது வாங்கி வச்சுக்கோ''

கிளம்பிப் போனவர் கொஞ்சதூரம் போய்த் திரும்பி வந்தார்.

''ஏன் சரசு இந்தத் தென்னம் பிள்ளைகளெல்லாம் நீயும் உன் வீட்டுக்காரரும் வச்சு உண்டாக்கினது தானே?''

''ஆமாண்ணா.''

''எத்தனை வருஷம் இருக்கும்?''

''ஏன், குறைஞ்சது இருபது வருஷமாவது இருக்கும்.''

''ஓ... ஆமாம், ஆமாம். இப்போது தான் ஞாபகம் வருது. நம்ம கணபதி பிறந்த புதுசு. போகட்டும் போ. அதாவது இன்னிக்கு உனக்கு அரை வயத்துக் கஞ்சி ஊத்துதே!'' —மாமா புறப்பட்டு விட்டார்.

'இந்த விஷயம் எல்லாம் அண்ணாவுக்கு முன்னமேயே தெரிந்ததுதானே, எதனால் இப்படிப் புதிதாய்க் கேட்கிறார்?' — சரஸ்வதி குழம்பிக்கொண்டு நிற்க—

என்ன நினைத்தானோ, அவ்வளவு நேரம் வாசல் திண்ணையில் பேசாமல் உட்கார்ந்திருந்த கணபதி எழுந்து அவர் பின்னாலேயே ஓடினான்.

இவன் அவரிடம் ஏதோ சொல்ல—அவர் சந்தோஷமாய் இவனைத் தட்டிக் கொடுத்துவிட்டு அணைத்தபடி எங்கோ அழைத்துச் செல்ல—


சரஸ்வதிக்கு ஒன்றுமே புரியவில்லை.

எல்லாவற்றையும் விட ஆச்சரியம், மறுநாள் முதல் இவன் டெய்லர் நடேசனிடம் வேலைக்குப் போகத் தொடங்கி விட்டதுதான்!

அடுத்துச் சில தினங்களிலேயே மாமா அங்கு வந்த போது சரஸ்வதியின் கேள்விக்கு அவர் சிரித்துக் கொண்டே சொன்ன பதில்—

''எந்த மனிதனுக்கும் இயற்கையில் இருக்கும் தன்மான உணர்ச்சி நம் கணபதிக்கு மட்டும் இல்லாமலா போய் விடும்? அதைத்தான் நான் தக்க சமயத்தில் தூண்டி விட்டேன். 'அடே கணபதி, உன் அம்மா வளர்த்த தென்னம் பிள்ளைகள்கூட இன்று அந்த நன்றியை மறக்காமல் தேங்காய்களாய்க் காய்த்து அவள் பசியைப் போக்குகிறது. ஆனால், அவளுக்குப் பிள்ளையாய்ப் பிறந்த நீ அந்த மரம் கொடுக்கும் பலனைக்கூடக் கொடுக்க வில்லையே!' என்பதைத்தான் அன்று நம் பேச்சின் மூலம் அவனுக்கு ஜாடையாக உணர்த்தினேன். சும்மா சொல்லக் கூடாது, உன் மகனை. அவன் சுரணை உள்ளவன்தான்! புரிந்து கொண்டு இன்று உழைக்கத் தொடங்கி விட்டான்.''

சரசுவுக்கு இப்போதுதான் பெற்ற வயிறு குளிர்ந்தது!




104. வெட்டுக் கிளிக்கு எத்தனை கால்கள்? எத்தனை இறக்கைகள்?
105. சலவைக்கல், முதலில் எப்படி இருந்து எவ்வாறு மாறுகிறது?
106. சென்னை நகரில் காணப்படும் இரண்டு ஆறுகள் யாவை?
107. இமயமலையில் உள்ள இரண்டு முக்கிய மலைவாச ஸ்தலங்கள் என்னென்ன?
108. 'லினோலியம்' எதிலிருந்து தயார் செய்கிறார்கள்?
109. அமெரிக்கக் குடியரசுத்தலைவர் ஆபிரகாம் லிங்கன் நாடகம் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவரைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்ற நடிகன் யார் தெரியுமா?
110. மகாபாரதத்தை முதல்முதலாக சமஸ்கிருதத்தில்எழுதியவர்யார்?
111. இராமேஸ்வரம் — இப்பெயர் எப்படி வந்தது?
112. வெண்கலம் என்கிறோமே, அது எந்த எந்த உலோகங்களின் கலவை?
113. 'கடல் குதிரை' என்கிறார்களே, அப்படியென்றால்...?
114. தமிழில் முதல் முதலாக வெளி வந்த கலைக்களஞ்சியத்தின் பெயர் தெரியுமா?
115. பம்பாயில் பிறந்த ஓர் ஆங்கிலேயர், இந்திய மக்களின் பழக்க வழக்கங்களையும், மிருகங்களையும் வைத்துப் பல கதைகளைச் சிறுவருக்காக எழுதி நோபல் பரிசு பெற்றார். பெயர் தெரியுமா?
116. 'கதர்' என்று எதற்குப் பெயர்?
117. வைணவப் பெரியாராகிய இராமானுஜர் பிறந்த ஊர் எது? எந்த வயதில் அவர் மறைந்தார்?
118. சிங்கங்கள் இந்தியாவில் ஒரே ஓர் இடத்தில் மட்டுமே வாழ்கின்றன. எந்த இடம்?
119. ஈராக் நாட்டின் பழைய பெயர் தெரியுமா?
120. ''சுதந்திரம் வந்ததும் கொடியை மட்டும் மாற்றினீர்களே, கல்வி முறையை ஏன் மாற்றவில்லை?'' என்று கேட்டார் ஒரு பெரியார். அவர் யார்?
121. வீட்டு எலி, வெள்ளெலி —இவற்றில் எந்த வகை எலியை மருத்துவ சோதனைகளுக்கு மிகவும் பயன்படுத்துகிறார்கள்?

பதில் இங்கே!

104. ஆறுகால்கள், நான்கு இறக்கைகள்.
105. பூமியில் மிக ஆழத்தில் புதைந்திருக்கும் கண்ணாம்புக் கல்தான், உஷ்ணத்தினாலும், அழுத்தத்தாலும் சலவைக் கல்லாக மாறுகிறது.
106. கூவம், அடையாறு.
107. சிம்லா, டார்ஜிலிங்.
108. ஆளிவிதை எண்ணெயிலிருந்து.
109. ஜான் வில்க்ஸ் பூத்.
110. வியாசர்.
111. இராமர் அமைத்த ஈஸ்வரன் கோயில் இராமேஸ்வரம். இராவணனைக் கொன்ற பழி நீங்குவதற்காக இராமர் சிவலிங்கம் ஒன்றை வைத்து அங்கே வழிபட்டாராம்.
112. செம்பும் வெள்ளீயமும் சேர்ந்த கலவை.
113. கடலில் வாழும் ஒருவகைமீன். அதன் முகம் குதிரை முகம் போல் இருக்கும்.
114. அபிதான கோசம்.
115. ரட்யார்ட் கிப்ளிங்.
116. கையினாலேயே நூல் நூற்றுக் கையினாலேயே நெய்த துணி.
117. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள ஸ்ரீபெரும்புதூரில். 120 வயதில் மறைந்தார்.
118. குஜராத் மாநிலத்திலுள்ள கிர் காட்டில் மட்டுமே.
119. மெசப்பட்டோமியா.
120. வினோபாஜி.
121. வெள்ளெலியை.

சிங்கம்



''பன்றி பல குட்டி, சிங்கம் ஒரு குட்டி''.

—இப்படி ஒரு பழமொழியை நீங்கள் அடிக்கடி கூறி வருகிறீர்கள். உங்களில் யாரோ ஒருவர் எப்போதோ இதைச் சொல்லி வைத்திருக்கிறார். அதையே நீங்களும் திரும்பத் திரும்பக் கூறிவருகிறீர்களே!

'பன்றி பல குட்டி' என்பது சரிதான். ஆனால், 'சிங்கம் ஒரு குட்டி' என்பதுதான் தவறு. ஒரே பிரசவத்தில் மூன்று, நான்கு குட்டிகள்கூட எங்கள் இனத்தில் பிறக்கும்.

என்னையே எடுத்துக் கொள்ளுங்களேன். என் அம்மா என்னையும் என் தங்கையையும் ஒரே தடவையில்தான் பெற்றாள். முதலில் நான் பிறந்தேன். சிறிது நேரத்தில் என் தங்கை பிறந்தாள். நாங்கள் இருவரும் கர்ப்பத்திலே 120 நாட்கள் இருந்தோம்.

நான் பிறந்து ஒரு வாரம் வரை எனக்குக் கண் தெரியவில்லை. கண் தெரிந்ததும், என் உடம்பை நானே ஒரு முறை பார்த்துக் கொண்டேன். என் உடம்பு முழுவதும் மங்கலான சிறுசிறு புள்ளிகள் இருந்தன. ஆனால், என் அம்மாவுக்கோ, அப்பாவுக்கோ அந்த மாதிரிப் புள்ளிகள் இல்லை. என் தங்கையின் உடம்பைப் பார்த்தேன். அவளுக்கும் என் போல் புள்ளிகள் இருந்தன. இதைப் பற்றி அம்மாவிடம் கேட்டேன். ''குட்டியாக இருக்கும் போது இப்படித்தான் இருக்கும். நாள் ஆக, ஆக மறைந்துவிடும்'' என்று அம்மா பதில் சொன்னாள்.

என்னிடத்திலும், என் தங்கையிடத்திலும் என் அம்மாவுக்குப் பிரியம் அதிகம். எங்கள் மேல் உயிரையே வைத்திருப்பாள். அம்மாவும், அப்பாவும் வேட்டைக்குப் புறப்பட்டுப் போகும் போது, ''நாங்கள் திரும்பி வரும் வரை இங்கேயே இருக்க வேண்டும். வெளியிலே தலை காட்டக் கூடாது!'' என்று எச்சரித்து விட்டுத்தான் அம்மா போவாள்.

மூன்று மாதங்கள் வரை அம்மா எங்களுக்குப் பாலூட்டி வளர்த்தாள். அப்புறம், அம்மா கொண்டு வந்து கொடுத்த ஆகாரத்தைத் தின்று வளர்ந்து வந்தோம். மான் குட்டி, முயல் குட்டி, காட்டுப் பன்றி இவைகளைத்தான் அம்மா அடிக்கடி கொண்டு வருவாள்.


எனக்கும் என் தங்கைக்கும் கொஞ்சம் விவரம் தெரிந்தவுடனே, அம்மா எங்களை அருகிலே அழைத்தாள். ''குழந்தைகளா, இன்று முதல் உங்களுக்கு வேட்டையாடுவது எப்படி என்பதைக் கற்றுக் கொடுக்கப் போகிறேன்'' என்று சொன்னாள்.

''அப்படியா அம்மா! சரி, நாங்கள் தயார். புறப்படலாமா?'' என்று நான் கேட்டேன்.

அம்மா எங்களை அழைத்துக் கொண்டு வெளியிலே போனாள். மறைவான ஓர் இடத்தில் நின்று கொண்டிருந்தோம். அப்போது சிறிது தூரத்தில் ஒரு முயல் குட்டி துள்ளிக் குதித்துக்கொண்டு சென்றது. உடனே அம்மா என்னைப் பார்த்து, ''நீ ஆண் பிள்ளை. முதலில் நீதான் ஆரம்பிக்க வேண்டும். அதோ, அந்த முயலை நீ துரத்திப் பிடிக்க வேண்டும். எங்கே, பிடி பார்க்கலாம்'' என்று கூறினாள்.

உடனே நான் முயல் குட்டியை நோக்கித் தாவினேன். அது வெகு வேகமாக ஓடியது. ஆனால், நானா விடுவேன்? துரத்திச் சென்று ஒரே பாய்ச்சலில் அதன் மேல் பாய்ந்தேன். கழுத்தைப் பிடித்துப் பலமாகக் கடித்தேன், அவ்வளவுதான்; முயல் குட்டியின் மூச்சு நின்றுவிட்டது!

''சபாஷ், இப்படித்தான் வேட்டையாட வேண்டும். முயல், மான், முதலிய மிருகங்களாக இருந்தால், குரல் வளையில் கடித்துக் கொல்ல



வேண்டும். ஆனால், காட்டு எருமை போன்ற பெரிய மிருகங்களை எப்படித் தாக்க வேண்டும், தெரியுமா? 'லபக்' கென்று மேலே பாய வேண்டும். உடனே பலமாகப் பிடரியிலே கடித்துக் கழுத்தை முறிக்க வேண்டும்'' என்றாள் என் அம்மா.

''ஓ, அப்படியா! சரி அம்மா. இப்போது இந்தப் பக்கமாக ஒரு காட்டு எருமை வரட்டும். நான் அதை என்ன பாடு படுத்துகிறேன், பார்'' என்றாள் என் தங்கை.

''என்ன! அது அவ்வளவு எளிதான காரியமா? நானும், உன் அப்பாவும் சேர்ந்து தாக்கினால்கூட, சில சமயம் காட்டு எருமை தப்பித்துக்கொண்டு விடுமே! காட்டு எருமை பொல்லாதது. அதனிடம் இப்போது போகாதீர்கள்!'' என்று அம்மா சொன்னாள்.

''சரி அம்மா'' என்று தலையை ஆட்டினாள் என் தங்கை. பிறகு நானும் என் தங்கையும் முயல்குட்டியைப் பங்கு போட்டுத் தின்றோம்.

எனக்கு மூன்று வயதானதும் பிடரி மயிர் வளர ஆரம்பித்தது. ஆறாவது வயதிலே நன்றாக வளர்ந்துவிட்டது. ஆனால், என் தங்கைக்குப் பிடரிமயிர் வளரவில்லை. எங்களில் ஆணுக்குத் தான் பிடரி மயிர் உண்டு. பெண்ணுக்குப் பிடரி மயிர் கிடையாது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!

இப்போது எனக்கு வயது பன்னிரண்டு. நானும் என் அம்மா அப்பாவைப்போல், நன்றாக வளர்ந்து விட்டேன்; தைரியமாக வேட்டை ஆடுவேன். சூரியன் மறையும் சமயம் நான் ஒரு சத்தம் போடுவேன். என்னுடைய அந்தக் கர்ஜனையைக் கேட்டுக் காடு முழுவதும் கிடுகிடுக்கும். சிறிய மிருகங்களெல்லாம் நடுநடுங்கி நாலா பக்கமும் நாலு கால் பாய்ச்சலில் ஓடும். நான் தரையை நோக்கி எவ்வளவுக்கு எவ்வளவு குனிந்து கர்ஜிக்கிறேனோ, அவ்வளவுக்குஅவ்வளவுசத்தம் வெகு தூரம் கேட்கும்.

பயங்கரமான கர்ஜனை, கம்பீரமான தோற்றம் இவைகளுடன், ஓர் உயர்ந்த குணமும் எங்களிடம் உண்டு. நான் பசித்தால்தான் மற்ற மிருகங்களை வேட்டையாடுவேன். தேவையில்லாதபோது, எந்த மிருகத்திற்கும் தொந்தரவு கொடுக்க மாட்டேன். ஆனால், எனக்கு யாரும் தொந்தரவு கொடுத்தால், சும்மா விடமாட்டேன். மணிக்கு ஐம்பது மைல் வேகத்தில் ஓடிப் பிடித்து விடுவேன்! இந்தக் குணங்களெல்லாம் எங்களிடம் இருப்பதால்தானே 'மிருக ராஜன்' என்று நீங்கள்





பாரதி பாட்டு — சக்திக்கனல்

முறுக்கு மீசைக் கூர்மை!
மூண்டாக நேர்மை!
உருக்கி வார்த்த கவிதை!
உரைத்தது அவர் பெருமை!

தேசபக்தி மூச்சு!
செந்தமிழில பேச்சு!
பாசம் கொண்ட கவிஞர்!
பாரதத் தாய் புதல்வர்!

பாப்பாவுக்குப் பாட்டு!
பண்பை நிலை நாட்டும்.
நாட்டுக் கான பாட்டு
வெள்ளை யர்க்கே வேட்டு!

சாதிப் பேயைக் கொன்றார்!
சக்தி வழி நின்றார்!
நீதி வழி சென்றார்.
நேர்மை கொண்டு வென்றார்!

பாரதியார் பாட்டைப்
பக்தி யோடு படிப்போம்!
ஊரும் உலகும் உய்ய
உண்மை ஒளியில் வாழ்வோம்!

அழைக்கிறீர்கள்? இல்லாதபோனால், புலி அல்லது யானைக்கு அந்தப் பெயரைக் கொடுத்திருக்க மாட்டீர்களா?

காற்று பலமாக அடிக்கும் சமயம், நான் மிகவும் சுறுசுறுப்பாக இருப்பேன். நல்ல நிலவு வெளிச்சத்தில் மிகவும் ஜாக்கிரதையாக இருப்பேன். சுற்று முற்றும் பார்த்துக் கொண்டே பதுங்கிப் பதுங்கி நடப்பேன். ''தண்ணீர் குடிக்கப் போகும் போது, மிகமிக ஜாக்கிரதையாகப் போக வேண்டும்'' என்று என் அம்மா சிறு வயதில் எனக்குச் சொல்லியிருக்கிறாள். அங்குதான் சில சமயம், வேட்டைக்காரர்கள் எங்களை எதிர் பார்த்துக்கொண்டு துப்பாக்கியுடன் காத்திருப்பார்களாம்.

தண்ணீர் குடிக்க நான் தனியாகப் போவதும் உண்டு. என் தோழர்கள் சிலரோடு சேர்ந்து போவதும் உண்டு. அப்போது எதிர்க் கரையில் எங்களைப் போலவே ஒரு சிறு கூட்டம் தண்ணீர் குடிக்க வரும். நாங்கள் அவர்களைப் பார்த்துக் கர்ஜிப்போம். அவர்கள் எங்களைப் பார்த்துக் கர்ஜிப்பார்கள்.

அந்தக் காட்சியை நீங்கள் பார்த்தால், நாங்கள் ஒருவரைப் பார்த்து ஒருவர் முறைக்கிறோம் அல்லது சீறுகிறோம் என்று நினைப்பீர்கள். ஆனால் உண்மையில், நாங்கள் ஒருவரை ஒருவர் வாழ்த்தவே அப்படிக் கர்ஜிக்கிறோம்.

நாங்கள் கோபமாயிருக்கும் போது அல்லது பசிக்கும் போதுதான் கர்ஜிக்கிறோம் என்று சிலர் கூறுகிறார்கள். பசி அடங்கியவுடனும் நாங்கள் கர்ஜனை செய்வதுண்டு. நிறையச் சாப்பிட்ட பிறகு நீங்கள் ஏப்பம் விடுகிறீர்களே, அதே போலத்தான்! ஆனால், வேட்டையாடும்போது நாங்கள் கர்ஜனை செய்யவே மாட்டோம்.

நான் வேட்டையாடப் போகும் போது, என் பின்னாலே சிறிது தூரத்தில் ஒரு மிருகம் வருவதுண்டு. அதன் பெயர் கழுதைப்புலி. அதன் மாமிசம் எனக்குப் பிடிக்கவே பிடிக்காது. அதனால்தான் அது அப்படித் தைரியமாக வருகிறது. எதற்காகத் தெரியுமா? நான் கொன்று தின்னும் மிருகத்தில் மிச்சம் ஏதாவது இருந்தால், அதைத் தின்பதற்காகத்தான்!

இவ்வளவும் சொன்னேன். ஆனால், நான் எங்கு பிறந்தேன் என்பதைச் சொல்ல மறந்தே போய் விட்டேனே! நான் பிறந்தது வட நாட்டில் குஜராத்திலுள்ள 'கிர்' வனப்பகுதியில்தான். இந்தியாவிலே அந்த ஓரிடத்திலேதான் இப்போது எங்கள் இனம் இருக்கிறது. பஞ்சாப், ராஜபுதனம் முதலிய இடங்களில்கூட முன்பு இருந்ததாம். இப்போது அங்கெல்லாம் இல்லை. அழித்து விட்டார்கள்.

ஆப்பிரிக்காவில் பல இடங்களில் எங்கள் இனம் இருக்கிறது. ஆனால், இந்தியச் சிங்கமாகிய எனக்கும், ஆப்பிரிக்கச் சிங்கத்திற்கும் முக்கியமான ஒரு வேற்றுமை உண்டு. என்னை விட மிகவும் அழகான, அடர்த்தியான பிடரி மயிர் ஆப்பிரிக்கச் சிங்கத்திற்கு உண்டு.

இந்தியாவில் முன்பு நூற்றுக் கணக்கான ராஜாக்கள் இருந்தார்களாம். ஆனால், இப்போது ராஜா என்று யாருமே இல்லையாம். மிருக ராஜாக்களாகிய எங்களுக்கும் அந்தக் கதி வந்து விடக் கூடாதே என்பதுதான் என் கவலை!



செங்கற்பட்டு வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்கம்



செங்கற்பட்டு, 'வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்க'த்திற்கு ஒரு வயது பூர்த்தியாகி, இரண்டாம் வயதில் அடி எடுத்து வைக்கிறது. இரண்டாம் ஆண்டுத் தொடக்கவிழா 22.7.84 அன்று பிற்பகல் மூன்று மணிக்கு, தமிழ்த் தாய் வாழ்த்துடன் புலவர் இரா. இரகுபதி அவர்கள் தலைமையில் 'கல்கி' துணை ஆசிரியர் திரு. பி. எஸ். மணி அவர்கள் முன்னிலையில் சிறப்பாக நடைபெற்றது.

சங்கச் செயலாளர் தே. நா. ஸ்ரீதரன் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

சங்கத்தின் ஆண்டறிக்கையை வழங்கிய சங்கத் தலைவர் த. அருள்சிவபாலன் சங்க உறுப்பினர்கள் பலருக்கும் 'கோகுல'த்தை அறிமுகப்படுத்தி வைப்பதுடன், தொடர்ந்து 'கோகுலம்' இதழ் வாங்குபவர்கள் மட்டுமே சங்கத்தின் நிரந்தர உறுப்பினர்களாவர் என அறிவித்தார்.

அடுத்து வந்த, 'சிறுவர் கலை நிகழ்ச்சி'களில் சொற்பொழிவாற்றிய சிறுமி தே. நா. ராஜலட்சுமி, 'இன்றைய கல்வி உலகில் மாணவிகள்' என்ற தலைப்பில் அறிவியல், பொறியியல், கலையியல் ஆகிய துறைகளில் மாணவிகளின் பங்கு பற்றிப் பேசினார்.

சிறுவன் கா. சரவணன்,பெற்றோரும் குழந்தைகளும்' என்ற தலைப்பில் பெற்றோர் மற்றும் குழந்தைகளின் கடமைகள் பற்றிப் பேசினார். சிறுவன் தே. நா. ஸ்ரீதரன், 'மாணவர்களும் இன்றைய கல்வி நிலையும்' என்ற தலைப்பில் இன்றைய ஆரம்ப வகுப்புகளின் கடுமையான பாடத் திட்டங்கள் பற்றியும், மலிவு விலையில் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்த

கங்கள் கிடைக்காதது பற்றியும், அரசு தயாரித்த நோட்டுப் புத்தகங்கள் பல மாணவர்களுக்குக் கிடைக்கவில்லை எனவும் பேசினார்.

பாடல் நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் த. அருள்சிவபாலன், தானே எழுதிய பாடலைப் பாட, சிறுவர் பூவேந்திரராஜ் இசையமைத்தார்.

'அறுவைகள் ஆயிரம்' என்ற தலைப்பில் சிறுவன் வி. சதீஷ்குமார் வழங்கிய அறுவைத் துணுக்குகளில் சிலவற்றை இங்கே காணலாம்.

''யாரையும் கடிக்காத நாகம் எது?''

''அதுதான் துத்தநாகம்.''

''அண்ணா நகருக்கு அப்புறம் என்ன நகர் வரும்?''

''தம்பி நகர் வரும்.''

குழந்தை இலக்கிய எழுத்தாளர். பழமலைநாதன் எழுதிய 'விகடகவி' என்ற தெனாலிராமன் வாழ்க்கை வரலாற்று நாடகத்தைச் சங்க உறுப்பினர்கள் நடித்துக் காட்டினார்கள்.

'எங்கள் நினைவில் கோகுலம்' என்ற தலைப்பில் சங்க உறுப்பினர்கள் இது வரை வெளிவந்த கோகுலம் இதழ்களை மிக அழகாக விமர்சித்தார்கள்.

அடுத்து சிறப்பு அழைப்பாளர்களான கவிஞர்கள் முகவை சுப்ரமண்யம், மணிமுடி, செந்தமிழ்ச் செல்வன், செங்கை புனித சூசையப்பர் மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் டி. வி. ராகவன், மகாலிங்கம், முத்துக்கிருஷ்ணன், சிவராஜன், அஞ்சலக அதிகாரி சந்திரகாந்தன், ஓய்வுபெற்ற கூட்டுறவுத் துறை சார் பதிவாளர் த. தம்புசாமி ஆகியோர் சங்க உறுப்பினர்களின் பணிகளைப் பாராட்டிப் பேசினார்கள்.

குழந்தை இலக்கிய எழுத்தாளர்கள் இளையவன், சௌந்தர், பழமலைநாதன் ஆகியோர் கதைப் பாடல்கள் வழங்கியதுடன் ஒரு குடும்பம் போல் இச்சிறுவர் சங்கம் செயல்படுவதாகக் கருத்துத் தெரிவித்தனர்.

பி. எஸ். மணி அவர்கள் சங்கத் தலைவரின் எழுத்துத் திறமையையும் மற்றும் சங்கப் பணிகளையும் பாராட்டி ஊக்கம் தரும் வகையில் சிறப்புரை வழங்கினார்.


விழாத் தலைவர் புலவர் இரா: இரகுபதி, (செங்கை புதிய சூசையப்பர் மேல்நிலைப் பள்ளித் தமிழாசிரியர்) தமது உரையில், 'முழுவதும் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களால் பங்கேற்று நடத்தப்பெறும் சங்கம் செங்கை நகரில் இதுதான் முதல்'' என்று கூறினார். சிறுவர் சங்கத்தின் எதிர்கால முன்னேற்றம் பற்றிக் கருத்துக்கள் வழங்கியதுடன் மாணவ மாணவிகளின் உள்ளங்களில் எல்லாம் 'கோகுலம்' மலர்கிறது எனக் கூறினார்.

கே. ஜி. வெங்கடேசன் குழுவினர் மெல்லிசை நிகழ்ச்சி நடத்தி வந்திருந்தோரை மகிழ்வித்தனர்.

படத் தலைப்புகள்:


வெண்ணிலா கோகுலம் சிறுவர் சங்க இரண்டாம் ஆண்டுத் துவக்க விழாவில் சிறப்பு அழைப்பாளர்களுடன், சங்க உறுப்பினர்கள்.

சங்கத் தலைவர் த. அருள்சிவபாலன் பாடுகிறார். அருகில் இசை அமைப்பாளர் பூவேந்திரராஜ்.







மதுபுரத்தின் மன்னன்
கதை: ஆனந்தி
படம்: விநு
ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி அயோத்தியில் பட்டாபிஷேகம் செய்து கொண்ட பிறகு மக்களுக்கு எந்தக் குறையும் இல்லாமல் அரசாண்டு வந்தார். .. சீதாபிராட்டியார் மறுபடியும் ஸ்ரீராம பிரானைப் பிரிந்து வனத்தில் வால்மீகி முனிவர் ஆசிரமத்தில் இருக்கும்படி நேரிட்டது. ஒரு நாள் ஸ்ரீராமபிரான் சபையில்...
..சியவனர் முதலிய முனிவர்கள் தரிசனத்துக்கு வந்தார்கள்.
ஹே! ராமா! எங்களைப் பெரிய ஆபத்திலிருந்து காக்க வேண்டும்.
உடனே செய்கிறேன் சுவாமி!
சியவனர் கதை சொன்னார்..
கிருத யுகத்தில் மது என்ற அசுர அரசன் இருந்தான். அவன் நல்ல நடத்தையுள்ளவன். சிவனைக் குறித்துத் தவம் செய்தான்...
சிவன் பிரத்யட்சமாகி...
மது! இந்த திவ்ய ரதத்தையும் சூலத்தையும் உனக்குத் தருகிறேன். உன் புத்திரனிடம் சில காலம் இருந்து விட்டு என்னிடம் திரும்பும்.
மது தான் பெற்ற சூலத்தை மகனிடம் தந்து....
லவண! இந்தச் சூலம் உன் கையில் இருக்கும் போது எந்தப் பிராணியாலும் உன்னைக் கொல்ல முடியாது.


சியவனர் கதை கூறி முடித்தார்.
மது மகனைப் பிரிந்து வருண லோகத்துக்குப் போய் விட்டார். லவணன் குலம் இருக்கும் கர்வத்தால் மூன்று உலகங்களிலும் உள்ள தபஸ்விகளையும் தேவர்களையும் அடித்துத் துன்புறுத்தி வருகிறான்.
முனிவர்களே! லவணாசுரனை வதம் செய்ய சத்ருக்னனை அனுப்புகிறேன்.
சத்ருக்னனை அழைத்தார் ராமர்.
சத்ருக்னா! உன்னை மதுபுரத்தின் ராஜ்யாதிபதியாக இப்போதே அபிஷேகம் செய்கிறேன்!
ஜய விஜயீ பவ.
சத்ருக்னன் ராமர் அளித்த பானத்துடனும் பெரும் படையுடனும் புறப்பட்டார். வால்மீகி ஆசிரமத்தை அடைந்தார். உணவு அருந்தும் போது...
இன்று நீங்கள் இங்கு தங்கிச் செல்ல வேண்டும். அதற்குக் காரணம் இருக்கிறது.
அன்றிரவு சீதாதேவிக்கு இரண்டு குழந்தைகள் பிறந்தார்கள்.
தர்பையின் மேல்பாகத்தால் முதலில் பிறந்தவனைத் துடைக்க வேண்டும். கீழ்பாகத்தால் மற்றவனைத் துடைக்க வேண்டும். இதனால் குசன் லவன் என்று இரட்டைக் குழந்தைகள் அழைக்கப் படுவார்கள்.
சத்ருக்னன் சீதாதேவியிடம் பர்ண சாலைக்கு வெளியே இருந்தவாறே விடை பெற்றார்.
தாயே! சூரிய குலத்தை விளங்கச் செய்து விட்டீர்கள்... நான் வருகிறேன்.
சத்ருக்னன் ஏழு தினங்கள் பிரயாணம் செய்து யமுனைக் கரையை அடைந்தார்.



சியவனர் வரவேற்றார்.
சியவனரே! லவணாசுரனைப் பற்றிச் சொல்ல வேண்டும்.
உங்கள் வம்சத்தில் மாந்தாதா என்ற சக்கரவர்த்தி இருந்தார். பூமி முழுவதையும் ஆண்டு வந்தார்...
மாந்தாதாவின் சபதம்..
இனி இந்திரனையும் ஜயித்து தேவர்கள் என்னைப் பூஜிக்கும்படி செய்வேன்.
மந்திரி மாந்தாதாவிடம் வந்து...
அரசே! தேவேந்திரன் தங்களைக் காண விரும்புகிறாராம். தேர் அனுப்பியுள்ளார்.
மாந்தாதாவுக்கு சம ஆசனம் தந்தார் இந்திரன்.
மகாராஜனே! நீ தேவருலகை வெல்ல ஆசைப்படுவது இருக்கட்டும். ஆனால் பூவுலகம் முழுவதையும் வென்று விட்டாயா?
பூமியில் எனக்கு கட்டுப்படாத அரசனே கிடையாது!
மது வனத்தில் லவணன் என்ற ராக்ஷசன் பயமில்லாமல் திரிகிறானே! அவனை உன்னால் அடக்க முடிந்தால் நானே உனக்கு இந்திர பதவியைத் தந்து விடுகிறேன்.
பூவுலகு திரும்பினார் மாந்தாதா.
லவணனை ஜயிக்காமல் விட மாட்டேன்.
மாந்தாதாவுக்கும் லவணனுக்கும் கோர யுத்தம் நடந்தது.



லவணன் சிரித்துக் கொண்டே சிவ சூலத்தைப் பிரயோகிக்க மாந்தாதாவும் அவருடைய சைனியமும் சாம்பலானார்கள்.
லவணாசுரன் பற்றி கூறி முடித்தார் சியவனர்.
சத்ருக்னா! கவலைப் படவேண்டாம்! சூலத்தை வீட்டில் வைத்து விட்டு லவணன் காட்டில் திரிவான். அவன் திரும்பி வரும் போது எதிர்த்துக் கொல்வாயாக!
சியவன முனிவரின் யோசனைப் படி நடந்த சத்ருக்னர் லவணன் ஆகாரந்தேட வெளியே சென்றதும் அவன் கோட்டைவாசலில் நின்று கொண்டார்.
பிற்பகலில் லவணன் திரும்பினான்.
அடாடா! நான் கஷ்டப்பட்டு வேட்டையாடி வந்தேனே! இதோ என் வீட்டு வாசலிலேயே ஆகாரம் காத்துக் கொண்டிருக்கிறதே!
மூடனே! நான் ஸ்ரீ ராம பிரானின் தம்பி. சத்ருக்களை நாசம் செய்பவன் என்று எனக்குப் பெயர். நீ உயிரோடு என்னைக் கடந்து போக மாட்டாய்!
ராவணேச்வரன் என் தாயுடன் பிறந்தவர். அவரை உன் அண்ணன் கொன்றதற்குப் பழி வாங்கும் சமயம் வந்து விட்டது. சற்று இரு. உன்னை போய் வந்து விடுகிறேன்.
இதோ! ஓடி ஒளிந்து கொள்ளப் பார்க்கிறாயா? நடக்காது! உடனே யுத்தம் செய்.





சிவன் வழங்கிய சூலம் இல்லாத
போதிலும் லவணன் வீரத்துடன்
போரிட்டான். மரங்
களைப் பிடுங்கி
அடித்தான். பாறை
களைத் தூக்கி எறிந்தான்.
சத்ருக்னன் அவற்றை அம்புகளால்
தடுத்தார்.
கடைசியில் ராமர் கொடுத்த
சரத்தை மந்திரங்களைச் சொல்லி
எய்தார் சத்ருக்னர். அது....
... ஊழித் தீ போல் நெருப்
பைக் கக்கிக் கொண்டு
பாய்ந்தது. லவணன் மலை
போல் சரிந்தான்.
ஆகாயத்தில் தேவர்
கள் கூடி வியக்க
லவணன் மீது பாய்ந்த
ராமசரம் பூமியை
ஊடுருவிப் பின்னர்
கடலில் மூழ்கித் திரும்பியது.
தேவர்கள் மலர்
மாரி பொழிந்து
சத்ருக்னனைக்
கொண்டாடினார்கள்.


மதுபுரத்தை நன்றாக
ஆண்டு வந்தார் சத்
ருக்னர். தர்மம் தழைத்
தது. செல்வம் நிறைந்தது.
பன்னிரண்டு வருஷங்கள்
சென்றன.
ராம லக்ஷ்மண
பரதர்களைப்
பார்த்து எவ்
வளவு நாட்கள்
ஆகி விட்டது.
அயோத்தி
செல்ல வேண்டும்.
குதிரை வீரர்கள் பின்தொடர
சத்ருக்னர் புறப்பட்டார்.
வழியில் வால்மீகி முனிவரின்
ஆசிரமத்தை அடைந்தார்.
வால்மீகியின் ஆசி.
உன் வீரத்தை நானும்
வானோர்களுடன் கண்டு
மகிழ்ந்தேன். லவண
னைக் கொன்று சகல
ருக்கும் நன்மை
செய்தாய்.
அன்றிரவு.
கூஜந்தம் ராம ராமேதி மதுரம் மதுராக்ஷரம்
ஆருஹ்ய கவிதாசாகாம் வந்தே வால்மீகி
கோகிலம்.
இது என்ன
அதிசயம்!
யார் இவ்வளவு
நன்றாக ராம கதை
யைப் பாடுகிறார்கள்!
எப்போதோ
நடந்த சம்பவங்களைப்
பாடுகிறார்களே!
ஆகா!
அடாடா!


சத்ருக்னன் அயோத்தியை அடைந்து சகோதரர்களையும் தாய்மார்களையும் பார்த்து வணங்கி மகிழ்ந்தார். ராமர் அசுவமேத யாகம் செய்தார். அழகான வெள்ளைக் குதிரையை அலங்காரம் செய்து திக் விஜயம் செய்ய அனுப்பினார்கள். யாகக் குதிரையைப் பிடித்துக் கட்டும் தைரியம் எந்த ராஜாவுக்கும் இல்லை. குதிரையைத் தொடர்ந்து ஒரு பெரும் படை சென்றது.
வால்மீகி முனிவர் ஆச்ரமத்தில் முனிகுமாரர்களோடு குசனும் லவனும் விளையாடும்போது அங்கே யாகக்குதிரை வந்தது.
ரிஷிகுமாரர்கள் தடுத்தும் லவ குசர்கள் கேட்கவில்லை.
வேண்டாம்! முரட்டுக் குதிரை. கிட்டே போகாதே!
என்ன பயம்! அழகான குதிரை! அட. நெற்றியில் ஓலை கட்டியிருக்கிறதே.
ஓலையை எடுத்துப் படித்தான் குசன்.
எனக்கு இணையான வீரன் இன்னொருவன் இருந்தால் இந்த யாகக் குதிரையைக் கட்டலாம்!



லவா! சந்தேகப் படாதே! கட்டிப்போடு.
ஐயோ! நமக்கெதற்கு யாகக் குதிரை? பின்னால் சைன்யம் வரும்!
இதோ பார். நீ முனிகுமாரன். குதிரையைக் கட்டக் கூடாது. நாங்கள் க்ஷத்திரியர்கள். இதைத் தொடர்ந்து இந்திரன் வந்தாலும் ஜயிப்பேன்.
எங்களிடம் சரங்கள் இருக்கின்றன. உலகத்தையே ஜெயித்து விடுவோம்.
சத்ருக்னர் குதிரையைத் தொடர்ந்து வந்தார்.
நீங்கள் யாரப்பா? பெரிய மன்னர்கள் செய்யாத காரியத்தைச் செய்கிறீர்களே! இது யாகக் குதிரை தெரியுமா?
ஓ! தெரிகிறதே.
ஓலையில் தான் எழுதியிருக்கிறதே. குதிரையைக் கட்டி விட்டோம். தைரியமிருந்தால் யுத்தம் செய்யுங்கள்.
குறும்பு அதிகமாக இருக்கிறதே. குழந்தைகள் என்று பார்க்கிறேன் இல்லாவிட்டால்....
குழந்தைகளா? பாலனாக இருந்த வாமனன்தான் மகா பலியின் யாகத்தில் வானத்தையும் உலகத்தையும் அளந்தான். தெரியாதா?


யுத்தம் செய்தார்கள்.
சத்ருக்னன் தோற்று, திரும்பி ஓடித் தேரில் ஏறிச் சென்று விட்டார்.
ஐயோ! இந்தச் சிறுவர்களுடைய பாணங்களைத் தாங்க முடியவில்லையே.
யாகசாலையில் ராமருக்குச் செய்தி எட்ட.....
என்ன வேடிக்கை! சத்ருக்னனாவது! தோற்பதாவது! லக்ஷ்மணா! அந்தச் சிறுவர்கள் யார் என்று தெரிந்து கொண்டு குதிரையை மீட்டு வா.
வால்மீகி ஆசிரமத்தை நெருங்கினார் லக்ஷ்மணர்.
ஸ்ரீ ராமபிரானின் சாயலாக விளங்கும் இந்தச் சிறுவர்கள் யார்?
லவ குசர்கள் போருக்கு ஆயத்தமானார்கள்.
அண்ணா! அதோ பார்! இன்னொருவர் வருகிறார்.
உடனே வில்லை எடுத்துக் கொள்.


ராமபிரானைப் போலத் தோன்றிய குழந்தைகளிடம் அன்பு மேலிடவே அவர்களை அடித்து வீழ்த்த மனம் வராமல் தோற்று ஓடினார் லக்ஷ்மணர். ஸ்ரீ ராமபிரானே குதிரையை மீட்க வந்தார்.
இந்தக் குழந்தைகளைப் பார்த்ததும் என் மனத்தில் அன்பு பொங்குகிறதே!
என் வீரத் தம்பிகளைத் தோற்கடித்த நீங்கள் யார்?
நாங்கள் சீதையின் புதல்வர்கள். என் பெயர் குசன். இவன் என் தம்பி லவன். எங்களை ஜெயித்து விட்டுக் குதிரையை மீட்டுப் போங்கள்.
ராமர் பாசத்தால் கட்டுண்டார்.
அருகில் வாருங்கள்!
வீண் பேச்சு எதற்கு? வீரன் என்றால் வில்லை எடுங்கள்.


யுத்தம் தொடர்ந்தது. தன் குழந்தைகளின் வீரத்தைக் கண்டு ஆனந்தப் பட்டார் ராமர்.
தோற்றுப் போன மாதிரி நடித்து ஓடினார்.
இவர்களுடைய வீரத்தை அனுமன் பார்த்து மகிழ வேண்டும்.
குதிரையைத் தேடி மறுபடியும் யாராவது வருவார்கள். இங்கேயே இருப்போம்.
ராமர் கட்டளைப் படி அனுமார் லவகுசர்களைக் காண மரத்துக்கு மரம் தாவி வந்தார். தூரத்தில் குதிரையும் சிறுவர்களும் தெரிந்தார்கள்.
அடாடா! ராம பிரானுடைய ஜாடை அப்படியே இருக்கிறதே. இரண்டும் சிங்கக்குட்டிகள் மாதிரி.



குசலவர்களை சண்டைக்கிழுத்தார் அனுமார். கிளை மேலே விழுந்ததும் அண்ணாந்து பார்த்து அம்பு பொழிந்தார்கள் சிறுவர்கள்.
ஏன் காரணமில்லாமல் சண்டை போடுகிறீர்கள்? நான் வாயு புத்திரன். கடலையே தாண்டினவன். ராக்ஷஸர்களை நசுக்கினவன்.
அண்ணா! குரங்கு பேசுமா?
ஏ குரங்கே! தொண தொணக்காதே! இறங்கி வந்து சண்டை போடு.
யுத்தம் செய்தார்கள். அனுமான் லவன் மீது பாய்ந்து அவனைத் தம் முழங்கையில் இடுக்கிக்கொண்டு போக . . .
ஏய்! நில் நில்! என் தம்பியைப் பிடித்துக் கொண்டு போக விடுவேனா?


லவனை விடுவித்தார் அனுமார்.
ஓ! நீங்கள் அண்ணன் தம்பிகளா? ரொம்ப பல சாலிகளோ? எங்கே உங்கள் பலத்தைக் காட்டுங்கள்.
சரி பார்த்துக் கொள்!
இருவரும் அம்பு போட்டு பூமியைப் பிளக்க அனுமன் ஆச்சர்யப் பட்டாலும் அதை வெளிக்காட்டாமல்...
இவ்வளவு தானா! பூ! வண்டு குடைந்த மாதிரி இருக்கிறது!
அனுமான் அலட்சியமாகக் காலால் மண்ணைத் தள்ளி அந்தப் பள்ளத்தை மூட குசலவர்கள் வியந்தனர்.
என் பலத்தைப் பாருங்கள்.



அனுமார் பூமியைக் குத்த பிரம்மாண்டமான பள்ளமும் அருகில் குன்றும் தோன்றின.
குசலவர்கள் பிரமிப்பை மறைத்துக் கொண்டு...
இவ்வளவு தானா உங்கள் பலம்? எங்கள் சரங்களுக்குப் பதில் சொல்லுங்கள்.
லவகுசர்கள் அம்பு எய்யும் போது அவை தம்மைத் தாக்கு முன்பே பிடித்து எறிந்தார் அனுமான்.
லவகுசர்கள் இன்னும் விரைவாகச் சரங்களைத் தொடுத்தனர்.
சீதாதேவியைப் பார்க்க வேண்டும். இவர்களிடம் அகப்பட்டுக் கொள்ளலாம்.
தோற்றது போல் பாவனை செய்த அனுமானை குசனும் லவனும் கட்டி இழுத்துக் கொண்டு போனார்கள்.



குழந்தைகளைத் தேடி வந்த சீதாதேவி மாருதியைப் பார்த்து வியந்தாள்.
அம்மா! நாங்கள் இவரை ஜெயித்துக் கட்டி விட்டோம்.
இவரைக் கட்ட முடியுமா? இது தெய்வ சங்கல்பமா? விதியா? ... ஐயோ இவரை அடிக்காதீர்கள்!
சீதையின் கண்களிலிருந்து கண்ணீர் பெருகியது.
ஹனுமானே! உனக்கு எவ்வளவோ கடமைப் பட்டவள் அல்லவா நான்!
அம்மாவுடைய துக்கத்தைப் பார்த்துக் கலங்கிய சிறுவர்கள் அனுமனைக் கட்டவிழ்த்து விட்டார்கள்.
இவர் பூஜிக்கத் தகுந்தவர். நமஸ்காரம் செய்யுங்கள்.


இருவரும் அனுமானை நமஸ்கரித்தார்கள்.
குழந்தைகளின் பராக்கிரமத்தைப் பார்த்துப் பரவச மடைந்தேன் தாயே!
தங்களைத் தரிசித்த இன்று எனக்குச் சுதினம்!
தெரியாமல் உங்களை அடித்து விட்டோம். மன்னிக்க வேண்டும்.
அனுமான் இருவரையும் கட்டி அணைத்துத் தோள்களில் தூக்கிக் கொண்டார்.
இப்படித்தான் ராம லக்ஷ்மணர்களை யுத்தத்தில் சுமந்தேன்!
விடைபெறும் சமயம் அனுமான் பணிவு காட்டி மறுபடி வேடிக்கை செய்தார்.
வீரர்களே! யாகக் குதிரையை அழைத்துப் போக அனுமதி வேண்டுகிறேன்!
அவிழ்த்து விடுகிறோம் அழைத்துப் போங்கள்!
யாகக் குதிரையுடன் ராமபிரானிடம் திரும்பினார் அனுமான்.
குசலவர்களே! நீங்கள் மூன்று உலகங்களிலும் புகழ் பெறும் வீரர்கள்!

உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை—19



வின்னி என்னும் கரடிக் குட்டி

மூலம்: ஏ.ஏ. மில்னி

தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

1- வின்னியும் டைகரும்

கிறிஸ்தொபர் ராபின் என்பவன் ஒரு சீமானுடைய செல்லப் பிள்ளை. இங்கிலாந்தில் வசித்து வந்தான். அவர்களுடைய மாளிகை மிகவும் பெரியது. மாளிகைக்கு அருகிலேயே அவர்களுக்குச் சொந்தமான ஒரு காடு இருந்தது. அடர்ந்த காடு. ராபினுடைய அப்பா அவனுக்கு நிறையப் பொம்மை மிருகங்களும், பறவைகளும் வாங்கிக் கொடுத்திருந்தார். அந்தப் பொம்மைகளுடன் ராபின் நாள் முழுவதும் காட்டிலேயே விளையாடினான். காட்டில் அவர்கள் அடித்த கொட்டம் கொஞ்ச நஞ்சமல்ல! ராபின் தன் பொம்மைகளை மிகவும் நேசித்தான்!

ராபினிடம் என்னென்ன பொம்மைகள் இருந்தன தெரியுமா? முதலாவதாக அவன் ஆசையோடு விரும்பிய வின்னி என்னும் கரடிக் குட்டி. அது குள்ளமாகக் குண்டாகப் பஞ்சு திணிக்கப்பட்டு, மெத்து மெத்தென்று அழகாக இருந்தது. அடுத்து வின்னிக்கு மிக நெருங்கிய சிநேகிதனை பிக்லெட் என்னும் சின்னஞ்சிறு பன்றிக் குட்டி. அதற்கு எதைப் பார்த்தாலும் பயம். மேலும் கங்கா என்னும் தாயும், ரூ என்னும் குட்டியுமாக இரண்டு கங்காருக்கள், டைகர் என்னும் புலிக்குட்டி, முயல், கழுதை, ஆந்தை ஆகிய எல்லோரும் சிறுவன் ராபினுடைய உலகத்தில் மிகவும் முக்கியமானவர்கள். ஒவ்வொரு மிருகத்திற்கும், பறவைக்கும் காட்டில் தனித்தனியே அழகான வீடு இருந்தது.

ஒருநாள் பளிச்சென்று வெய்யில் அடித்தது. பறவைகளின் பாட்டும், வண்டுகளின் ரீங்காரமும், வண்ணத்துப் பூச்சிகளின் வர்ண ஜாலங்களுமாகக் காடே களைகட்டி இருந்தது. ஜன்னல் வழியாக வெய்யில் நுழைந்ததும் வின்னி துயில் நீங்கி எழுந்தது. சோம்பல் முறித்து விட்டு, ஒரு சிவப்புச் சட்டையைப் போட்டுக் கொண்டு நேராகச் சமையலறைக்குள் புகுந்தது. பெரிய பெரிய தேன் ஜாடிகள் வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்தன. ஒரு தேன் ஜாடியை எடுத்து மேசை மீது வைத்தது.



என்னென்ன வேணும்?

"அம்மா நான் பெயிண்டிங் காம்பெடிஷனிலே கலந்துக்கப் போறேன். பீட்ரூட் சாறு, கீரை அலசின தண்ணி, ஸ்ட்ராங் காபி, சாந்துப் புட்டி, மை, கரித்துண்டு எல்லாம் தாம்மா"

ருசி பார்த்து நிதானமாகக் குடித்தது. பிறகு காலாறக் காட்டில் நடை போட்டது.

மர நிழலில் கிடந்த ஒரு கட்டை மேல் உட்கார்ந்து கொண்டு, ''அடுத்து என்ன செய்யலாம்?'' என்று யோசித்தது. புயலைப் போன்ற வேகத்துடன், துள்ளித் துள்ளி டைகர் அந்தப் பக்கம் வந்தது. அது கறுப்பு, ஆரஞ்சுப் பட்டை போட்ட பைஜாமா அணிந்திருந்தது. வின்னியை மோதிக் கீழே தள்ளி அதன்மேல் முன்னங்கால்களை ஊன்றிக் கொண்டு கடகடவென்று சிரித்தது. ''ஹலோ! நலமா? நான்தான் டைகர்! துள்ளித் துள்ளி நிறையத் தேகப் பயிற்சி செய்ய வேண்டும். வருகிறேன்!'' என்று சொல்லிக் கொண்டே மறைந்தது. வின்னிக்குத் தலையைச் சுற்றியது.

ஊதாச் சட்டையும், பச்சைத் துண்டும் அணிந்து பன்றிக் குட்டி பாதை ஓரமாகப் போய்க் கொண்டிருந்தது. துள்ளி வந்த டைகர் அதை இடித்துத் தள்ளி விட்டு முயலின் வீட்டை நோக்கிப் பறந்தது. தோட்டத்திலிருந்த காய் கனிகளைப் பறித்துக் கைவண்டியில் வைத்துக் கவனமாக இழுத்து வந்தது முயல்.

மின்னலைப் போலத் தாவியது டைகர். அடுத்த கணம் முயல் கீழே விழுந்து கிடந்தது. கைவண்டி உருண்டு ஓடியது. காய்கனிகள் நாலாபுறமும் சிதறின. அழகான தோட்டம் அலங்கோலமாகக் காட்சி அளித்தது. முயலுக்குக் கோபமாக வந்தது. ''தோட்டத்தையே அழித்து விட்டாயே, பாவி! என்றைக்குத்தான் நீ துள்ளுவதை நிறுத்தப் போகிறாயோ!'' என்று ஆத்திரத்தோடு பேசியது முயல்.

''புலியின் அதிசயம் தெரியாதா?
பூப்போல்பாதம் ஸ்பிரிங் ரப்பர்
தலைகீழ்க் கரணம் போட்டிடுவேன்!
தாவி நாலும் பாய்ந்திடுவேன்!''—
என்று உற்சாகமாகப் பாடிக்கொண்டே டைகர் துள்ளிச் சென்றது.

எப்படியாவது டைகரின் கொட்டத்தை அடக்குவதென்று முயல் தீர்மானித்தது. ஆகவே, வின்னி, பன்றிக் குட்டி இருவரையும் அழைத்து ஒரு கூட்டம் போட்டது. முயல் தலைமை வகித்து, ''டைகர் நமக்கு மிகவும் நெருங்கிய நண்பன்தான். இருந்தாலும் அது அளவுக்கு மீறித் தொந்தரவு தருகிறது. அது துள்ளுவதை நாம் நிறுத்தியாக வேண்டும்,'' என்று பேசியது. ''ஆமாம், ஆமாம்!'' என்று பன்றிக் குட்டி மெல்லிய குரலில் ஆமோதித்தது. ''நீ என்ன நினைக்கிறாய்?'' முயல் வின்னியைக் கேட்டது. வின்னி தூங்கி வழிந்தது. பன்றிக்குட்டி அதை ஓர் இடி இடித்தது. ''என்ன, என்ன? மறுபடியும் சொல்லு. என் காதில் பஞ்சு அடைத்துக் கொண்டிருக்கிறது. கேட்கவில்லை'' என்று வின்னி பதிலளித்தது. ''டைகரின் தொந்தரவை நிறுத்த எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. காட்டின் ஒரு புதிய பகுதிக்கு நாம் பயணம் போய் டைகரை அங்கேயே விட்டுவிடுவோம். வழிதெரியாமல் அது திண்டாடட்டும்!'' என்று முயல் ஆலோசனை கூறியது. பன்றிக் குட்டியும், பாதித் தூக்கத்தில் இருந்த வின்னியும் அதற்கு இசைந்தன.

மறுநாள் காலை. ஒரே மூடுபனி, குளிர். எதிரே வருபவரின் உருவம் தெரியவில்லை. முயல், வின்னி, பன்றிக் குட்டி, டைகர் — ஆகிய நான்கும் காட்டை ஆராய்வதற்காகப் பயணம் துவக்கின. வின்னி வயிறு நிறையத் தேனைக் குடித்து விட்டுப் பகல் உணவுக்காகவும் கையில் கொஞ்சம் எடுத்துக் கொண்டது. டைகர் துள்ளித் துள்ளி வெகு தூரம் சென்று விட்டது. மற்ற மூன்றும் பின்னால் வந்தன.

''டைகர் வெகு தூரம் சென்று விட்டது. இதுதான் நல்ல சமயம். நாம் இந்த மரப்பொந்தில் ஒளிந்து கொள்ளலாம்'', என்று சொல்லிக் கொண்டே ஒரு பழைய மரக்கட்டையின் பொந்தில் முயல் ஒளிந்துகொண்டது. வின்னியும், பன்றிக்குட்டியும் அதைப் பின்பற்றின.

வின்னியால் வெகுநேரம் அந்த அசௌகர்யமான இடத்தில் இருக்க முடியவில்லை. வயிறு பசிக்கவே, வின்னி பொந்துக்குள் இருந்து தலையை வெளியே நீட்டியது. அப்போது, ''ஹலோ, ஹலோ! எங்கு இருக்கிறீர்கள்?'' என்று மூடுபனியிலிருந்து டைகரின் குரல் கேட்டது. வின்னி தலையை உள்ளே இழுத்தது. டைகரும் அதே கட்டையின் மீது தாவிச் சிறிது நேரம் காத்திருந்தது. நண்பர்களின் பதில் கிடைக்காததால், அது மறுபடியும் வேறு திசைக்குத் தாவியது.

மறைவிடத்திலிருந்து முயல், வின்னி, பன்றிக்குட்டி மூன்றும் வெளியே வந்தன. சுற்றிச் சுற்றி வந்தாலும் மறுபடியும் அவை ஆரம்பித்த அந்த மணல் படுக்கைக்கே வந்து சேர்ந்தன. மூடுபனியின் காரணமாக வழிதெரியவில்லை. ''நீங்கள் இங்கேயே இருங்கள். நான் சரியான வழியைக் கண்டுபிடித்து வருகிறேன்'', என்று உரைத்து முயல் கிளம்பியது. வின்னியும், பன்றிக்குட்டியும் காத்திருந்தன.

முயல்திரும்பவே இல்லை. வின்னிக்குக் கடுமையாகப் பசித்தது. வீட்டில் நிறையத் தேன் இருப்பது நினைவுக்கு வந்தது. உடனே அது பன்றிக்குட்டியையும் அழைத்துக் கொண்டுவீட்டை நோக்கி நடை போட்டது.

எதிரே யார் வந்தது தெரியுமா? துள்ளித் திரிந்த டைகர் தான்! அது வழக்கம் போல நண்பர்கள் இருவரையும் இடித்துக் கீழே தள்ளி விட்டு, ''எங்கே போய் விட்டீர்கள்? எத்தனை நேரமாகத் தேடுகிறேன்?'' என்று செல்லமாகக் கேட்டது.

''வீட்டுக்கு வழி தேடுகிறோம்!'' என்று சொல்லி வின்னி தப்பித்துக் கொண்டது.

''முயலின் திட்டம் பலிக்கவில்லை போலிருக்கிறதே!'' என்று கிகிகித்தது பன்றிக் குட்டி.

''எங்கே அந்த முயல்? ஒருவேளை மூடுபனியில் வழி தவறிப் போயிருக்கும்,'' என்று சொல்லி டைகர் மறைந்தது.

முயலுக்கு உண்மையிலேயே வழி தவறிப் போய் விட்டது. காட்டில் வந்த விநோதமான சப்தங்களைக்





பாபுவுக்குச் சிறுமி கொடுத்த பணப்பை!

ஒருசமயம் நம் நாட்டில் ஓர் ஆசிய மகாநாடு நடந்தது. அந்தச் சமயம் தங்கள் பெற்றோருடன் கூட அநேகம் ஜப்பானியக் குழந்தைகள் வந்திருந்தன. ஒரு ஜப்பானியச் சிறுமி, எல்லோரும் பாபுவுக்குப் பரிசுகள் கொடுப்பதைக் கவனித்தாள். தானும் ஏதாவது கொடுக்க வேண்டும் என்று எண்ணினாள். உடனே தன்னிடம் இருந்த அழகான வர்ண கைக்குட்டையில் ஒரு சிறு பணப்பை தைத்து அதைக் கொண்டு வந்து பாபுவிடம் அளித்தாள். காந்தி புன்முறுவலுடன், ''என்னிடம் ஒரு பைசாக் கூட இல்லையே, இதை வைத்துக் கொண்டு நான் என்ன செய்வது?'' என்றார்.

உடனே அந்தச் சிறுமி வெளியே ஓடினாள். சற்று நேரத்தில் திரும்பி வந்து, பைநிறையப் பணத்துடன் திரும்பக் கொடுத்தாள். பாபு பையைத் திறந்து பார்த்தார். எண்ணிப்பார்த்தார். சரியாக நூறு ரூபாய்! வெளியில் போய் மகாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த பிரதிநிதிகளிடமே வசூல் செய்து விட்டாள் அந்தச் சிறுமி. பாபுவுக்கு மிகவும் மகிழ்ச்சி. ''இந்தப் பணத்தை உன்னைப் போன்ற குழந்தைகளுக்காகவே செலவு செய்வேன்'' என்றார் உணர்ச்சியுடன்.

—பாலமணி சேகர்.

கேட்டு அது பயந்து நடுங்கியது. பசியும், சோர்வும் அதை ஆட்கொண்டன. திடீரென மூடுபனியிலிருந்து முளைத்த டைகரும் களைத்துப் போன முயலும் மோதிக் கொண்டன. முயல் சரிந்தது. ''நீ காணாமல் போகவில்லையா?'' என்று முயல் கேட்டது.

''புலி எப்போதுமே வழி தவறாது! என் வாலைப் பிடித்துக் கொள். உன்னைப் பத்திரமாக வீட்டுக்கு அழைத்துப் போகிறேன்!'' என்று கம்பீரமாகக் கூறியது டைகர். முயலுக்குத் துக்கமும், அவமானமும், தாங்க முடியவில்லை. பேசாமல் டைகரின் வாலைப் பற்றியது. முயலை இழுத்துக் கொண்டே டைகர் வீடு நோக்கித் தாவியது.

முயலின் திட்டம் தோற்றது. டைகரின் துள்ளல் அதிகரித்தது. பனிக் காலம். காடு முழுவதும் வெண்பனிப் போர்வை. கங்காவின் குட்டியான ரூ நீல ஸ்வெட்டரும், ஸ்கார்ஃபும் அணிந்திருந்தது. தன் தோழனை டைகருக்காக அது தபால் பெட்டியின் மேல் ஏறிக் காத்திருந்தது. நாலு கால் பாய்ச்சலில் வந்த டைகர் ரூவை இடித்துக் கீழே தள்ளிவிட்டு, ''ஹலோ! விளையாடப் போகலாமா?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டது. ''ரூவைக் கவனமாகப் பார்த்துக் கொள். சீக்கிரம் திரும்பி விடுங்கள்'', என்றது கங்கா.

டைகரும், ரூவும் குதித்துக் குதித்துச் சென்றன. வழியில் முயலைச் சந்தித்தன. தன் வீட்டிற்கு அருகிலிருந்த உறைந்து போன குளத்தில் முயல் சறுக்கி விளையாடிக் கொண்டிருந்தது. ''உனக்குச் சறுக்கு விளையாட்டுத் தெரியுமோ?'' ரூ கேட்டது.

''புலிக்குத் தெரியாத ஆட்டமும் உண்டா என்ன?'' என்று சொல்லிக் கொண்டே, டைகர் சறுக்கு மைதானத்திற்குத் தாவியது. சுழன்று, சுழன்று வெகு நேரம் ஆடியது. கடைசியில் நிலை தடுமாறி அது முயலை நோக்கி வேகமாக வந்தது. முயல் ஒதுங்க முயன்றது. அதற்குள் எதிர் எதிராகச் சறுக்கி வந்த டைகரும், முயலும் மோதின. டைகர் பாதை ஓரத்தில் போய் விழுந்தது. முயல் ஆகாயத்தில் தூக்கி எறியப்பட்டுத் திறந்த கதவின் வழியாகத் தன் வீட்டிற்குள் பொத்தென்று விழுந்தது. வீட்டிலிருந்த மண்பாண்டங்கள் சிதறி உருண்டன.

சறுக்கு மைதானத்தை விட்டு டைகரும் ரூவும் பாதை வழியாகச்

சென்றன. ''சறுக்கு ஆட்டம் பிடிக்க வில்லை!'' என்று டைகர் கூறியது.

''வேறு என்ன பிடிக்கும்? மரம் ஏறத் தெரியுமா?'' ரூ கேட்டது.

''புலிக்குத் தெரியாத வித்தையும் உண்டா? ஏறலாம் வா'' என்று பதிலளித்தது. டைகர் ரூவை முதுகில் ஏற்றிக் கொண்டது. அருகிலிருந்த ஓர் உயரமான மரத்தின் மேல் கிடுகிடுவென ஏறி உச்சியை அடைந்தது.

திடீரெனக் காற்று வீசியது. மரம் ஆடியது. டைகர் கிளையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டது. பேசாமல் தரையிலேயே இருந்திருக்கலாமே என எண்ணியது. ஆனால் டைகரின் வாலைப் பிடித்துக் கொண்டு உற்சாகமாக ஊஞ்சல் ஆடிய ரூ, பிடி தளர்ந்ததால் கீழே இருந்த கிளையின் மேல் விழுந்தது. டைகர் எட்டிப் பார்த்தது. தரை பாதாளத்தில் இருப்பது போலத் தோன்றியது. டைகருக்குத் தலையைச் சுற்றியது. பயத்தால் அது கிளையை மேலும் இறுகப் பற்றியது.

மரத்தின் உச்சியிலிருந்த டைகரும், ரூவும் காற்று அடிக்கும் திசையில் ஊசலாடின. பனியில் பதிந்திருந்த சுவடுகளைப் பார்த்துக் கொண்டே வின்னியும், பன்றிக் குட்டியும் அந்தப் பகுதிக்கு வந்தன. துஷ்ட மிருகங்கள் நடந்த அடையாளமோ எனப் பயந்து கொண்டே அவை முன்னேறின. ''ஹலோ! ஹலோ!'' என்று ரூவின் குரல் கேட்டது. வின்னியும், பன்றிக் குட்டியும் விரைந்தன. ''டைகர் உச்சியில் மாட்டிக் கொண்டு விட்டது. இறங்க முடியவில்லை. ராபினைக் கூப்பிடுங்கள். கொஞ்சம் உதவி செய்யுங்கள்'', என்று ரூ கூவியது.

செய்தி பறந்தது. ராபின், முயல், கங்கா ஆகியோர் விரைந்தனர். டைகரின் நிலைக்கு நண்பர்கள் இரக்கப்பட்டனர். ''நன்றாக வேண்டும். இப்போது அதனால் துள்ள முடியாது, இல்லையா?'' என்று சொல்லி முயல் சந்தோஷப்பட்டது.

ராபின் தன் கோட்டைக் கழற்றினான். ஆளுக்கு ஒரு மூலையாக அதை மரத்தடியில் பிடித்துக் கொண்டனர். கிளையை விட்ட ரூ நேராகக் கோட்டில் விழுந்து அம்மாவின் கைக்குத் தாவியது. ''நீயும் அதேபோல் குதி'', என்று ராபின் டைகரிடம் சொன்னான். ''எனக்குப் பயம். நான் மாட்டேன்'' என்றது டைகர்.

''அது குதிக்கவே வேண்டாம். உச்சியிலேயே இருக்கட்டும்'', என்று உரைத்தது முயல்.

''எப்படியாவது நான் தரையில் இறங்கினால் போதும். எனக்குப்புத்தி வந்தது. இனிமேல் துள்ளவே மாட்டேன். சத்தியம்'' என்று கூறி டைகர் சத்தியம் செய்தது.

''குதிக்க முடியாவிட்டால்பிடியைத் தளர விடு. மெதுவாகச் சறுக்கி வரலாம்'', என்றான். ராபின். அவ்வாறே செய்து டைகர் இறங்கியது. எல்லோரும் வீட்டுக்கு நடந்தனர்.

''சத்தியம் செய்திருக்கிறாய். இனிமேல் துள்ளக் கூடாது'' என்று முயல் நினைவுபடுத்தியது. பழைய பொலிவையும், உற்சாகத்தையும் இழந்த டைகர், முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வேகமாக நடந்தது. டைகரின் குறும்பும், கிண்டலும், கேலியும் எங்கே போயின என்றே தெரியவில்லை. ''எப்படி இருந்த டைகர் எப்படி ஆகிவிட்டது!'' என்று நண்பர்கள் பரிதாபப்பட்டனர். ''எனக்குத் துள்ளித்திரியும் டைகரைத் தான் பிடிக்கும்'', என்றது ரூ. மற்றவர்கள் அதை ஒரு மனதாக ஆமோதித்தனர். உடனே ''புலியின் அதிசயம் தெரியாதா...?'' என்று பாடிக் கொண்டே டைகர் துள்ளத் தொடங்கியது. டைகரின் நண்பர்களும் பாட்டுக்கு ஏற்றாற் போல் துள்ளித் துள்ளி ஆடினர்.

2. வின்னியும் தேன் கூடும்

வின்னியின் வீடு ஒரு பழைய மரப் பொந்தில் இருந்தது. அழைக்கும் மணி, கதவு, ஜன்னல் எல்லாம் காணப்பட்டன. ஜன்னலுக்கு வெளியே பூந்தோட்டம். மலர்களையும் தேனீக்களையும் வின்னிக்கு மிகவும் பிடிக்கும். அவைகள் தானே ருசியான தேனைத் தருகின்றன! இலை உதிர் காலம். வின்னி வாசலில் தீமூட்டிக் குளிர் காய்ந்து கொண்டிருந்தது.

கடிகாரம் மணி அடித்தது. ''மணி அடித்தால் என்ன செய்ய வேண்டும்?'' என்று வின்னி யோசித்தது. அது தான் மக்குக் கரடி ஆயிற்றே! ஒன்றுமே ஞாபகத்துக்கு வரவில்லை. உள்ளே போய்க் கண்ணாடியின் முன்னால் நின்றது. அதில் தெரிந்த உருவத்தைப் பார்த்து, ''உனக்கு ஞாபகம் வருகிறதா?'' என்று கேட்டது. உருவம் 'இல்லை' என்று தலையை அசைத்தது. இளைப்பதற்காகத் தேகப் பயிற்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் திடீரெனத் தோன்றியது. நன்றாகக் குனிந்து, நிமிர்ந்து, கைகளை நீட்டி

வின்னி தேகப்பயிற்சி செய்தது. தேகப் பயிற்சி முடிவதற்குள் வின்னிக்குப் பசி வயிற்றைக் கிள்ளியது.

சமையல் அறையிலிருந்த அலமாரியின் கதவைத் திறந்தது. தேன், பால், சாக்லேட் — எல்லாம் வரிசையாக இருந்தன. ஒரு தேன் குடத்தை எடுத்து மெதுவாக மேசைமேல் வைத்தது. அருகில் உட்கார்ந்து கொண்டு குடத்தின் உள்ளே கையை விட்டது. குடம் காலி! குடத்தை அப்படியே வாயில் கவிழ்த்துக் கொண்டது. அடியில் இருந்த தேன் வின்னியின் முகத்தில் வழிந்தது. தேனீக்கள் ஜன்னல் வழியாக உள்ளே புகுந்து வின்னியின் முகத்தை மொய்க்கத் தொடங்கின.

சிறகடித்து வெளியே பறந்து போகும் தேனீக்களை வின்னி பார்த்தது.

''தேனீயைப் போல் சிறகிருந்தால்
திசைகள் தோறும் பறந்திடுவேன்!
வானை முட்டும் மரமெனினும்
வாரித் தேனை உண்டிடுவேன்!''

என்று பாடிக் கொண்டே தேனீக்களைப் பின்பற்றி வீட்டை விட்டு வெளியேறியது. தேனீக்கள் ஒரு மரத்தின் உச்சியில் புகுந்து மறைந்தன. வின்னி மரத்தில் ஏற முயன்றது. கீழே இருந்த முட் புதரில் விழுந்து உடம்பெல்லாம் காயம். முட்களைத் தட்டிக்கொண்டே ராபினைத் தேடிச் சென்றது.


கழுதைக்கு வால் ஒடிந்து போயிருந்தது. ராபின் சீர்செய்து கொண்டிருந்தான். கங்கா, ரூ, ஆந்தை, ஆகியவை சுற்றி நின்று வேடிக்கை பார்த்தன. வின்னி ராபினை அணுகி வணக்கம் கூறியது. ''வின்னி! உனக்கு என்ன வேணும்?'' ராபின் ஆசையோடு கேட்டான். ராபினுடைய விளையாட்டு அறையின் வாசலில் பொம்மைகள் சிதறிக் கிடந்தன. மூலையில் ஒரு சைக்கிள். அதன் பிடியில் ஒரு நீல நிற பலூன் பறந்து கொண்டிருந்தது. வின்னி அதைப் பார்த்ததும், ''ஒரு பலூன் தர முடியுமா?'' என்று கேட்டது.

''எதற்கு பலூன்?''

''அதோ அந்த மரத்தின் மேல் தேன் இருக்கிறது. பறந்து சென்று தேன் குடிக்கப் போகிறேன்'', என்று மற்றவர்களுடைய காதில் விழாதபடி ரகசியமாகச் சொன்னது வின்னி.

''தேனீக்கள் உன்னைக் கொட்டுமே?''

''ஒரு தந்திரம் செய்கிறேன். நன்றாகச் சேற்றில் புரண்டு ஒரு கறுப்பு மேகத்தைப் போல வேஷம் போட்டுக் கொள்வேன். அவை ஏமாறும்'' என்று





மீட்டரும் அடியும்!

"மீட்டர் கணக்கு வந்தப்புறம் கூட எங்க கணக்கு வாத்தியார் இன்னும் அடியையே உபயோகப்படுத்துகிறார்."

"அப்படியா!"

"ஆமா, இப்பக்கூட கணக்கு சரியா போடாத போனல் அடிதான் கொடுக்கிறார்!" -கீழை அ. கதிர்வேல்

சொல்லிச் சேற்றில் புரண்டு விட்டு வந்தது.

ராபின் சிரித்துக் கொண்டே பலூனைக் கொடுத்து, வின்னியைமரத்தின் பக்கம் தள்ளினான். வின்னி விர்ரென்று பறந்தது. மரத்தின் உச்சியிலிருந்த தேன் கூட்டை நெருங்கிக் கையை உள்ளே விட்டது. கையை வெளியே எடுத்த போது, கைநிறையத் தேனும், ஈக்களும் இருந்தன. அப்படியே வாயில் போட்டுக் கொண்டது. தொண்டை கரகரத்தது. இருமல் வந்தது. வாய், காது, மூக்கு வழியாகத் தேனீக்கள் வெளியே வந்து வின்னியைச் சூழ்ந்தன.

வின்னிக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வின்னி ஒவ்வொரு முறை தேனடைக்குள் கையை விடும் போதும், தேனீக்கள் கூட்டம் கூட்டமாக வெளியே வந்தன. வின்னியை வட்டமிட்டுக் கொட்டத் தொடங்கின. வின்னிக்கு வலி தாங்க முடியவில்லை. அதே சமயத்தில் பலூனில் காற்று குறையத் தொடங்கியது. 'ஓ'வென்று கதறிக் கொண்டே வின்னி கீழே விழுந்தது. கீழே இருந்த ராபின் வின்னியைத் தாங்கிக் கொண்டான். தேனீக்கள் இருவரையும் நோக்கிப் படையெடுத்தன. ராபின் வின்னியைத் தூக்கிக் கொண்டு ஓடினான். சேற்றில் இறங்கிக் கையிலிருந்த குடையை விரித்தான். தேனீக்கள் அவர்களைக் கடந்து நேராகப் பறந்து போயின. இருவரும் சேற்றைப் பூசிக் கொண்டு வீட்டை அடைந்தனர்.

காலையிலிருந்து வின்னி ஒன்றும் சாப்பிடவில்லை. நிமிடத்திற்கு நிமிடம் அதற்குப் பசி அதிகரித்தது. "தேன் சாப்பிட வேண்டுமே, அதற்கு என்ன வழி!" என்று யோசித்தது. உடனே, விருந்தினர்களை உபசரிக்கும் முயலின் நினைவு வந்தது.

சாப்பாட்டு மேசை மீது ரொட்டி, தேன், தேநீர் ஆகியவற்றை வைத்துக் கொண்டு அப்போது தான் முயல் சாப்பிட உட்கார்ந்தது. முயலைக் கூப்பிட்டுக் கொண்டே வின்னி சிறிய கதவின் வழியாக உள்ளே நுழைந்தது. வின்னியின் குரலைக் கேட்டதுமே முயல், அவசர அவசரமாகத் தேன் குடத்தை ஒளித்து வைத்தது.

தன்னுடைய உணர்ச்சிகளை வெளிக்காட்டாமல் முயல் வின்னியைச் சாப்பிட அழைத்தது. வின்னி உற்சாகமாகப் பாடிக் கொண்டே மேசையில் அமர்ந்தது. முயல் வின்னிக்குக் கொஞ்சம் ரொட்டியும் தேனும் கொடுத்தது.

"இன்னும் கொஞ்சம் தேன் கொடேன்", வின்னி கேட்டது.

"நீயே எடுத்துக் கொள்", என்று சொல்லி முயல் தேன் குடத்தை நகர்த்தியது.

உடனே வின்னி அந்தக் குடத்தைக் கையில் எடுத்து மடக் மடக்கென்று தேனைக் குடித்தது. அது காலி ஆனதும் அடுத்த குடம். அப்புறம் இன்னொரு குடம். இப்படிப் பல தேன் குடங்களை உருட்டியது வின்னி. கடைசியில் ஏப்பம் விட்டுக் கொண்டே முயலுக்கு நன்றி சொல்லியது. முகத்தில் வழியும் தேனைத் துடைத்துக்கொண்டு வாசல் பக்கம் சென்றது. கதவில் நுழைந்ததும் வின்னியால் முன்னுக்கும் போக முடியவில்லை! பின்னுக்கும் வர முடியவில்லை! முயல் அதை வெளியே தள்ள முயன்றது. பலிக்கவில்லை.

"அதிகமாகச் சாப்பிட்டதனால் வந்த கஷ்டம்!" என்றது முயல்.

"இல்லை, இல்லை. கதவு சின்னதாக இருப்பதால் வந்த கஷ்டம்!" என்று பதிலளித்தது வின்னி!

வின்னியை விடுவிக்கும் முயற்சியில் முயல் தோற்றது. ஆகவே, ராபினை அழைத்து வரக் கொல்லைப் புறக்கத



காணாத படம்!

"உன் புத்தகத்தில் மட்டும் கப்பல் படம் எங்கேடா காணோம்?"

"அதைக் கிழிச்சுக் கப்பல் பண்ணித் தண்ணியிலே விட்டுட்டேன்."

வின் வழியாகப் பாய்ந்தது. அந்தச் சமயத்தில் வின்னியின் முன்னே ஆந்தை தோன்றியது. "யாரது? வின்னியா? என்ன தம்பி வசமாக மாட்டிக் கொண்டாயா?" — என்று கேலி செய்தது.

"அதெல்லாம் ஒன்றும் இல்லை. சும்மாப் பொழுது போக்காக உட்கார்ந்திருக்கிறேன்", என்று சொல்லி வின்னி ஒரு பாட்டை முணுமுணுத்தது.

"சும்மா கதை விடாதே, தம்பி! பெரிய திறமைசாலி வந்தால் கூட உன்னை விடுவிப்பது கஷ்டம்", என்றது ஆந்தை.

முயல் ராபினை அழைத்து வந்தது. "இதோ! உன்னை விடுவிக்கிறேன்— வின்னி! கவலைப்படாதே!" என்று சொல்லிக் கொண்டே ராபின் செயலில் இறங்கினான். வின்னியின் தலையும் பாதி உடம்பும் வெளியே நீட்டிக் கொண்டிருந்தன. பின் பகுதி வீட்டுக்குள் இருந்தது. உள்ளேயிருந்து முயல் வின்னியைத் தள்ளியது. வெளியேயிருந்து ராபின் அதை இழுத்தான். வின்னி அசையவில்லை.

"வின்னி! உன்னை வெளியேற்ற ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. நீ இளைக்க வேண்டும்", என்றான் ராபின்.

"அதற்கு எவ்வளவு நாள் ஆகும்"? வின்னி கேட்டது.

"நாளோ, வாரமோ, மாதமோ — யாருக்குத் தெரியும்? நீ இளைக்க வேண்டும். அவ்வளவுதான்!" ராபின் பதிலளித்தான்.

வின்னியின் பின்புறம் எதிரில் இருந்த கண்ணாடியில் பிரதிபலித்தது. "மாதக் கணக்கில் நான் இதையே சகித்துக் கொண்டிருக்க வேண்டுமா? சே! இதற்கு ஒரு வழி செய்தாக வேண்டும்", என்று முயல் யோசித்தது. முடிவில் வின்னியின் முதுகை ஒரு அழகான துணியால் மூடி அதன் மீது ஒரு பூத்தொட்டியை வைத்தது.

கங்காவும் ரூவும் வின்னியைப் பார்த்து ஒரு பூச்செண்டைப் பரிசாக அளித்தன. வாசனை தாங்க முடியவில்லை. வின்னி முகர்ந்து பார்த்தது. உடனே 'அச்சூ' என்று பெரிதாகத் தும்மியது. அந்த அதிர்ச்சியில் வின்னியின் முதுகிலிருந்த துணியும், பூத்தொட்டியும் பறந்தன!

பாவம் வின்னி! இரவு பகலாக அந்தத் துவாரத்திலேயே சிக்கியிருந்தது. பகலெல்லாம், ."உடம்பு இளைக்காதா, நான் விடுதலை அடைய மாட்டேனு?" என்று ஏங்கியது. இரவில் அது தன் கவலைகளை மறந்து குறட்டை விட்டு உறங்கியது. மறுநாள் காலையில் எழுந்திருப்பது போலவும், நன்றாகச் சாப்பிட்டுத் தேன் குடிப்பதைப் போலவும் இனிய கனவுகளைக் கண்டது. ஆனால் வின்னி இளைக்கும் வரை கண்டிப்பாக அதற்கு உணவு மறுக்கப்பட்டது.

ஒருநாள் மாலை ஒரு நில அணில் (Gopher) வின்னியிடம் வந்தது. அணிலின் கையில் பெரிய உணவுப் பொட்டலமும், ஒரு ஜாடியும் இருந்தன.

"அதில் என்ன? சிற்றுண்டியா?" வின்னி ஆசையோடு கேட்டது.

"எனக்கு இரவு ஷிஃப்டு வேலை. ஆகவே, கையோடு உணவையும் எடுத்துப் போகிறேன். இப்போதுநான் சாப்பிடும் நேரம் தான்", என்று சொல்லி அணில் பொட்டலத்தைப் பிரித்தது. அதில் ரொட்டி, கஸ்டார்டு, மீன் வறுவல் ஆகியவைகளும் ஜாடி நிறையத் தேனும் இருந்தன. அணில் ஒவ்வொரு பொருளாக எடுத்து வின்னியின் கண் முன்னாலேயே 'லபக், லபக்'கென்று விழுங்கிக் கொண்டிருந்தது. கடைசியில் அது தேன் ஜாடியைத் திறந்ததும் வின்னியால் பரபரப்பை அடக்க முடியவில்லை. "ஆகா,


தேன், தேன்!'' என்று உரக்கக் கூவி, ''ருசி பார்க்க வேண்டும். கொஞ்சம் கொடேன்!''. என்று கேட்டது வின்னி.

வின்னியின் கூச்சலைக் கேட்டு முயல் ஓடிவந்தது. அணிலையும், தேன் ஜாடியையும் பார்த்ததும் முயலுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. சரேலெனத் தேன் ஜாடியைப் பிடுங்கியது.

''நான் ருசி பார்க்கத் தானே கேட்டேன்'', என்றது வின்னி.

''உனக்குப் பதில் நானே அதை ருசி பார்க்கிறேன். ஒரு சொட்டுத் தேன் கூட உனக்குக் கிடையாது. ஞாபகமிருக்கட்டும்'', என்றுசொல்லித் தேன் ஜாடியுடன் முயல் வீட்டுக்குள் மறைந்தது. அணிலுக்கு ஒரே திகைப்பு!

முயல் ஒரு பலகையைக் கொண்டு வந்து வின்னிக்குப் பக்கத்தில் மாட்டியது. அதில் ''இந்தக் கரடிக் குட்டிக்கு உணவுக் கொடுக்காதீர்'' என்று எழுதப் பட்டிருந்தது. ''நீ ஏதாவது சாப்பிட்டால் அப்புறம் இளைக்கவே மாட்டாய். ஜாக்கிரதை!'' என்று எச்சரித்துச் சென்றது முயல்.



நன்றி உணர்ச்சி!

"நாய்க்கு நன்றி உணர்ச்சி அதிகம்ங்கிறதைக் கண்டுபிடிச்சுட்டேன்!"

"எப்படி?"

"நாயி ன்னு ஒருகதை எழுதி அனுப்பினேன். மறுநாளே திரும்பி வந்து விட்டது."

''வின்னி எப்போது விலகும் நான் எப்போது வாசலை உபயோகப்படுத்துவேன்'', என்று முயல் கவலைப்பட்டது. வழக்கம் போல் ஒரு நாள் வின்னியைத் தள்ளும் போது அது சிறிது அசைந்து கொடுத்தது. முயலுக்கு ஒரே குஷி. ராபினுக்குச் செய்தி அனுப்பியது.

காடு முழுவதும் செய்தி பரவியது. வின்னியின் விடுதலையைக் கொண்டாடுவதற்காக நண்பர்கள் ஒன்று கூடினர். எல்லோருடைய முகத்திலும் ஆனந்தம். ''டம் டம் டமர டம்'' என்று ராபின் டமாரத்தை அடித்து வந்தான். கங்கா, ரூ, ஆந்தை, கழுதை, நில அணில், டைகர் ஆகியவை ராபினுடைய தலைமையில் உற்சாகமாகப் பாடிக் கொண்டே அணிவகுத்து நடந்தன.

வின்னியின் கைகள் இரண்டையும் ராபின் பிடித்துக் கொண்டான். ராபினுக்குப் பின்னால் டைகர், ஆந்தை, கங்கா, கழுதை, ரூ, அணில் ஆகியவை ஒன்றன்பின் ஒன்றாகத் தயாராக நின்றன. கயிறு இழுக்கும் போட்டியைப் போல உரக்கப் பாடிக் கொண்டே அவை வின்னியை இழுத்தன. உள்ளேயிருந்து முயல் வின்னியைத் தள்ளியது.

தன்னுடைய முழுச் சக்தியையும் திரட்டி முயல் ஒரு தள்ளுத் தள்ளியது. பீரங்கியிலிருந்து குண்டு பறப்பதைப் போலக் கதவிலிருந்து வின்னி விர்ரென்று ஆகாயத்தில் கிளம்பியது. அது எங்கே இறங்கியது தெரியுமா? மரத்தின் மேலிருந்த ஒரு பொந்தில் வின்னி நுழைந்து சிக்கிக் கொண்டது!

''வின்னி! மறுபடியும் மாட்டிக் கொண்டு விட்டாயா? பாவம்!'' என்று கழுதை இரக்கப்பட்டது.

''பயப்படாதே, வின்னி! நாங்கள் உன்னை இறக்கி விடுகிறோம்'', என்று ராபின் ஆறுதல் சொன்னான்.

மரத்தில் சிக்கிய வின்னிக்கு அதிர்ஷ்டமடித்தது. பொந்திலிருந்த தேன் கூட்டில் தேன் நிரம்பி வழிந்தது. தேனீக்கள் கூட்டை விட்டுப் போயிருந்தன. ஆகவே, நண்பர்களின் பேச்சை வின்னி காதில் வாங்கிக் கொள்ளவே இல்லை. பல நாள் பட்டினிக்குப் பிறகு கிடைத்த அருமையான தேனை வின்னி ஆசையோடு சாப்பிட்டுக் கொண்டிருந்தது.

A. A. MILNE எழுதிய **WINNIE – THE – POOH** என்ற ஆங்கிலக் கதையின் சுருக்கமே இது.





ஓர் அமெரிக்க விளையாட்டு

•குண்டுமணி•

அமெரிக்காவில் வசந்த காலம் வந்தால் இளைஞர்கள் விரும்பி விளையாடுவது பேஸ்பால் ஆட்டம். 26 பெரிய லீக் பேஸ்பால் குழுக்கள் வசந்தகாலப் பயிற்சியாக 'ஆவலோடு இரண்டு மாதங்கள் கொண்டாட்டமாகவே விளையாடும். தலைசிறந்த பேஸ்பால் விளையாட்டுக்காரர்களின் ஆட்டத்தைக் காண ரசிகர்கள் பல்லாயிரக்கணக்கில் கூடுவார்கள். பேஸ்பால் விளையாட்டு 1839—ஆம் வருஷம் நியூயார்க்கிலுள்ள கூபர்ஸ் டவுனில் அப்னர் டபிள் டே என்பவரால் கண்டுபிடிக்கப்பட்டது. முதல் பேஸ்பால் ஆட்டம் 1846—ஆம் வருஷம் ஜூன் 19—ம் தேதி விளையாடப்பட்டிருக்கிறது. நியூயார்க் 9 பேர்கள் அடங்கிய குழு நிக்கர் புக்கர்ஸ் குழுவை 23—1 என்ற ஸ்கோர் கணக்கில் தோல்வியடைய வைத்தது. இந்த விளையாட்டுக்கான சட்டதிட்டங்களை முந்திய வருஷமே உருவாக்கிக் கொடுத்தவர் அமெச்சூர் ஆட்டக்காரர் அலெக்ஸாண்டர் கார்ட்ரைட். இதன் பிறகு பேஸ்பால் குழுக்கள் படிப்படியாக வளர்ந்து 1861—ம் வருஷம் நியூயார்க்கில் மட்டுமே 60 குழுக்கள் இருந்தன. 1869—ம் வருடம் முதல் புரொபஷனல் ஆட்டக் குழுவான சினுட்டி ரெட்ஸ்டாக்கிங்ஸ் அமெரிக்கா முழுவதும் பயணம்செய்து அனைத்து முக்கிய குழுக்களுடன் விளையாடி 65 பந்தயங்களில் வெற்றி வாகை சூடியது. இந்த வெற்றி விஜயம் மற்ற குழுக்களுக்கும் உத்வேகத்தைக் கொடுத்தது.

1876—ஆம் வருஷம் பேஸ்பாலுக்குத் தேசிய லீக் உருவாக்கப்பட்டது.

பேஸ்பால் விளையாட்டில் ஒரு குழுவிற்கு 9 பேர்கள் அடங்கியிருப்பார்கள். பேஸ்பால் ஆட்டமைதானம் டைமண்ட் உருவில் அமைந்திருக்கும். இந்த டைமண்ட் உருவில் நான்கு தளங்கள் (Bases) இருக்கும். முதல்மூன்று

தளங்களில் டிஃபென்ஸ் ஆட்டக்காரர்கள் நிறுத்தப்பட்டிருப்பார்கள். ஒருதளத்தில் காட்சர் நின்று கொண்டிருப்பார். 2–வது தளத்துக்கும், 3–வது தளத்துக்கும் நடுவில் ஒருவர் நிற்பார். அவுட் ஃபீல்டில் 3 டிஃபென்ஸ் ஆட்டக்காரர்கள் கண்காணித்துக் கொண்டிருப்பார்கள். கொஞ்சம் உயரமான மேடையிலிருந்து பிட்சர் பந்தை வேகமாக விட்டெறிவார். பந்தை அடிப்பவர் வேகமாகத் தாக்கிவிட்டு அடுத்த தளத்துக்கு விரைவார். 1,2,3 தளங்களில் உள்ளவர்கள் டைமண்ட் சுற்றில் வலம் வருவர். விளையாட்டுக்காரர் ஒரு தளம் அடைவதற்குள் பந்தைத் தேக்கிய எதிரி ஆட்டக்காரர் பந்தோடு அந்த தளத்தைத் தொட்டு விட்டால் அந்த ஆட்டக்காரர் அவுட் என்று கருதப்படுவார். நான்கு தளங்களும் வலம் வந்தால் ஒரு ரன் என்று கணக்கிடப்படும். ரன்னர் தமது அடுத்த தளம் அடைவதற்குள் டிஃபென்ஸ் ஆட்டக்காரர் காட்ச் பிடித்து விட்டால் ரன்னர் அவுட். பந்தைத் தாக்குபவரை ஒன்றும் எடுக்காமல் அவுட்டாக்குவது தான் ஒரு குழுவின் குறிக்கோள். மூன்று அவுட்டுகளானால், அந்தக் குழு ஆட்டம் இழக்கும். ஒரு இன்னிங் என்பது இரண்டு குழுக்களுமே 3 அவுட்டுக்களைப் பெற்ற பிறகே முடியும். இப்படி 9 இன்னிங்குகள் சேர்ந்து பேஸ்பால் ஆட்டம் ஸ்கோர் கணக்கில் முடிவெடுக்கப்படும்.

அமெரிக்காவில் 35 மில்லியன் அமெரிக்கர்கள் பேஸ்பால் ஆட்டத்தை ஒவ்வொரு வருஷமும் ஆடுகிறார்கள். இந்த விளையாட்டில் கடிகாரக் கணக்கு வைத்து ஆடாததால் அமெரிக்கர்களுக்கு அமோக மோகம். பேஸ்பால் ஆட்டம், திறமைக்கும், அறிவுக்கும் த்ரில்லுக்கும் பேர் போன விளையாட்டு. ஒரு கணக்கில் பேஸ்பால் பந்தயத்தில் ஒரு சிறு தவறு, ஒரு காட்ச், ஒரு பிட்ச் ஒரு மட்டையின் போக்கு ஆட்டத்தின் போக்கையே மாற்றிவிடும். வேர்ல்ட் ஸீரியஸ் பேஸ்பால் போட்டியில் கலந்து கொள்ளும் ஆட்டக்காரர்களுக்கு அதிக வருமானம் கிடைக்கும். டைமண்ட் மோதிரம் கிட்டும். 7 போட்டிகளில் நான்கை வென்ற குழுவுக்கு அமோக வரவேற்பு கிட்டும். அமெரிக்க பேஸ்பால் ஆட்ட நட்சத்திரங்களில் பலர் அந்நியச் சீமைகளில் பிறந்தவர்கள்.

1955–லிருந்து 72 வரை கிளமண்ட் என்பவர் தலைசிறந்த அவுட் ஃபீல்டர் என்ற புகழைப் பெற்றவர். பேஸ் பால் பந்தை வேகமாக வீசுவதற்கான கரத்தைப் பெற்றவர். பந்தைத் தாக்கி ரன் குவிக்கும் வல்லமை படைத்தவர். கிளமண்ட் மனித இதயம் படைத்தவர். மனகுவா நிகரகுவா ஆகிய இடங்களில் பூகம்பம் ஏற்பட்ட போது தாமே விமானத்தில் பறந்து சென்று உணவும், உடையும், மருந்துகளும் வழங்கிக் காத்தவர். போர்ட்டோரிகளில் ஏழ்மையில் பிறந்த கிளமண்ட் செல்வமும் புகழும் சம்பாதித்தவர்.





பேஸ்பால் மட்டை மரத்தினுல் உருட்டை வடிவில் தயாரிக்கப்படுவது. அதன் சுற்றளவு எந்த இடத்திலும் 23.4 அங்குலத்துக்கு மேற்படாமல் இருக்கும் பேஸ்பால் பந்து 5—லிருந்து ஐந்தரை அவுன்ஸ் கனம் இருக்கும்.

ஆட்டம் தொடங்குவதற்கு 5 நிமிடத்திற்கு முன்பே அம்பயர் ஒவ்வொரு குழுவின் ஆட்டக்காரர்கள் வரிசையை இரு பிரதி எடுத்து வைத்துக் கொள்வார். ஒரு பிரதியை அம்பயர் தாம் வைத்துக் கொண்டு மற்ெருரு பிரதியை எதிர்க் குழு மானேஜரிடம் கொடுப்பார். இரண்டு குழுக்களில் எந்தக் குழு அதிக எண்ணிக்கை எடுக்கிறதோ அதுவேவெற்றிக் குழுவாகக் கருதப்படும்.

பேப் ரூத் பேஸ்பால் ஆட்டத்தில் மன்னன். இடது கை பிட்ச்சர். யாங்கி கிளப்பில் இவர் முடிசூடா மன்னர். சிறியவர்களும், பெரியவர்களும் கொண்டாடும் நட்சத்திரம். ரூத்தின் பெருமை கிருச்சான்று: அவர் முதல் ஆண்டிலேயே புகழ் கூடத்தில் (Hall of fame) தேர்ந்தெடுக்கப்பட்டவர் பேஸ்பாலைப் பற்றி ஒரு ரசமான துணுக்கு. ஜனுதிபதி ஹூவரை விட ரூத்திற்கு ஒரு வருடத்தில் அதிக வருமானம். இதைப் பற்றிக் கேட்டபோது ரூத் சொன்ன பதில் ''ஜனுதிபதியை விட சாதனையில் நான் முன் நிற்கிறேன்!''

1970—ஆம் வருஷம் பேஸ்பால் நட்சத்திரங்களைக் கணக்கெடுத்தால், பாதிக்கு மேல் கறுப்பர்களாக இருந்தார்கள்.

பேப்ரூத்தின் சாதனைகளை முறியடித்த ஹென்றி ஆரன் ஒரு கறுப்பர் என்பது அதிசயிக்கத்தக்க விஷயம்! அந்தக் கறுப்பர் சாதனை செய்ததில் அளவற்ற எதிர்ப்பு இருந்ததாம்! லோ ஜிகிரிக் 2130 தொடர்ந்த பந்தயங்களில் விளையாடி ஒரு ரிகார்டு கண்டிருக்கிறர். பேஸ்பால் ஆட்டக்காரர்கள் தங்கள் ரஸிகர்களை மறப்பதில்லை, ரஸிகர்களும் தங்களது அபிமான பேஸ்பால் நட்சத்திரங்களை மறப்பதில்லை! பேஸ்பால் அமெரிக்காவைப் பொறுத்த வரையில் மக்களின் விளையாட்டு!

திருக்குறள் புதிர்-விடை

புதிர்-29

வேல் அன்று வெற்றி தருவது; மன்னவன்
கோல் அதூஉம் கோட்டாதுஎனின் (546)

அரசனுக்கு வெற்றியைத் தேடித் தருவது போரிலே பயன்படுத்தும். வேல் என்று நினைக்கிறீர்கள்? அதுதான் இல்லை. பிறகு?...

அவன் கையிலுள்ள செங்கோல்தான் — அதாவது முறைதவருமல் நேர்மையாக நடத்தும் ஆட்சிதான் அவனுக்கு வெற்றியைத் தேடித்தரும்.

புதிர்-30

அன்புநாண் ஒப்புரவு கண்ணேட்டம் வாய்மையொடு
ஐந்து சால்பு ஊன்றியதூண். (983)

அன்பு, நாணம், பொதுநலம், இரக்கம், வாய்மை — இவை ஐந்தும் சால்பு எனும் மண்டபத்தைத் தாங்கும் தூண்களாகும்.



கடலில் கிடைத்த வைரக்கல்!

• லலிதா •

லட்சுமிக்குக் கோபமும் அழுகையும் பொத்துக் கொண்டு வந்தன. ஆசைப்பட்டு ஒரு ஜோடி கண்ணாடி வளையல் கேட்டதற்கு அப்பா ஏன் இவ்வளவு கோபித்துக் கொள்ளவேண்டும் என்று அவளுக்குப் புரியவில்லை. குபுக்கென்று பொங்கிய கண்ணீரை அடக்க அவள் முகத்தைத் தாழ்த்திக் கொண்டாள்.

அண்ணா வாசுவுக்கு அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. ''என் லட்சுமி, அப்பாவிடம் மாசக் கடைசியில் பணம் ஏது? இப்பப்போய் அவரிடத்திலே வளையல் கேட்டால், கோபிக்காமல் என்ன செய்வார்?'' என்றான்.

''ஆமாம், நான் என்ன பெரிய டி. வி. யா கேட்டேன், இத்தனை கோபிக்க? என் சிநேகிதி கமலாவோட அப்பாவும் நம்ம அப்பா மாதிரித் தான். அவள் வீட்டிலே பார் –டி.வி., பிரிட்ஜ் எல்லாம் இருக்கு. அப்பா கிட்டே சொன்னால், 'நான் அவனாட்டம் ஊரெல்லாம் கடன் வாங்கிக் கண்டதையெல்லாம் வாங்க மாட்டேன். இருக்கிறதை வெச்சிண்டு திருப்தியா இருக்கிறேன்'னு அன்னிக்குப் புத்திமதி சொன்னார். சரி, விடு நான் ஒரு ஜோடி வளையல் தானே கேட்டேன்? அதுக்கு இப்படியா அண்ணா...?''

லட்சுமிக்கு இப்போது புரியவைப்பது ரொம்பக் கஷ்டம் என்பதை உணர்ந்த வாசு, ''சரி, சரி. வா, நாம இரண்டு பேரும் அம்மாவுடன் பீச்சுக்குப் போய் வரலாம்'' என்று சமாதானப்படுத்தினான்.

லட்சுமி அலைகள் கால்களின் மீது வந்து மோதும் சுகத்தில் தற்காலிகமாக வளையல் விஷயத்தை மறந்து சந்தோஷமாகக் குதித்துக் கொண்டிருந்தாள். அப்போது ஒரு பேரலை வந்து அவள் கால்களைத் தொட்டு விட்டுச் சென்றது. 'அட... இதுஎன்ன?. ஏதோ பாட்டில் போல் இருக்கிறதே!'

''...வாசு அண்ணா, இதோ பாரேன்... அலையுடன் இந்தப் பாட்டில் வந்து என் காலில் விழுந்தது.''

வாசு ஆவலுடன் அதை வாங்கிப் பார்த்தான். மிக நேர்த்தியான வடிவில் சீல் வைக்கப்பட்ட பாட்டில்! எவ்வளவோ முயன்றும் அதைத் திறக்க முடியவில்லை. 'சரி, நாம் இதை வீட்டுக்குக் கொண்டு போய்த் திறந்து பார்க்கலாம்' என்று இருவரும் தீர்மானித்தார்கள்.



சர்க்கஸ் பார்க்க!

"எங்கே அண்ணா போறே?"
"சர்க்கஸ் பார்க்க"

''அந்தப் பாட்டிலில் என்ன இருக்குமோ! கண்டதையெல்லாம் என் வீட்டுக்குக் கொண்டு வருகிறீர்கள்? தூக்கி எறியுங்கள்'' என்ற அம்மாவின் வார்த்தையை இருவரும் லட்சியம் செய்யவில்லை.

ஒரு கத்தியை எடுத்துச் சீலை உடைத்து, வாசு பாட்டிலைத் திறந்தான். அதில் ஒரு துணிக்கற்றையும், ஒரு துண்டுக் கடிதமும் இருந்தன. வாசு கடிதத்தைப் பிரித்துப் படித்துப் பார்த்தான். ''இந்தப் பாட்டில் யாருக்குக் கிடைக்கிறதோ, அவர்களுக்கு இதில் ஒரு விலையுயர்ந்த பரிசு இருக்கிறது'' என்று எழுதியிருந்தது. லட்சுமி பரபரவென்று துணிக் கற்றையை அவிழ்த்தாள். அவிழ்த்துப் பார்த்தவள், ''அண்ணா, அண்ணா! இதோ பாரேன் எத்தனை பெரிய கல்...! என்ன பளபளப்பு!'' என்று வியப்புடன் கூறினாள்.

வாசுவுக்கு அந்தக் கல்லின் பிரகாசம் கண்ணைக் கூசிற்று. ''இது என்ன கல் தெரியலியே! அப்பாவிடம் காண்பிக்கலாம், வா'' என்று கூறிக்கொண்டே கல்லை லட்சுமியின் கையிலிருந்து பிடுங்கிக் கொண்டு அப்பாவின் அறைக்கு ஓடினான்.

பேப்பர் படித்துக் கொண்டிருந்த பரமசிவம், இவர்கள் இரண்டு பேரும் ஏன் ஓடி வருகிறார்கள் என்று புரியாமல், ''ஏன், என்ன அவசரம்? எப்பப் பார்த்தாலும் ஓட்டமா?'' என்று கடிந்து கொண்டார்.

அவர் பேச்சையே காதில் வாங்காத லட்சுமியும், வாசுவும், ''அப்பா அப்பா, இந்தக் கல்லைப் பாருங்களேன்''. என்று அவரிடம் கல்லைக் கொடுத்தனர். அதைக் கையில் வாங்கிய பரமசிவத்திற்குத் தூக்கி வாரிப் போட்டது. 'ஏதுடா உங்களுக்கு இது?'' என்று பதற்றத்துடன் கேட்டார்.

''அப்பா எங்களுக்கு இது பீச்சில் கிடைத்தது'' என்று கூறிப் பாட்டிலையும் கடிதத்தையும் அவர் கையில் கொடுத்தனர். கொஞ்ச நேரம் யோசனையில் ஆழ்ந்த பரமசிவம் ''இது ஒரு விலையுயர்ந்த வைரக்கல். விலை மதிப்பு 3, 4 லட்சங்கள் இருக்குமென நினைக்கிறேன். இது உங்களுக்குக் கிடைத்தது ரொம்ப அதிர்ஷ்டம் தான்.''

லட்சுமிக்குத் தலைகால் புரியவில்லை. ''அப்பா இனி மேல் கடன் வாங்காமே டி. வி. பிரிட்ஜ் எல்லாம் வாங்கலாம்ப்பா. இதை வித்தாத் தான் நிறையப் பணம் கிடைக்குமே!'' என்று குதித்தாள்.

வாசுவுக்கு ஒரே ஆனந்தம்! 'இப்ப நிறையப் பணம் கிடைக்கும். நானும் என் நண்பர்களைப் போல விலையுயர்ந்த ஆடைகளை அணிந்து பணக்காரர்களைப் போல் இருக்கலாம்' என்று ஏதேதோ கற்பனைகளில் மூழ்கினான்.

உள்ளே வேலையாக இருந்த அம்மாவும் அப்போது தான் அங்கு வந்து சேர்ந்தாள். அவளுக்கும் அந்த வைரக் கல்லை அப்பா காட்டினார்.

பிறகு அப்பா மூவரிடமும் கவலையுடன் சொன்னார். ''நீங்க மூணு பேரும் இந்தக் கல்லைப் பற்றி யாரிடமும் சொல்லக் கூடாது. சொன்னால் எல்லோரும் பொறாமைப்படுவார்கள். தவிர யாராவது திருடிக்கொண்டு போய் விடுவார்கள். பிறகு நமக்குப் பணம் ஏதும் வராது! நீங்கள் எனக்கு வாக்குறுதி தர வேண்டும்'' என்றார்.

எப்படியாவது வைரக்கல் பணமாக மாறினால் போதும் என்ற நினைப்பில் மூவரும் வாக்குறுதி கொடுத்தனர். அன்று இரவு அந்த வீட்டில் யாருக்குமே சந்தோஷத்தால் பசியேயில்லை. சமைத்த சாப்பாடு அப்படியே இருந்தது. தூக்கமும் சரியாக வரவில்லை. லட்சுமியும் வாசுவும் துண்டுதுண்டாக இன்பக் கனவுகள் கண்டுகொண்டே அரை குறையாகத் தூங்கினர்.

இரவு முழுவதும் கொஞ்சம் கூடக் கண் மூடாதவர்கள் பரமசிவமும் அவர் மனைவி பார்வதியும் தான். ''அந்த வைரத்தை எப்படி விற்பது?

யாராவது அது எப்படிக் கிடைத்தது என்று கேட்டால் பீச்சில் கிடைத்தது என்று சொன்னால் சிரிப்பார்கள்'' என்றார் பரமசிவம்.

''பீச்சில் கிடைத்தது என்று ஏன் சொல்ல வேண்டும்? அது உங்கள் குடும்பச் சொத்து என்று சொல்ல வேண்டியதுதானே?'' என்றாள் பார்வதி.

'விஷயம் தெரியாமல் பேசாதே! என்னைப் பார்த்தால் இத்தனை விலையுயர்ந்த குடும்பச் சொத்து உடையவனாகவா தெரிகிறது? எங்காவது வைரக் கடைக்குக் கொண்டு போனால் நான் இதைத் திருடிக் கொண்டு வந்திருக்கிறேன் என்று நினைத்துப் போலீசுக்குத் தான் போன் பண்ணுவார்கள். ஆனாலும் இதை எப்படியாவது விற்றேயாக வேண்டும்'' என்று சொல்லி யோசனையில் ஆழ்ந்தார் பரமசிவம்.

அடுத்த நாள் காலை குழந்தைகளிருவரும் பள்ளிக்கூடத்திற்கு வேண்டிய வேலைகளை முடித்துக் கொண்டு டள்ளிக்குக் கிளம்பினார்கள். என்றும் 8 மணிக்கே ஆபீஸுக்குக் கிளம்பும் அப்பா எப்போதும் சுத்தமாக உடுத்திக் கொண்டிருக்கும் அப்பா ஆபீஸுக்கு லீவே போடாத அப்பா அன்று தலைகூட வாராமல், ஆபீஸுக்கு லீவு போட்டுவிட்டு உட்கார்ந்திருப்பதைப் பார்த்து லட்சுமிக்கும் வாசுவுக்கும் ஒரே ஆச்சரியம்!

குழந்தைகள் போன பிறகு மறுபடி பரமசிவம் தன் மனைவியுடன் கல்லை எப்படி விற்பது என்று யோசனையிலாழ்ந்தார். யோசிக்க யோசிக்க அவருக்கு மண்டை குழம்பியது.

அப்போது பார்வதி குறுக்கிட்டு, ''நேர் வழியில் இதை விற்க முடியாவிட்டால் ரகசியமாகத்தான் விற்க வேண்டும். திருட்டு நகையெல்லாம் வாங்கும் ஆட்களிடம் போங்களேன்'' என்றாள்.

பரமசிவத்திற்கு ஒரு நிமிடம் மனக கஷ்டப்பட்டது. 'நல்ல வைரம்கிடைத்தும், அதை விற்க முடியவில்லையே. திருடன் போலத் திருட்டு நகை வாங்கும் வியாபாரியிடம் போக வேண்டியிருக்கிறதே!' என்று மனம் சங்கடப்பட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு அதுபற்றி விசாரிக்க வெளியே கிளம்பினார்.

சாயங்காலம் பள்ளியிலிருந்து திரும்பிய குழந்தைகளுக்கு ஏதோ யோசனையுடன் உட்கார்ந்திருந்த அப்பாவைக் கண்டு ஆச்சர்யம். அப்பாவின் உடம்பு அதற்குள் பாதியாக இளைத்து விட்டிருந்தது. கனவில் நடப்பது போல் அம்மாவும் யோசனையுடன் நடந்து கொண்டிருந்தாள். இரண்டு பேருக்கும் என்ன ஆயிற்று என்று இவர்களுக்குப் புரியவில்லை. எது கேட்டாலும் பதிலும் சரியாகக் கிடைக்கவில்லை. எப்போதும் சுறுசுறுப்பாக இருக்கும் அப்பாவும், அம்மாவும் ஏன் இப்படி இருக்கிறார்கள் என்று அவர்கள் தங்களையே கேட்டுக் கொண்டார்கள்.

அடுத்தநாள் மத்தியானம் பரமசிவம் வைரக்கல்லை எடுத்துக் கொண்டு திருட்டு நகைகள் வாங்கும் ஒரு வியாபாரியின் கடைக்குச்சென்றார். கல்லைக் கையில் வாங்கிய வியாபாரியின் கண்கள் ஒரு நிமிடம் பேராசையால் பளபளத்ததைப் பரமசிவம் பார்த்தார். ஆனால், வியாபாரி சமாளித்துக் கொண்டு ''இந்தக் கல் அத்தனை உயர்வானது இல்லை. பட்டைகள் சரியாகத் தீட்டப்படவில்லை. பார்க்கவும் அழகாக இல்லை. இருந்தாலும் இதற்குப் பத்தாயிரம் தருகிறேன்'' என்றான்.

பரமசிவத்திற்கு ஆத்திரம் வந்தது. ''நீ என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். வைரத்தைக் கொடுத்துவிடு. அதை நான் பார்க்கவில்லை'' என்று பிடுங்கிக் கொண்டு வந்து விட்டார். அவருக்கு ஒரே வருத்தம். ஆனாலும், வைரத்தை எப்படியாவது விற்றே தீர்வது என்று முடிவு எடுத்துக் கொண்டார். இரண்டே நாளில் அவர் கவலையில் கிழவன் போலாகி விட்டார். லட்சுமிக்கும் வாசுவுக்கும் அப்பா பழைய அப்பாவாக இருக்க மாட்டாரா என்ற ஏக்கம் வந்து விட்டது. தாங்கள் கொண்டு வந்த வைரக்கல்லுக்கும் அப்பாவின் கவலைக்கும் ஏதோ சம்பந்தமிருக்கிறது என்பது அவர்களுக்குப் புரிந்து விட்டது!

அடுத்த நாள் மாலை. லட்சுமியும், வாசுவும் அப்போது தான் பள்ளியிலிருந்து திரும்பியிருந்தார்கள். ''பார்வதி! பார்வதி!'' என்று கத்திக் கொண்டு அப்பா வாசல் கதவைப் படபடவென்று தட்டுவதைக் கேட்டு, ஓடிப்போய் வாசல் கதவைத் திறந்தவாசு திடுக்கிட்டான். அப்பாவின் தலையிலிருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. அப்பா உள்ளே நுழைந்து, ''பார்வதி, நான் தப்பித்து வந்ததே தெய்வச் செயல். இந்தக் கல்லை விற்பதற்காக ஒரு வியாபாரியிடம் போனேன். அவன் விலை குறைவாகச் சொன்னான். கொடுக்க மாட்டேன் என்று சொல்லி விட்டு வந்து

விட்டேன். வழியில் அவன் ஆட்கள் இதை அபகரிக்க முயன்றார்கள். என் தலையைத் தடியால் தாக்கினார்கள். நல்ல காலம். வைரக் கல்லுடன் தப்பி ஓடிவந்து விட்டேன்'' என்றார்.

அவர் தலையில் இரத்தத்தைப் பார்த்த பார்வதி பதறிப்போனாள். ''முதலில் அந்த வைரத்தைத் தூக்கி எறியுங்கள். உங்கள் உயிருக்கே ஆபத்து வந்து விடும் போலிருக்கிறது'' என்றாள்!

பரமசிவம் அவளை முறைத்துப் பார்த்து விட்டு, பெட்டியைத்திறந்து வைரத்தை அதில் பத்திரப்படுத்தினார். பார்வதி உடனே அவரை வைத்தியர் வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

வாசுவுக்கும் லட்சுமிக்கும் மிகவும் வேதனையாக இருந்தது. லட்சுமிக்கு அழுகை அழுகையாக வந்தது. ''அண்ணா, இந்தக் கல் நம் வீட்டிற்கு வந்ததிலிருந்து கொஞ்சம் கூட யாருக்குமே சந்தோஷம் இல்லாமல் போய் விட்டது...'' என்றாள்.

''ஆமாம். லட்சுமி. இதை ஏன் கொண்டு வந்தோம் என்றிருக்கிறது. அப்பா எவ்வளவு நல்லவர்! நமக்கெல்லாம் எத்தனை நல்ல விஷயங்களைக் கற்றுக் கொடுப்பார்! இப்பப்பார் அவர் எப்படி மாறி விட்டார்?''

''அம்மாவும், அப்பாவும் பழைய படி ஆக மாட்டார்களா என்று இருக்கிறது அண்ணா. எனக்குப்பணம், டீ. வி., பிரிட்ஜ் — எதுவுமே வேண்டாம், அம்மா, அப்பா நல்லாயிருந்தால் போதும்'' என்றாள் லட்சுமி.

கொஞ்ச நேரம் யோசனை செய்த வாசு, ''லட்சுமி! அந்தக் கல்லைத் திரும்பக் கொண்டு போய்க் கடலிலேயே எறிந்து விட்டால் என்ன?'' என்றான்.

''வா, வா, அப்பா அம்மா வருவதற்குள் அதைச் செய்து விடுவோம்'' என்றாள் லட்சுமி.

வைத்தியர் வீட்டுக்குப் போகும் அவசரத்தில் பெட்டிச் சாவியைப் பார்வதி அங்கேயே விட்டிருந்தாள். இருவரும் பெட்டியைத் திறந்துவைரக் கல்லை எடுத்துக் கொண்டார்கள். வீட்டைப் பூட்டிச் சாவியைப் பக்கத்து வீட்டில் கொடுத்தார்கள். கடற்கரை நோக்கி வெகுவேகமாகச் சென்றார்கள். வைரக்கல்லை நீரில் வீசிவிட்டு மனநிறைவுடன் திரும்பினார்கள்.

வீட்டுக்குள் நுழைந்ததும் அப்பாவின் கோபக் குரல் இருவரையும் வரவேற்றது. ''நீங்கள் இரண்டு பேரும் எங்கே போயிருந்தீர்கள்? கல்லை யார் எடுத்தது? எனக்கு இப்போதே தெரிய வேண்டும்?'' என்று அப்பா கத்தினார்.

லட்சுமி, வாசு இருவரும் அமைதியாக, ''ஏன், நாங்கள் தான் எடுத்தோம். அது எங்கிருந்து வந்ததோ, அங்கேயே போய் விட்டது'' என்றார்கள்.

''என்னது! கடலில் போட்டுவிட்டீர்களா? முட்டாள்களே!'' என்று கத்திக் கொண்டு இருவரையும் பரமசிவம் மாறிமாறி அடித்தார். பார்வதி அவரைத் தடுக்க வேண்டியதாகி விட்டது. அப்போதும் வாசுவும், லட்சுமியும் சிறிதும் தயங்காமல், ''அப்பா! எங்களுக்குப் பணம், விலையுயர்ந்த சாமான்கள் எல்லாம் வேண்டாம்ப்பா. எங்களுக்கு எங்கள் நல்ல, உயர்ந்த குணமுடைய பழைய அப்பாதான் வேண்டும்ப்பா. 'பேராசைப் படக் கூடாது. இருப்பதைக் கொண்டு திருப்திப்பட வேண்டும்' என்று அடிக்கடி சொல்வீர்களே. அந்த மாதிரி நீங்கள் பழையபடி ஆக வேண்டும். இந்த வைரக்கல் உங்களை ரொம்ப மாற்றிவிட்டது. அதனாலே நாங்கள் அதைக் கடலிலே எறிந்து விட்டோம் அப்பா. எங்களை இதற்காக மன்னித்து விடுங்கள்'' என்றனர்.

பரமசிவம் ஒரு நிமிடம் அப்படியே திகைத்து நின்றுவிட்டு, இரண்டுகைகளாலும் குழந்தைகளை அணைத்துக் கொண்டார். ''ஆமாம், நான் அறிவிழந்துதான் போனேன். உங்களுக்குப் புத்தி சொல்ல வேண்டிய நானே, புத்தி கெட்டுப் போய் விட்டேன். 'உழைக்காமல் வரும் பணம்திருட்டுக்குச் சமம்', என்று சொல்லும் நானே வைரத்தைக் கண்டு மயங்கி விட்டேன். நீங்கள் தான் என் கண்களைத் திறந்தீர்கள். இந்த மூன்று நாட்களில் நான் எவ்வளவு வேதனை அனுபவித்து விட்டேன்! குழந்தைகளே இனி நான் எப்போதும் போல் உழைத்துச் சம்பாதிப்பேன். இருப்பதைக் கொண்டு திருப்தியடைவோம்'' என்றார். அவர் கண்களில் நீர் அருவியாக வழிந்தது. அது —செய்த தவற்றிற்காக வருந்திய கண்ணீர்!

குழந்தைகள் கண்களிலும், பார்வதியின் கண்களிலும் நீர் பெருகியது— பரமசிவம் பழைய பரமசிவமாக ஆனதை நினைத்து வந்த ஆனந்தக் **கண்ணீர் அது!**

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran



இராமலிங்க அடிகளார்

பிறந்தநாள் : 5.10.1823 மறைந்தநாள் : 30-1-1874

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka

